# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, ஆடி 7, திருவள்ளுவர் ஆண்டு–2045

## 2014 ஜூலை 23, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.”*

*கருத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக்கூடிய சிறந்த சொல்வன்மை செயல்மிக்கவர் கூறும் தொழிலை விரைவாகச் செய்ய உலகமே காத்துக் கொண்டிருக்கும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**225—**

#### மின்மாற்றி

***36203—திரு. மு. முருகன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்திற்கு 11 கே.வி. கீழத்தூவல் மின்பாதை வழியாக 4 மின்மாற்றிகள்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. பெருகிவரும் மின்பளுவைக் கருத்திற்கொண்டு, கூடுதலாக 100 கே.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் கடந்த 10–10–2013 அன்றும், 24–1–2014 அன்றும் நிறுவப்பட்டுள்ளன. தற்போது, முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்திற்குச் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள கீழத்தூவல், மேலத்தூவல், சாம்பக்குளம் மற்றும் மகிண்டி பகுதிகளில் சுமார் 20 கிராமங்கள் உள்ளன. அங்கு வாழும் மக்கள் மழைக் காலங்களில் மிளகாய் பயிர், நெற் பயிர் செய்து வருகின்றனர். கோடைக்காலங்களில் பருத்தி வேலை செய்து வருகின்றனர். இங்கு விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை ஆழ்துளைக் கிணறு மூலமாகப் பெறமுடிகிறது. அங்குள்ள மக்கள் விவசாயத்தையே முழுவதுமாக நம்பி வாழ்கின்றனர். குறைந்த மின்னழுத்தம் காரணமாக, மின்சாரம் இருந்தும் விவசாய பம்புசெட்டுகளை இயக்க முடியாத நிலை உள்ளது. எனவே, கீழத்தூவல், மேலத்தூவல், சாம்பக்குளம் மற்றும் மகிண்டி ஆகிய பகுதிகளில் உள்ள பழைய மின் மாற்றிகளை மாற்றி, கூடுதலாக 100 கே.வி.ஏ. மின்மாற்றிகளை அந்தப் பகுதிகளில் நிறுவி தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கோட்டம், முதுகுளத்தூர் உபகோட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள கீழத்தூவல் கிராமத்திற்கு 11 கே.வி. கீழத்தூவல் மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே மின்பற்றாக்குறை இருந்தது உண்மைதான். அதனால்தான் 100 கே.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, அதன்மூலமாக, மின்பளு சுமை சரிசெய்யப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் அந்தப் பகுதியில் வீட்டு மின் இணைப்புகள் 600. அவற்றினுடைய மின்பளு 290 கே.வி; வணிக மின் இணைப்புகள் 12. அவற்றினுடைய மின்பளு 42 கே.வி; விவசாய மின் இணைப்புகள் 41. அதற்கு 102 கே.வி மின்பளு தேவைப்படுகிறது. 7 மேல்நிலை குடிநீர் தொட்டிகளுக்குத் தேவைப்படும் மின்பளு 15 கே.வி. ஆக மொத்தம் 660 எண்ணிக்கைக் கொண்ட மின் இணைப்புகளுக்கு 440 கே.வி. மின்பளு உச்சபட்சத் தேவையாக இருக்கிறது. அந்தப் பகுதிகளில் அதிகபட்சத் தேவையாக 449 கே.வி. மின்பளுதான் தேவைப்படுகிறது. ஆனால், இன்றைக்கு அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளின் மின்திறன் ஏறத்தாழ 642 கே.வி. அளவிற்கு இருக்கின்றது.

முற்பகல் 10–05

ஏற்கெனவே நான்கு மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு மின்மாற்றிகளுடன், பற்றாக்குறையைப் போக்க இப்பொழுது 100 கே.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 6 மின்மாற்றிகளின் மூலமாக—மொத்தம் 642 கிலோ வாட் மின்பளுவிற்கு அங்கே வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், தேவையோ 449 கிலோ வாட்தான். ஆகவே, தற்பொழுது தேவைப்படும் மின்பளுவின் தேவையைக்காட்டிலும் அதிகமாகவே அங்கே மின் மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மீண்டும் அந்தப் பகுதிகளிலே ஆய்வு செய்து, தற்பொழுது மின் பளு அதிகரித்து இருக்கிறதா என்பதனைக் கருத்திலே கொண்டு—இதற்கு பின்பும், இந்தப் பகுதிகளிலே

கூடுதலாக மின் பளு அதிகரித்திருக்கிறது என்று கண்டறியப்பட்டால்— மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைபோல் புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டு, அந்தப் பகுதிகளில் தடையில்லா மின்சாரம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு ஆவன செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**226—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***4995—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.





**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியில் அரசின் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்கள் இதுவரை இல்லை. மதுரை மாநகரில் அதிகமாக நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பகுதிக்கு அதிகமாக குடியிருக்க வருகின்றனர். மேலூர் நகராட்சிப் பகுதியில் ஆக்கிரமித்திருந்த வீடில்லாத ஏழையெளிய மக்கள் நிறைய பேர் காலி செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் 7 ஏக்கர் அளவில் இடத்தைகூட, அரசு புறம்போக்கு இடத்தை, குடிசை மாற்று வாரியத்திற்கு பெயர் மாற்றம் செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலூர் தொகுதியில் இதுவரை அரசு குடியிருப்பு இல்லாததைக் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலந்துகொண்ட 14-வது நிதிக் குழுக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றது. அப்பொழுது பேரூராட்சிகள், நகராட்சிகளில் வாழ்ந்து வருகின்ற 8.62 இலட்சம் குடிசைவாழ் குடும்பங்களுக்கும் வீடு கட்டுவதற்கு 7,150 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நிதி கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

[2014 ஜூலை 23

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சிவகங்கை மாவட்டம் 1983 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டது. அப்பொழுது அங்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாடலாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கட்டப்பட்டது. ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட குடியிருப்புகள், அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் ஒரே வளாகத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளெல்லாம் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலான காரணத்தால் பல, group, group ஆக இருக்கக்கூடிய குடியிருப்புகளெல்லாம், இன்றைக்குச் சிதிலமடைந்து அங்கே யாரும் குடியிருக்க முடியாத நிலையில் வெளியிலே தங்கிப் பணியாற்ற வேண்டிய நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் குடியிருப்புகளை மாற்றி அமைப்பதோடு, அந்த வளாகத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வு செய்து, பழுதடைந்திருந்தால், பழுதை நீக்கி, குடியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வீட்டு வசதி வாரியம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**227—**

## மேம்பாலம்

*__6530—திருமதி மனோரஞ்சிதம்:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, காமாட்சிப்பட்டி—ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2014 ஜூலை 23]

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காமாட்சிப்பட்டி—ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்து நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

**திருமதி மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கத்தை தமிழ்நாட்டு மக்களுக்குத் தருகின்ற தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, காமாட்சிப்பட்டி—ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட ஆவன செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையான திருத்தணி மலையைச் சுற்றி புறவழிச் சாலையை அமைத்தல் சம்பந்தமான அறிவிப்பை நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையிலே பொது அறிவிப்பாகச் செய்த வாழும் வீர மங்கை வேலு நாச்சியார், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லைப் பெரியாறு அனைத்திலும் முடிசூடிய முதல்வர்களுள் முதல்வர், தமிழகத்தின் மேன்மைக்கு ஒப்பில்லா தாயின் ஓயாத உழைப்பால், சேதாரம் இன்றி 39–க்கு 37–ஐச் சேர்ப்பித்த சிறிதளவும்

[2014 ஜூலை 23

சிதறா சிந்தனைக் கொண்ட சிப்பாய்க் கூட்டத்தை வழி நடத்தும் வீரத் திருமகளாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உயர்ந்தோர், தாழ்ந்தோர், பேதத்தை நீக்கி, வல்லான் அருளோடு வாழும் மக்களை மதத்தால் பார்க்காமல் மனத்தால் பார்க்கும் மாதரசி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, காஞ்சித் தலைவனின் கண்ணியத்தைக் குணத்தில் வார்த்து, வெண்தாடி வேந்தனின் நல்லறிவை நடப்பில் கொண்டு, மக்கள் திலகத்தின் மனிதநேயத்தை மனதில் வைத்து, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மூன்றாவது முறையாக குயில்கள் பாடும் கலைக்கூடம் கண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசாங்கம் அமைத்து, இந்தியாவின் இணையில்லா மாநிலமாய், தமிழ் மண்ணை தலைநிமிரச் செய்திட போர்ப் பரணி பாடிவரும் புரட்சிகளின் உதயம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, திருத்தணி தொகுதி மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் புறவழிச் சாலை அறிவிப்பை வெளியிட்டு, 2015–2016 ஆம் ஆண்டில் அப்பணியைத் துவங்கிட ஆவன செய்துவரும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருத்தணி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான திட்டங்களால் தமிழகம் உலகளவில் உயர்ந்து நிற்கச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே சாமந்தவாடா பகுதியில் உயர்மட்டப் பாலம் அமைத்திட அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள



2014 ஜூலை 23]

அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈத்தாபுரம் பேரூராட்சியிலே, பத்தரைபதியிலே பாம்பூரி வாய்க்கால் செல்கிறது. இரு ஊர்களையும் இணைக்க அந்தப் பகுதியிலே மேம்பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றாண்டு பொற்கால ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு வங்கியின்மூலமாக 150 கோடி ரூபாய் கடன் பெற்று 65 பாலங்களும், 2012–2013 ஆம் ஆண்டு 250 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று, 121 பாலப் பணிகளும், 2013–2014 ஆம் ஆண்டு 256 கோடி ரூபாய் பெற்று, 125 பாலங்களும் ஆக, மூன்று ஆண்டுகளில் நபார்டு வங்கி மூலமாக 642 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று 311 பாலங்கள் கட்டுகின்ற பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில், ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 23

**228—**

**குழந்தைகள் காப்பகம்**

**18591—திரு. க. பாண்டியராஜன்:*

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி, எம். பெருமாள்பட்டி கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி, எம்.பெருமாள்பட்டி கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**229—**

**மகளிர் கல்லூரி**

***37480—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?



2014 ஜூலை 23]

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் மாவட்டத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

**திரு. துரை. மணிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு எழுத்தறிவித்து, உயர்வான, உன்னதமான, உலகம் போற்றும் சமுதாயத்தை உருவாக்கும் பணியினையும் காலத்தால் அழியாத கல்வியையும் கொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப்பாதம் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், கல்வி வளர்ச்சியில், பின்தங்கிய அரியலூர் மாவட்டத்தில் நான்கு அரசு மேல்நிலைப் பள்ளிகளும், எட்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளும், ஓர் அரசு தொடக்கப் பள்ளியும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும் கொடுத்து, எமது மாணவ, மாணவிகளின் ஞானம் தழைத்தோங்கச் செய்த கல்வித் தாயே! மாண்புமிகு அம்மா! என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், மாணவச் செல்வங்களின் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்நிலைக் கல்விக்கு அடுத்தபடியாக கல்லூரிப் படிப்பைத் தொடர அரியலூர் மாவட்டத்தில் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி இல்லாத நிலை உள்ளது. பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தனிக் கல்லூரிகளுக்கு அரியலூர் மாவட்டத்திலிருந்து மாணவிகள் செல்லவேண்டுமானால், 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சிராப்பள்ளிக்கும், 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெரம்பலூருக்கும், 55 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தஞ்சாவூருக்கும் செல்ல வேண்டியுள்ளது. விழிப்புணர்வு மற்றும் எதிர்கால குடும்பத்தை நிருவகிக்கும் பெண்கள், ஆளுமைத் திறனை கல்லூரிக் கல்வியின் வாயிலாகப் பெற அரியலூர் மாவட்டத்தில் பெண்களுக்கென்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு

[2014 ஜூலை 23

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 75 அரசுக் கல்லூரிகளும், 37 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், 139 அரசு நிதியுதவிக் கல்லூரிகளும், 446 சுயநிதிக் கல்லூரிகளும், ஆகமொத்தம், 697 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பின்பு அனைவரும் உயர் கல்வி பெறவேண்டும், தமிழகம் கல்வியில் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நாட்டிற்கு வழங்கி சிறப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய அரியலூர் மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகளிருக்கென்று தனியாக ஒரு கல்லூரி வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பின்பு இரண்டு மகளிர் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் ஒரு மகளிர் கல்லூரியும், அரியலூர் மாவட்டத்திற்குப் பக்கத்திலுள்ள பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் மகளிர்க்கென ஒரு கல்லூரியும் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது பெண்கள், மகளிர் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால் நீண்ட தொலைவிற்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்புதான் இருக்கிறது, ஆகவே, தங்களுடைய மாவட்டத்திலேயே ஒரு கல்லூரி வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 22 மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன, அவற்றில் பெண்கள் மட்டுமே சேர்ந்து படிப்பதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. முழுவதுமாக மாணவிகளே சேர்ந்து படிக்கமுடியும். பொதுவாக இருக்கக்கூடிய கல்லூரிகளிலும், ஆண்கள் படிக்கக்கூடிய



2014 ஜூலை 23]

கல்லூரிகளிலும் மகளிர் சேர்ந்து படிப்பதற்கு வேண்டிய இடவசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. 30 சதவிகிதம் பெண்கள் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், தமிழ்நாட்டில் நந்தனம் ஆடவர் கல்லூரியைத் தவிர மீதம் இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரிகளிலும் பெண்கள் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

முற்பகல் 10–20

**திரு. துரை. மணிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் கல்வி வளர்ச்சியிலே பின்தங்கிய மாவட்டம். கல்வி வளர்ச்சியிலே பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற அந்த மாவட்டத்தில் சென்ற ஆட்சியாளர்கள் காலத்தில் இளம் வயது திருமணங்கள் அதிகம் நடைபெற்றன. இளம் வயதிலே திருமணம் செய்துகொண்டவர்கள், தன் கருவிலே இருக்கின்ற குழந்தை பெண் குழந்தையெனக் கண்டறிந்தால் அழிக்கக்கூடிய மாவட்டமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்டு, தொட்டில் குழந்தைத் திட்டம் கொடுத்து, அந்த மாவட்டத்திலுள்ள பெண்களைக் காப்பாற்றிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அரசு வெளியிட்டு இருக்கின்ற அறிவிப்பிலேகூட பார்த்தால், அரியலூர் தொகுதியிலே இருக்கின்ற அரியலூர் ஒன்றியம் கல்வி வளர்ச்சியிலே பின்தங்கியிருக்கிறது என்று கணக்காய்வு சொல்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு எடுத்துச் சென்று, அரியலூர் மாவட்டத்தில் மகளிருக்கென்று கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[2014 ஜூலை 23

பேசும்பொழுது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அவல நிலைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையில் உயர் கல்வித் துறையைப் பார்க்கின்றபோது கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் மொத்தம் 12 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மட்டுமே தொடங்கினார்கள். அதுவும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக 10 கல்லூரிகளையும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக 2 கல்லூரிகளையும், ஆக மொத்தம், 5 ஆண்டு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 12 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டுமே தொடங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், உடல் ஊனமுற்றவர்கள், பெண்கள் அனைவருக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி கிடைக்க வேண்டும், மேல்நிலைக் கல்வி முடித்தவுடனேயே உயர் கல்வி பெற வேண்டும், இடைநிற்றல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் 37 கல்லூரிகளை இந்த நாட்டிற்கு அர்ப்பணித்து, பெருமை சேர்த்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், புதிய புதிய கல்லூரிகளை உருவாக்குகிறபோது ஒவ்வொரு கல்லூரிக்கும் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமாகச் செலவிடப்படுகிறது. தளவாடங்கள், கணினி மேசைகள் போன்ற தேவைகளுக்காக 30 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளம் போன்றவற்றிற்கு ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 37 கல்லூரிகளுக்கும் கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்துள்ளார்கள். தொடரும் செலவு மற்றும் தொடராச் செலவு போன்ற பல்வேறுபட்ட நிதிச் சுமைகள் இருந்தாலும்கூட அனைவரும் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இது போன்ற திட்டங்களைத் தந்து, நிதியைத் தந்து இன்றைக்கு கட்டடங்கள் கட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரியலூர் மாவட்டத்திற்கு ஒரு பெண்கள் கல்லூரி வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அடிக்கடி வலியுறுத்தி பேசி வருகின்றார்கள். ஏற்கெனவேகூட சட்டமன்றக் கூட்டத் தொடரில் அவருடைய கருத்துகளை எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு



2014 ஜூலை 23]

எடுத்துச் சென்று, அதைப் பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில், அரசு நிலங்கள் இருக்கின்றன. பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இந்தக் காடாம்புலியூர் பகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். பொதுவாக சட்டமன்றத் தொகுதி வாரியாகக் கல்லூரிகளை அமைப்பது என்பது எந்த அளவிற்குச் சாத்தியம் என்று என்னால் சொல்ல முடியாது. எந்தெந்தப் பகுதிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்றதோ அந்தப் பகுதிகளில் கல்லூரி அமைக்க வேண்டும், யாரும் பாதிக்காத வகையில் அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் நோக்கம். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கல்லூரிகளில்—கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் அரசு சார்ந்த கல்லூரிகூட இல்லாமல் இருந்தது—அதுபோன்ற ஒரு நிலை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் தொலைதூரத்திலே, மாநிலத்தின் எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய கன்னியாகுமரியில்கூட ஓர் அரசு சார்ந்த பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தந்திருக்கின்றார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் கல்வியிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம். கல்வியிலே பின்தங்கிய அந்த மாவட்டம் கல்வியிலே ஒரு முன்னேறிய மாவட்டமாக வர வேண்டும் என்ற

[2014 ஜுலை 23

நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் இராமநாதபுரம் பகுதிக்கு 4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து, அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–25*

தமிழ்நாடு உயர் கல்வியில் ஒரு முன்னேறிய மாநிலமாக இருக்க வேண்டும், இந்தியத் திருநாட்டிலே தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறை ஒரு முதன்மைத் துறையாக மாற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், ஏழையெளியோர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவகையில் அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆராய்ந்து பார்த்து, பகிர்ந்து பார்த்து, தொலைதூரங்களில் இருக்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் கல்லூரிகளை வழங்கி வருகிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அவர் தொகுதியில் கல்லூரி தொடங்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. அவருடைய ஆர்வத்தை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**230—**

## புதிய கட்டடம்

*__8543—திரு. இரா. அண்ணாதுரை:__

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை 48–வது வார்டிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2014 ஜுலை 23]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மதுரை மாவட்டம், மதுரை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் நியாய விலைக் கடை எண் 3, 48–வது வார்டு, கீழப்பெருமாள் மேஸ்திரி வீதி, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான பொன்முடி கல்யாண மஹாலில் வாடகையின்றிச் செயல்பட்டு வந்தது. நவம்பர் 2010 ஆம் ஆண்டு பெய்த கன மழையால் கல்யாண மஹால் கட்டடம் பழுதடைந்ததால், சுங்கம் பள்ளி வாசல் தெருவில் உள்ள சமுதாயக் கூடத்தில் நியாய விலைக் கடை சில காலம் வாடகையின்றிச் செயல்பட்டு வந்தது. பின்னர், பொன்முடி கல்யாண மஹால் கட்டடம் இடிக்கப்பட்டு, அதே இடத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தோழர் அண்ணாதுரை அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் ஒதுக்கப்பட்டு, கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டபின் 20–11–2012 முதல் மேற்படி இடத்தில் இக்கடை செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை 48–வது வார்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த இடத்தில் நியாய விலைக் கடை வேண்டுமென்கிற கோரிக்கையை முன் வைத்தேன். அதற்கு என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியும் வழங்கி, கட்டடம் கட்டப்பட்டு தற்பொழுது அந்தக் கடை செயல்பட்டு வருகிறது.

அதேபோல, கடந்த 3 ஆண்டுகளில் 50–வது வார்டு, 64–வது வார்டு, 74–வது வார்டில் இரண்டு கடைகள், இந்த ஆண்டு 36–வது வார்டு ஆழ்வார்புரம் என 5 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதற்கு எனது தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 74–வது வார்டில் மட்டும் கடை கட்டுவதற்கு போதிய இடம் இல்லாத காரணத்தினால் அந்தக் கட்டடம் கட்ட முடியவில்லை. மீதிக் கடைகள், கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை

அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. எனது தொகுதியிலே 31 கடைகள் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டு வருகின்றன. எனவே, நியாய விலைக் கடைகளுக்குப் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், கடந்த 3 ஆண்டுகளில் 1,058 கடைகள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 7,971 கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மொத்தம் 31,844 கடைகளில், மேற்கண்ட கடைகளைப் புதிதாகக் கட்டுவதற்கு நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற அந்தச் சங்கத்தினுடைய நிதியாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிதியாதாரம் மற்றும் சொந்த இடம் இருந்தால் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் அல்லது மாநகராட்சி அல்லது ஊராட்சி, உள்ளாட்சிப் பகுதிகளில் இருக்கின்ற அந்தத் தலைவர்கள் மூலமாக இடம் இலவசமாக பெறப்படுகிறது. மாவட்ட திட்ட முகமையிலோ, மாவட்ட ஆட்சியரிடம் இருக்கக்கூடிய திட்டத்திலோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பெற்றோ இந்தக் கடைகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்பது விதி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கடைகளுக்கு, மாநகராட்சி இடம் கொடுக்கும்பட்சத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். அதற்கான நிதியாதாரங்கள் கிடைக்கும்பட்சத்தில் உறுதியாக இந்த ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மேலும் தெரிவித்துக் கொள்வது, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குத் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும். அதேநேரத்தில் அவர்கள் வசிக்கும் இடத்திலேயே சிரமமின்றிக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நகரும் நியாய விலைக் கடைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரை 30 நகரும் நியாய





விலைக் கடைகளுக்கு வாகனங்கள் வாங்கிக் கொடுத்து, மக்கள் இருக்கிற இடத்திற்கே சென்று நுகர்பொருட்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 30 கார்டு உள்ள ஒரு மலைப் பிரதேசத்திற்கே, ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தூரம் சென்று, மாதத்தில் ஒரு நாள், உணவுப் பொருட்கள் வழங்குகிற ஒரு தலைவிதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 10–30

இதுபோன்ற திட்டம் வேறு எங்கும் செயல்படுத்தப்படுவது கிடையாது. இன்னோர் இடத்தில் 16 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. அந்த இடத்திற்கும், மாதத்தில் ஒரு நாள், அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுசென்று வழங்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரியபடி, துறையின் கருத்துருவைப் பெற்று, மாநகராட்சியில் இடம் கிடைக்கும்பட்சத்தில், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, உறுதியாகக் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் ஏறத்தாழ 72 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள், ஒரு கடைக்கு 700 முதல் 1,800 குடும்ப அட்டைகள் வரை கொண்டு செயல்பட்டுவருகின்றன. அதிலும் குறிப்பாக 19 நியாய விலைக் கடைகள் 1,200 குடும்ப அட்டைகளுக்குமேல் கொண்டு செயல்பட்டு வருகின்றன. எனவே, அவ்வாறு அதிகமான குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்படும் நியாய விலைக் கடைகளைப் பிரித்து, செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக் கடையைப் பிரிக்க

வேண்டுமென்றால் கிராமப்புறப் பகுதியாக இருந்தால் 500 குடும்ப அட்டைகளும், நகர்ப்புறப் பகுதியாக இருந்தால் 800 குடும்ப அட்டைகளும் மற்றும் மலைப் பிரதேசமாக இருந்தால் 400 குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டும் என்பது விதி. பிரிக்கிற இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடைப்பட்ட தூரம் ஒன்றரை கிலோ மீட்டர் இருக்கவேண்டும்; மலைப் பிரதேசமாக இருந்தால் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கடைகளில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் நேர்வில், அந்தக் கடைகளைப் பிரிப்பதற்காக துறையின் கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான இடவசதி வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இடம் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது. இக்கடைகளுக்கு வாடகைக்கு இடம் கொடுக்க யாரும் முன்வருவதில்லை. ரேஷன் கடை வந்துவிட்டாலே, அந்தப் பகுதி மக்களுக்குத் தொந்தரவாகி விடும் என்பதால் வாடகைக்கு இடம் கொடுப்பதற்கு மறுத்துவருகிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, துறையின் கருத்துரு பெற்றுதான், மாண்புமிகு அம்மா அவர்கள் நகரும் நியாய விலைக் கடைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னையில் அதிகமான குடும்ப அட்டைகள் இருக்கிற பகுதிகளான—திருவல்லிக்கேணி நியாய விலைக் கடைக்கும், சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடைக்கும் தற்போது 2 வாகனங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் வசிக்கின்ற பகுதிகளில், ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட தெருக்களுக்குச் சென்று, தங்குதடையின்றி அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நியாய விலைக் கடைகளைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள், இரண்டு கடைகளுக்குமிடையே எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை ஆய்ந்து, அல்லது அதற்காக எதிர்காலத்தில் எவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதைத் துறைரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதற்கான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**231—**

## சொந்தக் கட்டடம்

***22146—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் மற்றும் ஆலங்காடு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூர் மற்றும் ஆலங்காடு ஆகிய கிராமங்களில் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, ஒவ்வோர் இடத்திலும் தேவைப்படும் பொருத்தமான 35 சென்ட் நிலம் இனாம் சாசனமாகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கிடைக்கப்பெறும்பட்சத்தில், அரசு நிதி ஒதுக்கீடு பெற்று கொள்முதல் நிலையம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தனியாரிடம் நெல் விற்பதைத் தவிர்த்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வந்து விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலங்காடு மற்றும் பின்னத்தூர் ஊராட்சிகளில் செயல்பட்டுவரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கீற்றுக்

கொட்டகையால் அமைந்த வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ஆலங்காட்டில் 888 டன் நெல்லும், பின்னத்தூர் ஊராட்சியில் 560 டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

மழைக் காலங்களில் விவசாயிகள் கொண்டுவரக்கூடிய நெல்லைப் பாதுகாக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஆலங்காடு, கோவிலூர், ஜாம்பவனோடை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும், பின்னத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பின்னத்தூர் (தெற்கு), பின்னத்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பயன்பெறும் வகையில் உடனடியாக அந்த இரண்டு இடங்களிலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, காவேரிப் பகுதியில் வாழுகின்ற விவசாயிகளையும், விவசாயத்தையும் காத்து நிற்கின்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் தற்போது 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், திருத்துறைப்பூண்டி தொகுதியில் பிச்சன்கோட்டகம், தில்லைவளாகம், எக்கல், விக்கிரவாண்டியம், நெம்மேலி, குலமாணிக்கம், குறிச்சிமுளை, ஓவர்ச்சேரி, திருக்கடையூர், பாளையூர் மற்றும் வேதபுரம் ஆகிய 11 இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதுதவிர, விவசாயிகள் அறுவடைக் காலங்களில் ஈரப்பதத்துடன் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவரும் நெல்லை உலர்த்த, கொள்முதல் நிலையங்களிலேயே நெல் உலர்த்தும் களங்கள்





கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, திருத்துறைப்பூண்டி தொகுதியில் பாண்டிச்சத்திரம், திருத்தங்கூர், அம்மலூர், உப்பூர், மேலப்பெருமலை, குன்னலூர், சித்தமல்லி, புத்தகரம், பெருவிடைமருதூர், கும்மட்டிதிடல், நல்லூர், கோட்டூர், அக்கறைகோட்டகம் மற்றும் மேலப்பனையூர் ஆகிய 14 இடங்களில் நெல் உலர்த்தும் களங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இரண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு உரிய இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்காக திருத்துறைப்பூண்டி நுகர்பொருள் வாணிபக் கழகம் II, நெடும்பளம் மற்றும் விக்கிரவாண்டியம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் இடத்தை வாங்கி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டவேண்டும். மேலும், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பாமனி ஊராட்சி தோப்படித் தெருவில் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அங்கே நெல் சேமிப்புக் கிடங்கு ஒன்றைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்ட பகுதிகளில் இடம் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

[2014 ஜூலை 23

கட்டுவதற்கு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**232—**

## தொழில் வளம்

***25439—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே ஒரு தொழில் வளாகத்தினை 492 ஏக்கர் நிலப் பரப்பில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்படுத்தி நிருவகித்து வருகிறது. அதில் 71 தொழிற்சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவற்றில் 17 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலும், 21 தொழிற்சாலைகளுக்குக் கட்டுமானப் பணிகள் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களில் சிவகங்கை உட்பட பல்வேறு பகுதிகளுக்குச் சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் சிவகங்கை மாவட்டம் ஒரு தொழில் மாவட்டமாக மாறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனம் படைத்த புரட்சித் தாயே, தமிழ் மண்ணின் மானம் காத்த தன்னிகரில்லாத் தமிழினத் தாயின் தலைமகளே, எங்கள் குலம் காக்க வந்த குல மகளே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

எங்களுடைய சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டமாகும். முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். இங்கு எந்தவிதமான தொழிற்சாலைகளும், தொழில் வளமும் கிடையாது. 444 ஊராட்சிகளும், 12 ஒன்றியங்களும், 3 நகராட்சிகளும், 12 பேரூராட்சிகளும், 7 தாலுகாக்களும் கொண்ட இந்த மாவட்டம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. கடந்தகால காங்கிரஸ் ஆட்சியிலும் மற்றும் கிட்டத்தட்ட 35 ஆண்டுகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள், எந்தவிதமான தொழில் வளர்ச்சியையும் அங்கு கொண்டுவராமல் சிவகங்கை மாவட்டத்தைப் புறக்கணித்திருக்கின்றார்கள். மேலும், அங்கு இருக்கின்ற ஏழையெளிய, இளைஞர்கள் மற்றும் படித்த மாணவ, மாணவியர்கள், எந்தவிதத் தொழிலும் செய்ய முடியாத அளவிற்கு அந்த மாவட்டத்தைப் புறக்கணித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில், எங்கள் மாவட்டத்தில் ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கி. . . (குறுக்கீடு)

முற்பகல் 10–40

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எங்களுடைய மாவட்டத்தை ஒரு தொழில் வளம் மிகுந்த

[2014 ஜூலை 23

மாவட்டமாக உருவாக்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தினால்தான் ஏற்கெனவே அங்கு ஒரு சிப்காட் வளாகம் உருவாக்கப்பட்டு, அங்கு பல்வேறு தொழில்கள் நடந்து வருகின்றன. இன்னும் பல தொழிற்சாலைகளுக்குக் கட்டுமானப் பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே இருக்கின்ற தொகுப்புச் சலுகைகள் தவிர, தென் மாவட்டங்களுக்கென்று தனியாக புதிய சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். மேலும், புதிதாக ஒரு சிப்காட் வளாகமும் ஏற்படுத்தவிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், நிச்சயமாக சிவகங்கை மாவட்டம் தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக வருங்காலத்தில் உருவாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தொடரின்போது, தென் மாவட்டங்களைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டங்களாக உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். தென் மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்ற சூழ்நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் 2,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், அதற்குத் தகுந்தமாதிரி ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே அதைத் தொடங்குவதற்கும், எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தை ஒரு தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2014 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சிப்காட் வளாகம் உருவாக்குவதற்கு 2,700 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. கூடியவிரைவிலே அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு, சிப்காட் வளாகம் ஏற்படுத்தி, அங்கே பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க, அங்கே தொழிற்சாலைகள் உருவாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் வீடியோகான் தொழிற்சாலை வரும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்கான கட்டுமானப் பணிகளெல்லாம் நிறைவுற்றதாகக் கேள்விப்படுகிறேன். அங்கே வீடியோகான் தொழிற்சாலை தொடங்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகங்கையிலே ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது எந்த இடம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடியோகான் நிறுவனம் கிட்டத்தட்ட கட்டுமானப் பணிகளை முடித்துவிட்டது. நிதிநிலை காரணமாக அந்தப் பணிகள் தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியால், இப்பொழுது அதனை மீண்டும் புதுப்பிக்கின்ற வகையிலே, பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பேச்சுவார்த்தை முடிந்ததற்குப் பின்னால், அந்த வீடியோகான் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக சிப்காட் வளாகம் ஏற்படுத்துவதற்கு எங்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது என்று கேட்டிருக்கின்றார்கள். தேர்வு செய்ததற்குப் பின்னால் அதனைத் தெரிவிக்கின்றேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் இடத்தை எடுக்க வேண்டாம் என்று சொன்னால், இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் அந்த இடத்தை எடுங்கள் என்று சொல்கின்றார். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்த இடத்தைத் தேர்வு செய்ததற்குப் பின்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தொழில் துறையில் முதலிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு மிக ஆதாரமான விஷயம், சிவகங்கை போன்ற மாவட்டங்களைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டங்களாக உருவமைப்பது. அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால், இந்த மாவட்டத்திலிருந்து வரும் தொழில்களுக்கு துணிகர நிதியம் – Venture Capital Fund– ஒன்று உருவாக்குவதற்கும், தொழில் முனைப்பு வளர்ச்சிக்கு, தொழில் முனைப்பை வளர்ப்பதற்கு, அங்கிருக்கின்ற கல்லூரிகளில் தொழில் முனைப்பு வளாகங்கள் Incubation Centres உருவாக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தென் மாவட்டங்களுக்கு என்று பல்வேறு புதிய சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். VAT concession பெறுவதற்கு 50 கோடி ரூபாய் முதலீடு என்று இருந்ததை, 10 கோடி ரூபாயாகக் குறைத்து அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் தனியாக புதிதாக நிதியுதவி எதுவும் செய்யமுடியாது. தொழிற்சாலை ஆரம்பிக்க தொழில் முனைவோர்கள் முன்வருகிறபோது, TIDCO மூலம் joint venture போடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது. ஆகையால், அதற்கென்று தனி நிதி ஒதுக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**233—**

## விரிவுபடுத்துதல்

***4663—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது

[2014 ஜூலை 23

முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பதிவுத் துறையிலுள்ள பழுதடைந்த அரசுக் கட்டடங்கள், பழமைவாய்ந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்கள், அனைத்திற்கும் 2011 முதல் படிப்படியாக ஐந்து ஆண்டுக்காலத்திற்குள் சொந்தக் கட்டடம் கட்டுவது என முடிவு செய்யப்பட்டு, அதன்படி 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு அரசாணை (நிலை) எண் 144, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012–ல், 29 சார்பதிவாளர் அலுவலகங்கள், 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித்தனியே சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் இயங்கிவரும் பழைய அரசுக் கட்டடம் முழுமையாக இடிக்கப்பட்டு, ரூ.55 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் முடிவடைந்துள்ளன. மின் இணைப்பு மட்டும் வழங்கப்படவேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலேயே, வேலூருக்கு அடுத்தபடியாக அதிக வருவாயும், அதிக பத்திரப் பதிவும் நடைபெறக்கூடிய சார்பதிவாளர் அலுவலகம் ஆம்பூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகம். அங்கு பழைய அலுவலகம் இருந்தபோது கேட்கப்பட்ட கேள்வி இது. தற்போது புதிய அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். புதிய அலுவலகக் கட்டடத்தில் அலுவலகங்களில் அடிப்படைத் தேவைகளான, குறிப்பாக குடிதண்ணீர் வசதி, காத்திருப்பவர்களுக்கான Waiting Hall அமைத்துத் தரப்படுமா? அந்த அலுவலக வளாகத்திற்குள்ளாகவே பத்திரம் எழுதுபவர்களுக்கான இடம் ஒதுக்கீடு செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆம்பூர் நகரத்திலே முத்திரைத்தாள் தட்டுப்பாடு எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் அதிக விலை கொடுத்து



2014 ஜூலை 23]

முத்திரைத் தாள் வாங்கக்கூடிய சூழ்நிலை அங்குள்ளது. ஏனென்றால், முத்திரைத்தாள் விற்பனை செய்யக்கூடிய உரிமம் பெற்றவர்கள் இரண்டே இரண்டு பேர் மட்டுமே இருக்கிறார்கள். முத்திரைத்தாள் உரிமம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும், பத்திரப் பதிவு அலுவலகம் இருப்பதே தெரியாத அளவிற்கு அந்த அலுவலகத்தைச் சுற்றி ஆக்கிரமிப்புகள் உள்ளன. எனவே, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றித் தரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். இந்தப் புதிய அலுவலகம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் வசதிக்காகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய சார்பதிவாளர் அலுவலகத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கேற்ப, அனைத்து வசதிகளும் அதில் முழுமையாக நிறைவேற்றித் தரப்படும். காத்திருப்போருக்கு Waiting Hall, குடிதண்ணீர் வசதி போன்ற அனைத்து வசதிகளும் முழுமையாக ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், முத்திரைத்தாள் தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். உரிமம் பெற்ற முத்திரைத் தாள் முகவர்கள் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள் என்றார். முத்திரைத்தாள் உரிமம் வேண்டுவோர் யாராவது இருந்தால், பதிவுத் துறையின் தலைவர் (I.G.R.) அவர்களை அணுகினால், நிச்சயமாக அதற்குண்டான வழிவகையும் ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பதிவுத் துறை அலுவலகத்திலிருந்து தகவல் பெறப்பட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கட்டடத்தைச் சுற்றியுள்ள முள் வேலியும், ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, புதிய சார்பதிவாளர் அலுவலகம் புதுப் பொலிவுடன் இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன் நேரமில்லை. (குறுக்கீடு) சரி, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகக் கேட்கிறேன். நீங்கள் மணி அடித்தால்தான் எனக்கு B.P. ஏறிப் போகிறது, வேறு ஒன்றும் இல்லை.

பட்டுக்கோட்டை நகரில் இருக்கக்கூடிய சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. அதற்கு புதிய கட்டடம் வேண்டுமென்று அந்தப் பகுதியிலுள்ளவர்கள் கேட்கின்றார்கள். பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் இருக்கக்கூடிய காலி இடங்களில் புதிய கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தச் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை சார்–பதிவாளர் அலுவலகம் தற்சமயம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தாலுகா அலுவலகத்தில், கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடவசதி இருந்தால், அது பதிவுத் துறையின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த இடத்திற்கேற்ப நிச்சயமாக சொந்தக்



2014 ஜூலை 23]

கட்டடம் கட்டித் தருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**234—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***34771—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மன்னார்கோவில், வாகைகுளம் மற்றும் பிரம்மதேசம் ஆகிய கிராமங்களுக்கு பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில் மற்றும் அயன்திருவாலீஸ்வரம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் உள்ள 17 குடியிருப்புகளுக்குத் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 96 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தக்

[2014 ஜுலை 23

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில் மற்றும் அயன்திருவாலீஸ்வரம் போன்ற ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீரின்றி அமையாது இவ்வுலகம், அம்மா, இனி நீங்களின்றி அசையாது இவ்வுலகம். (மேசையைத் தட்டும் ஒலி) தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழகத்திற்குத் தண்ணீர் பெற்றுத் தந்த தாயின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் நகரம் முதல் குக்கிராமம் வரை தடையில்லாமல் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மணல் கொள்ளையர்களால் ஆற்று மணல் கொள்ளையடிக்கப்பட்டதால் குடிநீர் ஆதாரம் குறைந்துள்ளது. மேலும், இக்கிராமங்களில் புதிய குடியிருப்புகள் வந்துள்ளதால், குடிநீர் மேலும் தேவைப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் மேன்மையான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இப்பகுதிவாழ் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி, சுத்தமான குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த ஆண்டில் மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 83,334 பணிகள் எடுக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 1,848.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அந்தப் பகுதியிலே மேலும் குடிநீர் தேவைப்படுகிறது" என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்



2014 ஜுலை 23]

அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என மக்களுக்காகவே வாழும் மனித தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எனது கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் வட்டாரத்தில் 14 வழிவகைக் கிராமங்கள் பயன்பெறுகின்ற தகடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், 8 வழிவகைக் கிராமங்கள் பயன்பெறுகின்ற முடியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. எனினும், தற்போது ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாக, மேற்படி 22 கிராமங்கள் குடிநீர் பெறுவதிலே பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீர் உறிஞ்சும் கிணறுகளைச் சுத்தம் செய்வதுடன், உறை கிணறுகளையும் அமைத்தால்தான் 22 கிராமங்களுக்கும் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய முடியும். ஆகவே, மேற்படி பணிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்,

[2014 ஜூலை 23

கடந்த ஆண்டில் மட்டும் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊரக, உள்ளாட்சி அமைப்புகள்மூலம் கிட்டத்தட்ட 88,247 பணிகள் எடுக்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 6,255.34 கோடி ரூபாய் செலவில் சிறப்பான முறையில் பணிகள் முடிக்கப்பட்டு, நடைமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது எடுக்கப்பட்ட திட்டங்களுக்கான அரசாணைகள் போடப்பட்ட நிலையில், விட்டுவிட்டு சென்றுவிட்டனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டங்களெல்லாம் எடுக்கப்பட்டு, இப்பொழுது முடிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பயன்பாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**235—**

## கால்நடை மருத்துவமனை

***18565—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, பெருமருதூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள



2014 ஜூலை 23]

பெருமருதூர் கிராமம் மற்றும் அந்தக் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5,000–க்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு, கால்நடை மருந்தகம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

**திரு. மு. ராஜநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புடைமை, அறிவுடைமை, துணிவுடைமை, வன்மை, உண்மை, திண்மை, வானம், தவம், முயற்சி, எதிரிகளே அஞ்சும் பேராண்மை; இவை அனைத்திற்கும் இலக்கணமாய், அகிலம் புகழ வாழும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்குரிய புராதன நகரங்களுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில், பல கோடி நிதியை வாரி வழங்கிய வாழும் வள்ளல், எங்களை வாழ வைக்கும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களே, அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசலுக்கு ரூ.1 கோடி நிதி வழங்கி, நீதி நெறி தவறாமல் ஆட்சி செய்யும் அன்னைக்கு ஆயிரம் கோடி நன்றி மலர்களை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்தில் இருக்கும் பெருமருதூர் கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தாயுள்ளத்துடனும், கருணையுள்ளத்துடனும் அனுமதி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் சார்பாகவும், கால்நடைகளை வைத்து விவசாயம் செய்துவரும் அறந்தாங்கி தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 23

**236—**

## புதிய மாவட்டம்

***5926—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்படும் புதிய மாவட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்யாததால், வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல படை திரண்டு மோதியபோதும், தனிப் படையாய், தானே தலைமை கொண்டு இந்திய அரசியல் வரலாற்றில் முதல் முறையாக, 39 தொகுதிகளில் போட்டியிட்டு, 37 தொகுதிகளில் இமாலய வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய துணைக் கண்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை மூன்றாவது பெரிய இயக்கமாக உருவாக்கி, அரசியல் சிம்மாசனத்திற்கு சிறப்புப் பெற்றுத் தந்த, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.



2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நலத் திட்டங்களை மக்கள் உடனுக்குடன் பெற்றுப் பயனடையவும், மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் மக்களை நேரடியாகச் சந்தித்து குறைகளைத் தீர்க்கவும், அதேபோல் மக்கள் தங்களது குறைகளை மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளிடம் தெரிவித்து உடனடித் தீர்வு பெற்றிடவும், நிருவாகக் காரணங்களுக்காகவும், மாவட்ட எல்லைகளை வரையறுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட எல்லை பிரிப்பிற்கான அரசாணை எண் 279–ல், வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. புதிய மாவட்டம் அமையத் தேவையான பரப்பளவு 2,500 சதுர கிலோ மீட்டர் முதல் 9,000 சதுர கிலோ மீட்டர் என்றும், மக்கள்தொகை 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றும், வருவாய்க் கிராமங்கள் 200 என்றும், வட்டங்கள் 5 என்றும், கோட்டங்கள் 2 என்றும் இருக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது வேலூர் மாவட்டம், தமிழகத்திலே மிகப்பெரிய மாவட்டமாக உள்ளது. வேலூர் மாவட்டம் 6,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் கொண்டதாகவும், மக்கள்தொகையில் 39,28,106 நபர்களைக் கொண்டதாகவும் உள்ளது. 13 சட்டமன்றத் தொகுதிகளும், 3 வருவாய்க் கோட்டங்களும், 11 வருவாய் வட்டங்களும், 20 ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் 742 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கி, வேலூர் மாவட்டம் தமிழகத்திலே மிகப்பெரிய மாவட்டமாக உள்ளது.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கா.கோ. ரமேஷ்:** நிருவாக ரீதியாகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நலத் திட்டங்களை மக்கள் உடனுக்குடன் பெற்றுப் பயன்பெறவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட எல்லையை வரையறை செய்யும்பொருட்டு, திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் ஆகிய 5 வருவாய் வட்டங்களைக் கொண்டு, மக்களுடைய நீண்டநாள்

[*2014 ஜூலை 23*

கனவாக உள்ள திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அமைத்துத் தர வேண்டி, ஏழரை கோடி மக்களின் ஜீவசுருதியாகவும், கருணைப் பெருங்கடலாகவும் உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** எப்போதும் மக்கள் நலன் பெரிது என்ற தாரக மந்திரத்துடன், ஒரு நாளின், 24 மணி நேரத்தில், 20 மணி நேரத்திற்கும் மேலாக அல்லும் பகலும் உழைத்து, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அவற்றை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தி, 'மக்களுக்காகவே நான்' என வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வேண்டிக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன் எப்போதும் இல்லாத முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசு எடுத்து வருகிறது. மேலும், பொது மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள் தொகை மற்றும் நிலப் பரப்பின் அடிப்படையில், வட்டங்கள், கோட்டங்கள் மற்றும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்களைப் பிரிப்பது தொடர்பாக, மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல், அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, புதிய மாவட்டத்தை உருவாக்க, குறைந்த அளவு 2,500 சதுர கிலோ மீட்டர் முதல், அதிக அளவு 9 ஆயிரம் சதுர கிலோ மீட்டரும், மக்கள் தொகையைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு 10 இலட்சம் முதல், அதிக அளவு 30 இலட்சம் வரையிலும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு 200 கிராமங்கள், வட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில், குறைந்த அளவு 5 வட்டங்கள், கோட்டங்களைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு இரண்டு கோட்டங்கள் இருத்தல் வேண்டும்.



*2014 ஜூலை 23*]

மேலும், புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கு, நிலம், கட்டடங்கள், பணியாளர் நியமனங்கள், வாகனங்கள் என்ற வகையில், சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்படுகின்றது. தற்போதுள்ள வேலூர் மாவட்டம், பரப்பளவில் 5,920.18 சதுர கிலோ மீட்டரும், மக்கள் தொகையில் 39,28,106 நபர்களையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை பதினொன்றையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 842–ஐயும் கொண்டுள்ளது. உத்தேசிக்கப்படும் திருப்பத்தூர் மாவட்டம் பிரிக்கப்படுமாயின், அது பரப்பளவில் 2,683.78 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 16,57,235 நபர்களையும், வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை ஒன்றையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை ஐந்தையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 304–ஐயும் கொண்டதாக இருக்கும்.

எஞ்சிய வேலூர் மாவட்டம், பரப்பளவில் 3,236.40 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 22,70,871 நபர்களையும், வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை இரண்டையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை 6–ஐயும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை 538–ஐயும் கொண்டதாக இருக்கும். இந்நேர்வில் உத்தேசிக்கப்படும் திருப்பத்தூர் மாவட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலை நிறைவு செய்யாததால், வேலூர் மாவட்டத்தைச் சீரமைத்து, புதிதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, தமிழக வருவாய்த் துறை வரலாற்றில், முன் எப்போதும் இல்லாத வகையில், ஒவ்வொரு வருவாய்க் கிராமம் வாரியாக, தமிழகம் முழுவதுமுள்ள 16,710 வருவாய்க் கிராமங்களுக்கும், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைதோறும், வட்டாட்சியர் தலைமையில், வட்டாட்சியர் அலுவலகத்தையே ஒவ்வொரு வருவாய்க் கிராமங்களுக்கும் கொண்டு சென்றது 'அம்மா திட்டம்' என்பதனையும், (மேசையைத் தட்டும் ஒலி) 33,13,792 மக்களின் மனுக்களுக்கு, அவர்களின் இருப்பிடங்களிலேயே உடனடித் தீர்வு கண்டிருக்கின்ற, இந்தியாவிலேயே ஒரே அரசு, மாண்புமிகு அம்மா

அவர்களுடைய புனித அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கருணையின் பிறப்பிடம், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**237—**

## அரசு விழா

*__47693—திரு. சு. பவுன்ராஜ்:__

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் தொகுதியிலுள்ள தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.





முற்பகல் 11–05

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், தியாகிகளுக்குப் பெருமையும் சேர்க்கும் தியாகத்தின் திருவுருவமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டம் மற்றும் நிற வெறிக்கு எதிராகவும் 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் நாளன்று காந்தியடிகள் அவர்கள் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் தியாகி தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தனது 15–வது வயதிலே தாயுடன் அப்போராட்டத்திலே கலந்து கொண்டு, சிறை சென்று 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் நாள் வீர மரணம் அடைந்தார். அவரது நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் நினைவு மண்டபம் கட்டப்பட்டு, ஊர் மக்களாலும், அவரது குடும்பத்தினராலும் ஆண்டுதோறும் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டுவருகிறது. எனவே, இந்த விழாவை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் மூலமாக சென்னையில் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் உள்ளிட்ட மொத்தம் 27 நிகழ்ச்சிகளில் அவர்களது திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து, மலர் அலங்காரம் செய்து, மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது. மாவட்டங்களில் தேசியத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தீரன் சின்னமலை மற்றும் மருதுபாண்டியர் நினைவு நாள் நிகழ்ச்சிகள் உள்ளிட்ட 22 நிகழ்ச்சிகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

தில்லையாடி வள்ளியம்மை நினைவாக தமிழக அரசால், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடியில்,

தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் கட்டப்பட்டு, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறைமூலம் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. சென்னை, எழும்பூர், கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 600 ஆவது விற்பனை நிலையம் 1982 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. இந்தச் சிறப்பு விற்பனை நிலையத்திற்கு வீரத் தமிழ் பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெயர் சூட்டப்பட்டு, அவரது திருக்கரங்களால் 27–10–1982 ஆம் ஆண்டு தொடங்கிவைக்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்திலுள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவகத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க 2014–2015 ஆம் ஆண்டு செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர், பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





**238—**

## தரம் உயர்த்துதல்

***29281—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வடவாளம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள புதுக்கோட்டை மாவட்டம், வடவாளம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு பெறப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லப் டப் என்று துடித்துக் கொண்டிருந்த இதயத்தை லாப்டாப் என்று துடிக்க வைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரம் நிறைந்த மனம், ஈகை நிறைந்த குணம், வெற்றிகள் குவிந்த கரம், பள்ளிப் பிள்ளைகளின் பாதுகாவலராகத் திகழ்ந்து, எனது கோரிக்கையினை ஏற்று, பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அன்பே உருவான மாண்புமிகு

[2014 ஜூலை 23

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**239—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

*****4585—திருமதி ஆர். சாந்தி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, காவகாரன்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காவகாரப்பட்டி கிராமம் என்பது எருமபட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,02,793 ஆகும். காவகாரன்பட்டி கிராமத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,510. எருமபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப அங்கு ஏற்கெனவே செயல்பட்டுவருகின்ற 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான அளவில் உள்ள காரணத்தினால் காவகாரன்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.



2014 ஜூலை 23]

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

*முற்பகல் 11–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறமும், தமிழும், ஆலயத் தெய்வங்களும் உடனிருக்க, புண்ணிய பூமியில் ஒவ்வொரு நாளும் புகழ் மாலை சூட, மனித குலம் மகிழ்ச்சியாக வாழ, ஏழை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் இதய சிம்மாசனத்தில் நீங்காத இடம் பிடித்த (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சரித்திர சாதனையைக் கண்ட, வெற்றி கண்ட, இந்தியாவின் மாதர் குல தெய்வமே! தமிழக அரசியல் வரலாற்றிலேயே புதிய அத்தியாயத்தை உருவாக்கி, தீர்வு காண வந்த தீர்க்கதரிசியே! நீதி தவறாத ஆட்சி நடத்தும் தமிழின ஒட்டுமொத்தத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக அவதரித்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே! எத்தனைக் கூட்டணிகள் சேர்ந்தாலும் அந்தக் கூட்டணியைத் தவிடு பொடியாக்கும் மக்கள் சக்தியே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும ஒலி) அம்மா, தமிழகத்தின் திட்டங்களைப் பார்த்து, அயல் நாடுகளே பாராட்டுகின்றன அம்மா! உங்கள் திறமையினால் கண்பட்ட இடமெல்லாம் உங்கள் கைக்கு வந்து சேரும் அம்மா! உங்கள் கால் பட்ட இடமெல்லாம் உங்கள் சரித்திரம் பேசும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவகாரன் பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லையென்றாலும் எருமபட்டி ஒன்றியத்திலுள்ள செவந்திப்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், கொல்லிமலையில் உள்ள சோளக்காட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடித் துடித்த மக்களின், அவர்தம் நாடித்

[2014 ஜூலை 23

துடிப்பை அறிந்து துயர் துடைப்பவர்தான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில் மட்டும் வரலாற்று நிகழ்வாக 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசாணை வழங்கி, அவர்களுடைய பொற்கரங்களாலேயே திறந்து வைத்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது குறிப்பிடுகின்ற செவந்திப்பட்டி, கொல்லிமலை ஆகியவை மலை சார்ந்த பகுதிகளில் வருகின்ற காரணத்தினாலே முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைக்கும், செவந்திப்பட்டிக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன். நன்றி அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2014 ஜூலை 23]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதாரம் சிறக்கவும், வேலைவாய்ப்புகள் பெருகவும், மக்கள் தேவைகள் பூர்த்தி அடையவும் வேண்டுமென்றால், ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொழிற்கல்வியை ஊக்குவிப்பதிலும், தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதிலும், முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

எனது தலைமையிலான அரசால் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளைப் பூர்த்தி செய்ய தொழில் கல்வியைப் படித்தவர்களும், தொழில் திறன் பெற்றவர்களும் தேவை. இதனைக் கருத்தில்கொண்டு சென்ற ஆண்டு பத்து புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவும், மாணாக்கர்களின் விருப்பத்தினை நிறைவு செய்யும் வகையிலும், நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மணிகண்டம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சின்னசேலம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர், கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய ஐந்து இடங்களில் உள்ள இளைஞர்கள் தொழிற்கல்வி பயின்று வேலைவாய்ப்பு பெற்று, பயனடையும் வகையில் நாற்பது கோடியே நான்கு இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று

ஆண்டுகளில் 15 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

மகளிருக்கென அம்பத்தூர், கிண்டி, குள்ளம்பாடி, கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், நாமக்கல், நாகர்கோவில், ஆண்டிப்பட்டி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் இல்லாத கடலூர் மற்றும் கரூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மட்டும் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதிக் குறைவுடன் இயங்கி வருவதாகவும், இதன்காரணமாக மகளிர் பயிற்சி பெறுவதில் அதிக சிரமத்திற்குள்ளாகின்றனர் என்பதும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மகளிர் சிரமமின்றி தொழிற்பயிற்சி பெறும் வகையில், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கைகள் வருங்காலத்தில் தொழில் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குக் கட்டடம், தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான வலைதளம் உருவாக்குதல் மற்றும் புதிய தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நாடுநர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருவோருக்குப் போதிய வசதிகளை அளிப்பதிலும், அவர்களுக்கு விரைந்து வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும், அவர்களுக்குத் தேவையான மருத்துவ





வசதிகளை அளிப்பதிலும் எனது தலைமையிலான அரசு கண்ணுங்கருத்துமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற தங்கள் கல்வித் தகுதிகளைப் பதிவு செய்வதற்கு, 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 32 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நான் மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, பெரும்பாலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல், இட நெருக்கடியில் செயல்பட்டு வருவது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றிற்கு ஒரு தீர்வு காணும்பொருட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில் முதற்கட்டமாக, 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. தற்போது 18 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதன்தொடர்ச்சியாக, 2014–2015 ஆம் நிதியாண்டில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் வீதத்தில் 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரம், விழுப்புரம், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் தருமபுரி ஆகிய 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிற்சாலைகள் சட்டம் 1948–ன்கீழ் புதிய தொழிற்சாலைகளைப் பதிவு செய்து உரிமம் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட சுமார் 42 ஆயிரம் தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பித்தல் போன்ற பணிகளில் நடைமுறையில் உள்ள சிரமங்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அரசு சேவைகள், தொழில் முனைவோருக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு உரிமம் வழங்கும் பணி இனிமேல் வலைதளம் அதாவது Web Portal மூலம் மேற்கொள்ளப்படும் என்பதையும் தொழில் வழிப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விவரங்கள், கோட்பாடுகள் மற்றும்

புதிய யுக்திகள் ஆகியவற்றையும் தொழிலாளர், தொழிற்சாலைகள், நிருவாகத்தினர் மற்றும் பொதுமக்கள் வலைதளம்மூலம் தெரிந்துகொள்ளலாம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றைச் செயல்படுத்தும் வகையில், 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்படும்.

*முற்பகல் 11–20*

கடந்த 3 ஆண்டுகளில் தொழிலாளர்களின் மருத்துவச் சேவையினை மேம்படுத்தும் வகையில் 20 புதிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களைத் துவங்கியும், 33 புதிய பகுதிகளைத் திட்டத்தில் சேர்த்தும், 1,83,537 தொழிலாளர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் திட்டப் பயன்கள் பெற எனது தலைமையிலான அரசு வழிவகை செய்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில், 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 205 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்மூலம் காப்பீட்டாளர்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், கூடங்குளம், நாரணமங்கலம், திருச்செந்தூர், ஓசூர் (சிப்காட்–II), நெய்வேலி மற்றும் சிவகாசி (நாரணபுரம்) ஆகிய 6 இடங்களில் நான்கு கோடியே தொண்ணூற்றைந்து இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக மருந்தகங்கள் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டச் செயலாக்கத்திற்காக 19 மருத்துவர்கள் உள்ளிட்ட 96 பணியிடங்கள் உருவாக்கப்படும். இதன்மூலம், 15,884 தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் அதிக வசதிகளுடன் காற்றோட்டமான சுற்றுச்சூழலில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்படவும், தொழிலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வலைதளம்மூலம் அனைவரும் தெரிந்துகொள்ளவும், தொழிலாளர்கள் கூடுதல் மருத்துவச் சேவையினைப் பெறவும், வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).





## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. காலையில்தான் கொண்டுவந்து கொடுத்தீர்கள். Agenda-வில் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை, காலையில்தான் கொண்டு வந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

## 4. கவன ஈர்ப்பு

### ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்படாமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கவன ஈர்ப்பு எடுத்திருக்கிறேன் அல்லவா? உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2013 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்படாதது குறித்து" மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

[2014 ஜூலை 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கூறுவது ஏதும் அவைக் குறிப்பில் ஏறாது. வேறு அலுவலுக்குப் போய்விட்டேன், உட்காருங்கள். காலையில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உடனே இப்போது raise பண்ண முடியாது. நீங்கள் உட்காருங்கள். பதில் வரட்டும் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். எதுவும் record ஆகாது. உட்காருங்கள் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு குறித்த முழு விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## அறிக்கை

ஆசிரியர் தகுதித் தேர்வு என்பது குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (Right of Children to Free and Compulsory Education Act–2009) 2009–ன்படியும், 23–08–2010 நாளிட்ட தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (National Council for Teacher Education) அறிவிக்கையின் அடிப்படையில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள், அரசு அதிகாரம் பெற்ற அமைப்பால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமெனவும், தேர்ச்சிக்குரிய தகுதி மதிப்பெண் 60% இருக்க வேண்டுமெனவும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 181, நாள் 15–11–2011–ன்படி தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதித் தேர்வினை நடத்தும் முகவாண்மையாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கப்பட்டு, அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம் 12–07–2012 அன்று தகுதித் தேர்வை நடத்தியது. இதில் 7,14,526 நபர்கள் தேர்வு எழுதியதில், 2,448 நபர்கள் (0.34 சதவீதம்) தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி விகிதம் மிகக் குறைந்த அளவே இருந்ததால், ஆசிரியர் தேர்வு வாரியம் 14–10–2012 அன்று துணைத் தகுதித் தேர்வினை நடத்தியது. இதில் 6,43,095 நபர்கள் தேர்வு எழுதியதில், 19,261 (2.99 சதவிகிதம்) நபர்கள் தேர்ச்சி பெற்றனர். தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற தகுதியுள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



2014 ஜூலை 23] [திரு. கே.சி. வீரமணி]

2013 ஆம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் 17–8–2013 மற்றும் 18–8–2013 ஆகிய தேதிகளில் தகுதித் தேர்வினை நடத்தியது. இதில் இடைநிலை ஆசிரியர் பணிக்குத் தகுதித் தேர்வு (தாள்–I) எழுதிய 2,62,187 நபர்களில் 12,596 நபர்கள் தேர்ச்சி பெற்றனர். பட்டதாரி ஆசிரியர் பணிக்கு தகுதித் தேர்வு (தாள்– II) எழுதிய 4,00,311 நபர்களில் 16,922 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதற்கிடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பதிலுரையில், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்ட 60 விழுக்காடு மதிப்பெண் என்பதை இட ஒதுக்கீட்டுப் பிரிவை சேர்ந்தவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 விழுக்காடு குறைத்து நிர்ணயம் செய்யப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 25, பள்ளிக் கல்வித் (ஆ.தே.வா.) துறை, நாள் 6–2–2014–ல் 60 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடு குறைத்தும், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முகமதியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகிய தேர்வர்களுக்குத் தேர்ச்சி மதிப்பெண் 55 விழுக்காடு அல்லது 82 மதிப்பெண்கள் என நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இச்சலுகையினால் 17–8–2013 மற்றும் 18–8–2013 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தாள் ஒன்றில், 17,996 நபர்களும், தாள் இரண்டில் 25,187 நபர்களும் ஆக மொத்தம், 43,183 நபர்கள் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருந்த 29,518 நபர்களுடன் கூடுதலாகத் தேர்ச்சி பெற்ற 43,183 நபர்கள் ஆக மொத்தம் 72,701 நபர்களின் கல்விச் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணி ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான ஒரு சில விடைக்குறிப்புகள் சரியானது அல்ல என பணிநாடுநர்களால் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன.

[திரு. கே.சி. வீரமணி] [2014 ஜூலை 23

அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவிற்கு கொண்டுவர அரசால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை ஆகிய நீதிமன்றங்களில் இவ்வழக்குகள் முடிவுற்ற நிலையில், தீர்ப்புகள் பெறப்பட்டவுடன் ஆசிரியர் தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிடவும், பணி நியமனம் வழங்கவும் ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் தொடர் நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட அந்த விவர அறிக்கையை முழுமையாக வாசித்தேன். அதிலிருந்து, நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான்கு வினாக்களை, சந்தேகங்களை மட்டும் எழுப்ப விரும்புகின்றேன். முதலாவதாக, இடஒதுக்கீட்டுப் பிரிவாளர்கள் என்ற முறையில், மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மதிப்பெண் வழங்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே தொடர்ச்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாக இந்த அவையிலே வலியுறுத்தினோம். மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மிகச் சரியான சமயத்தில் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு 60 சதவிகித மதிப்பெண்ணில் 5 சதவிகிதம் தளர்வு செய்வதற்கு அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கு பின்னர், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களினுடைய விகிதம் மளமளவென்று அதிகரித்திருக்கிறது. ஆக, இந்த முடிவிற்கு பின்னர், 2,000 முதல் 3,000 ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஒரு சமூகத்தின் கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் இந்த 5 சதவிகித மதிப்பெண் கிடைத்ததால் கிட்டத்தட்ட 40,000 பேருக்குமேல் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆகவே, அந்த முயற்சி என்பது சரியானது, எடுத்த நடவடிக்கை சரியானது என்பதை தேர்ச்சி பெற்ற எண்ணிக்கை நமக்குக் குறிப்பிடுகிறது.



2014 ஜூலை 23] [செல்வி கே. பாலபாரதி]

முற்பகல் 11–25

இப்பொழுது எழுந்திருக்கக்கூடிய வினா என்னவென்றால், மாநில அரசு தற்போது 10 ஆயிரம் காலிப் பணியிடங்களை அறிவித்திருக்கிறது. ஆனால், தேர்ச்சி பெற்றவர்கள் கிட்டத்தட்ட 72,701 பேர். அவர்களின் கல்விச் சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி முடிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நீதிமன்றம் weightage மதிப்பெண் கொடுத்து, அவர்களை இந்த மொத்த எண்ணிக்கையிலிருந்து தேர்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். என்னுடைய கருத்தும், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தும் என்னவென்றால், அந்த weightage மதிப்பெண்ணில் மற்ற பிரிவெல்லாம் சரியாக இருக்கிறது. அவர்களின் +2 மதிப்பெண்ணை கணக்கில் எடுக்கிறீர்கள். நாம் படித்த காலத்திலே மாவட்டத்திலே முதல் மாணவர் யார் என்று கேட்டால், ஒரு மாணவர்தான் வருவார். ஆனால், இப்பொழுது மாவட்டத்திலே 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பில் முதல் மாணவர் யார் என்று கேட்டால், கிட்டத்தட்ட 200 பேர் எழுந்து வருகிறார்கள். எல்லோருமே அதிகபட்ச மதிப்பெண் எடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக கேள்வியைக் கேளுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** பள்ளிக் கல்விக்கும், பட்டக் கல்விக்கும் இடையில் இருக்கக்கூடிய ஒரு சிறுவர் பருவம் அது. ஆகவே, அந்தக் காலத்தில் எடுத்த மதிப்பெண்ணைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே ஆசிரியர் பணியில் முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகள், இந்நாள் படைவீரர்களின் மனைவி, மொழிப் போர் தியாகிகளின் வாரிசுகள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகள், கலப்புத் திருமணம் செய்தவர்கள், விதவைகள், அரசுக்கு நிலம் வழங்கியவர்கள் என இப்படிப்பட்ட சில பிரிவினருக்கு, கடந்த காலத்தில் ஆசிரியர் பணியில் முன்னுரிமை வழங்கப்பட்டது. இப்பொழுது தேர்ச்சி பெற்று அதிக மதிப்பெண் பெற்றிருக்கக் கூடியவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேற்றே உங்களுக்கு அந்த விதியைச் சொன்னேன். 2 கேள்விகளைக் கேளுங்கள். நீங்கள் ஒருவர்தான் கேட்டீர்கள் என்பதால் free ஆக விடுகிறேன். பேசி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** அவ்வளவுதான், முடிந்தது. ஆகவே, அவற்றைக் கணக்கில்கொண்டு நீங்கள் எடுப்பீர்களா? அப்படி எடுத்தால்தான் ஒரு சமூகம் சார்ந்த அனைவருக்குமான பணி கிடைப்பதற்கு உதவி செய்யும் என்பதோடு, முதுநிலை பட்டதாரி தேர்ச்சி பெற்றவர்கள் 2,851 பேர், அவர்களுக்கும் இறுதிப் பட்டியல் வழங்கப்படாமல் இருக்கிறது. இது குறித்தும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டத் திட்டங்களை, அதாவது அரசின் விதிமுறையையே மாற்றி அமைக்கின்ற வகையிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அது அரசினுடைய விதிமுறைகளுக்கு policy–ல் இருக்கக்கூடிய காரணத்தால், policy–ஐ மாற்றி அமைக்கக்கூடிய அந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனவத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ஆகவே, நீங்கள் Weightage கணக்கிடும்போது +1, +2 மதிப்பெண்ணை கணக்கில் எடுத்துதுக்கொள்ளகூடாது என்ற கோரிக்கையை விடுத்திருக்கிறீர்கள். ஆனால், அரசால் வெளியிடப்பட்ட அரசாணையில் +2 மதிப்பெண்ணுக்கும் weightage கணக்கிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பாகவே தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய ஆசிரியர்களைக் கூடிய விரைவில், அதாவது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள்ளாக பணியில் அமர்த்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக கிட்டத்தட்ட 80 வழக்குகள் நீதிமன்றத்திலே தொடுக்கப்பட்டிருந்தன. அந்த வழக்குகளெல்லாம் இப்பொழுது முடிவுற்று, அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்திருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின் நகலைப் பெற்று அரசாணைகளை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 3. தகவல் கோரல்–தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்) நான் Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். நீங்கள் திடீரென்று பிரச்சினை எழுப்பினால் எப்படி? (குறுக்கீடுகள்) நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சந்திரகுமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். நாளைக்குப் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நான் Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) இப்போது Zero hour இல்லை. அது முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் இப்பொழுது raise பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. நாளைக்கு raise பண்ணலாம், உட்காருங்கள். திரு. பாலகிருஷ்ணன் நாளைக்குக்கூட raise பண்ணலாம், உட்காருங்கள். இதில் ஒரு முன்மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டாம். நான் ஏற்கெனவே Agenda–வின் அடுத்த அலுவலுக்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. இரண்டாவது item, மூன்றாவது item நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இவ்வளவுதூரம் நான் சொன்னதற்குப் பிறகு நீங்கள் பிடிவாதமாக பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

இல்லை, இல்லை, சரியில்லை. (குறுக்கீடுகள்) நான் நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன். நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னால் நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் (குறுக்கீடுகள்)

என்ன சந்திரகுமார்? (குறுக்கீடுகள்) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அது எனது ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் நான் ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஒன்று எடுத்துள்ளேன். பதில் வர வர ஒவ்வொன்றாக வரிசையாக எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பதில் வர வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் வித்தியாசம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) பதில் வர வர ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) தினசரி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். உட்காருங்கள்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்விப் புரட்சியையும், தொழில் புரட்சியையும் உருவாக்கி, உலகத்தரம் வாய்ந்த கல்வியால் தமிழகத்தினை அறிவுசார் தலைநகரமாகவும், தொழில் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பெரிதளவில் ஈர்க்கப்பட்டு பல புதிய தொழில்கள் துவங்கப்பட்டு தமிழகத்தினை புதுமைகள் படைக்கும் மையமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டு, செயலாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது முதல் நூற்று நாற்பத்தைந்தாவது வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.





## 6. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை**

-----

**(அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழின் உயற்சியும், முழு நிலவின் குளிர்ச்சியும், எத்திசையும் புகழ்மணக்கும் எழுச்சியும் ஒருசேரக்கொண்ட ஒப்பில்லாத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் துரோகிகளைத் தகர்த்தெறிந்து, துஷ்ட நிக்ரஹ இஷ்ட பரிபாலனம் செய்யும் தமிழர்தம் குலதெய்வம், ஊனாகி, உணர்வாகி, உளமாகி, வளமாகி உயர்வினும் உயர்வாகி எங்கள் உயிரினும் உயிராகிய உத்தமத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) எரிமலையின் தீப்பிழம்பாய் எதிரிகளைச் சுட்டெரிக்கும் இனமான தீபம், தெய்வமணித் திருக்கரமாய் ஏழைகளை அரவணைக்கும் இன்னிசை நாதம், தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடாது கட்டிக்காக்கும் தன்மானச் சிங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) தனிமனித இராணுவமாய் எதிரிகளைத் தகர்த்து, துகளாக்கி, எதிர்க்கட்சிகளைத் தூள்தூளாக்கி, தரைமட்டமாக்கி 39–க்கு 37–ல் வாகை சூடிய வெற்றித் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி தமிழர்களின் உரிமைக் குரலாய், 1½ கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாய், 1½ இலட்சம் போக்குவரத்துத் தொழிலாளர்களின் வாழ்விலே ஒளியேற்றும் தங்கத் திருவிளக்காய்த்

திகழும் கருணை தீபம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, பாரம்பரியமும், பெருமையும், பண்பாட்டுச் சிறப்புமிக்க இப்பேரவையில் நான்காம் முறையாகப் போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திடவும், விவாதங்களுக்கு பதிலளித்து பேசிடவும் நல்வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் பாதக் கமலங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.65,84,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1264, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1561, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1744, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1643, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2297, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 692, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் தொகுதிக்குட்பட்ட முளகுமூடு பேரூராட்சி, சோழிபோர்விளையில் புதிதாக R.T.O. அலுவலகப் பணிகள் துவங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1055, திரு. சி.எச். சேகர்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடித்துவிட்டு வாகனம் ஓட்டும், ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1201, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட எல்லைகள் சுருங்கியுள்ள நிலையில் மாவட்ட பர்மிட்டுகள் பெறும் ஆட்டோக்கள் பக்கத்து மாவட்டங்களில் நுழையும் தேவையுள்ளதால் பர்மிட் எல்லையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1358, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் G.P.R.S. கருவி பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1498, திரு. ர.ம. பாபு முருகவேல். (குறுக்கீடு) வெட்டுத் தீர்மானத்தை மட்டும் படியுங்கள். கொடுத்திருப்பதை மட்டும் படியுங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மோட்டார் வாகன விபத்தில் அரசு வாகனங்களின்மீது தொடரப்படும் வழக்குகள் நீண்ட நாட்கள் நிலுவையில் உள்ளன. எனவே, இந்நிலை மாற ஒரு புலனாய்வு அமைப்பை அமைத்து, அதன்மூலம் இந்த வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1818, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலை விபத்துகளில் சிக்கிய வாகனங்களை அவ்விடத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த கூடுதலாக மீட்பு வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1963, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2729, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆட்டோ கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,38,61,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.65,84,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.907,82,17,000/–, மூலதனக்



கணக்கில் ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 869, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1311, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1617, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1787, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2298, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 259, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் அரசுப் பேருந்து விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கு மாவட்ட நிருவாகம் இழப்பீடு வழங்காத காரணத்தால், 166 பேருந்துகளை ஜப்தி செய்து நீதிமன்றம் முடக்கி வைத்திருப்பதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பாதிப்புகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 465, திரு. கு. நல்லதம்பி.



**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழும்பூர் தொகுதி, 104–வது வட்டம், மண்டலம்–8 பிரிக்ளின் சாலையில் மேகலா தியேட்டர் பேருந்து நிறுத்தத்தில் தனி நபர்கள் வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்வதால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 561, திரு. ஆர். ராமமூர்த்தி.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல கிராமங்களிலிருந்து விக்கிரவாண்டி வட்ட மையத்திற்கு வந்து செல்கிற வகையில் புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 595, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பிரச்சினை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 610, திரு. இரா. அண்ணாதுரை.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை நகரப் பேருந்து 35 கி.மீ. தூரம் இயங்குவதை 50 கி.மீ. தூரம் வரை அதிகரித்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 897, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் பேருந்துகள் செல்ல முடியாத வழித் தடங்களில் மினி பஸ் இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 968, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி களப்பாளிலிருந்து



சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 982, திரு. ஏ. லாசர்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியகுளம் தொகுதி, தேனியில் அரசு விரைவுப் போக்குவரத்துப் பணிமனை விரைவில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1011, திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டையிலிருந்து சென்னை செல்லும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1173, திரு. சி.எச். சேகர்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டியில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பேருந்து பணிமனை பணியினை விரைந்து துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களுக்கு அந்தந்தத் தேதிகளில் சம்பளமும், பஞ்சப்படி உயர்வுகளையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1346, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் மினி பஸ் இயக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1500, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவிக்கப்பட்ட மோனோ இரயில் திட்டம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1660, திரு. ப. பார்த்தசாரதி.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்பேடு–சாலிகிராமம் வழியாகப் புதிய பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1672, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய அரசின் இரயில்வே துறையைப் போன்று குழந்தைகளுக்கான பயணச்சீட்டு பெறும் வயதை 3–லிருந்து 5 ஆக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1769, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2012–2013 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட வத்திராயிருப்பு போக்குவரத்துப் பணிமனையை உடனே செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1813, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதாசலம் தொகுதியில் மங்கலம்பேட்டை சின்னபரூர், எடச்சித்தூர், எம். புதூர் ஆகிய கிராமங்களுக்குப் புதியதாக நகரப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1916, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1964, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2259, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா. சொல்லுங்கள். அதிலே இருப்பதை மட்டும் படியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாற்றுத் திறனாளிகள் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்யலாமென்ற அரசாணை பேருந்துகளில் பார்வையில் படும்வகையில் எழுதப்பட்டிருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2158, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சியில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2535, திரு. வீ.பி. நாகைமாலி.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலிருந்து சென்னைக்கு அரசுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2670, திரு. க. பீம்ராவ்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூரிலிருந்து இயக்கப்படும் பேருந்துகள் குறித்தும், அவை செல்லும் பாதைகள் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,15,07,000/ – மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/ – குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே



கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தே.மு.தி.க.வின் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

***திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புமிக்க சட்டப் பேரவையில் எனக்கு போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தேசிய முற்போக்கு திராவிட கழக நிறுவனர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே அதிகப் பேருந்துகள் ஓடும் மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படுவதற்காகப் பல விருதுகளைப் பெற்றிருக்கின்றன. அதேவேளையில் பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை அரசு இயக்கி வருகிறது. தற்பொழுது, டீசல் மூலம்தான் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கும்விதமாக எரிவாயு பயன்படுத்தி, முதற்கட்டமாக சென்னை மாநகரில், அரசுப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் பழைய பேருந்துகளை இயக்கி வருகிறது என்று மாண்புமிகு

---

@ 497 முதல் 606 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பாருங்கள். மூன்றாண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 4,649 புதிய பேருந்துகளை அவர்களுடைய திருக்கரங்களால் மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கின்றார்கள். படிப்படியாக, புதிய பேருந்துகளை அந்தந்தப் பகுதிக்கேற்ப, தகுதியான பேருந்துகளை இயக்குவதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 6,000 பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். அதிலே 4,649 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கென்று இயக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012. . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். இல்லை, இல்லை திரு. வி.சி. சந்திரகுமார், உங்கள் கட்சி உறுப்பினர் பேசட்டும்.

**திரு. அ. பாஸ்கர்:** பழைய பேருந்தை மாற்றி புதிய பேருந்து இயக்கப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசுவார், நீங்கள் குறுக்கே பேசினால் எப்படி? (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. பாஸ்கர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** 2012–2013 ஆம் ஆண்டு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு மக்கள் வசதியாக வந்து செல்ல குளிர்சாதன வால்வோ பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தற்பொழுது, தருமபுரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்கப்படவில்லை. ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த 4 அல்ட்ரா டீலக்ஸ் விரைவுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், . . .

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டதூரம் பயணிக்கக்கூடிய மக்கள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் அல்ட்ரா டீலக்ஸ் பேருந்தின் சிறப்பான சேவைகளைப் பெறவேண்டுமென்பதற்காகத் தமிழக போக்குவரத்துத் துறையின் வரலாற்றிலேயே இல்லாத வகையிலே, 477 புதிய பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்களுக்காக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் இருக்கின்ற பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்றுவருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல மாவட்டத் தலைநகரங்களிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்குவது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதல்கட்டமாக மதுரை மற்றும் கோவையிலிருந்து இயக்குவதற்குண்டான நிதியினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அதற்குண்டான பணிகளும் நடைபெற்றுவருகின்றன. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தப் பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு, கொடியசைத்து துவக்கிவைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, தொப்பூர், ஜருகு, நாகர்குழலி, இண்டூர் வழியாக ஒகேனக்கல்லுக்குப் புதிய பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்ணாகரம், பி.அக்ரகாரம், இண்டூர், அதகப்பாடி மற்றும் தருமபுரி பகுதிகளில் பள்ளி நேரங்களில் அதிக அளவில் மாணவர்கள் பேருந்தில் ஏறுகின்றார்கள். அந்நேரங்களில் பேருந்தில் இடம் இல்லாத காரணத்தால் மாணவர்கள் படியில் தொங்கிக்கொண்டு செல்லும் நிலையுள்ளது. அப்படி தொங்கிக்கொண்டு செல்லும்போது, கீழே விழுந்து, டயரில் சிக்கிக்கொண்டு இறக்க நேரிடுகிறது. குறிப்பாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நேரங்கள் மற்றும் வேலைக்குச் செல்கின்ற நேரங்களிலும் அதிகப்படியான பேருந்துகளை இயக்கவேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த மூன்றாண்டுகளில் மட்டும் 1,436 புதிய வழித்தடங்களை மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினருடைய தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 4 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். 13 வழித்தட நீட்டிப்புகளையும் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலிருந்து பள்ளிக் கல்வித் துறையிலிருந்தோ அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலிருந்தோ எந்தக் கோரிக்கையும் வரப்பெறவில்லை. கூடுதல் பேருந்து கோரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலிருந்து கோரிக்கை வரப் பெற்றால், உடனடியாக பள்ளி நேரத்தில் பேருந்துகளை இயக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் பள்ளியைச் சுட்டிக்காட்டினால், ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, இண்டூரில் 25–2–2014 அன்று தனியார் பேருந்தில் விஜி, த/பெ. சங்கர் என்ற மாணவன் பேருந்திலிருந்து தவறி விழுந்து டயரில் சிக்கி இறந்துவிட்டார். இந்தக் காரணத்தினால் பள்ளி நேரங்களில் கூடுதலாகப் பேருந்துகளை இயக்கவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

2011–2012–ல் 89.10 இலட்சம் கிலோ மீட்டர், 2012–2013–ல் 88.44 இலட்சம் கிலோ மீட்டர், 2013–2014–ல் 89.78 இலட்சம் கிலோ மீட்டர், 2014–2015–ல் 91.20 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் பேருந்துகளை இயக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. சுமார் 3 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் அதிகப்படுத்தி இயக்கியும்,



தொடர்ந்து 3 ஆண்டுகளாக 2 கோடியே 10 இலட்சம் பேர் பயணம் செய்திட அடித்தளமாகவும் செயல்பட்டுவருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளாகப் பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை 2 கோடியே 10 இலட்சமாகத்தான் இருக்குமா? இந்த எண்ணிக்கை கூடவோ குறையவோ செய்யாதா? இதில் சுமார் 1,500 பேருந்துகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்துக் கழகத்திற்கு 2011–2012–ல் 1,791.64 கோடி ரூபாய் இழப்பு, 2012–2013–ல். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளுடைய எண்ணிக்கை என்பது விடுமுறை நாட்கள், பண்டிகை தினங்கள், சிறப்பு தினங்கள் என்று பல்வேறு தினங்களில் சில நாட்களில் கூடும், சில மாதங்களில் கூடும் அல்லது குறைவு ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சேலம் போக்குவரத்துக் கழகத்தினை கடந்த 2, 3 மாதங்களில் மட்டும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஏப்ரல் மாதத்தில் 5 கோடியே 4 இலட்சம் பேர் பயணம் செய்திருக்கிறார்கள். சேலம் போக்குவரத்துக் கழகத்தில் மே மாதத்தில் மட்டும் 5 கோடியே 26 இலட்சம் பேர் பயணம் செய்திருக்கிறார்கள். பயணிகளுடைய எண்ணிக்கையில் இந்த இரண்டு மாதங்களில் மட்டும் வித்தியாசம் உள்ளது. பயணிகளின் எண்ணிக்கைக் கூடியிருக்கிறது. ஆக, பண்டிகை தினங்கள் என்றவகையில், சில மாதங்களில் வந்தால் பயணிகளின் எண்ணிக்கை உயர்கின்றது. போக்குவரத்துச் சேவை, பேருந்துச் சேவை என்பது தரமான சேவையாக, மக்களுக்குப் பயனுள்ளச் சேவையாக இருக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.829.91 கோடி இழப்பு என்று சொன்ன நீங்கள், 2013–2014 ஆம் ஆண்டில் எவ்வளவு கோடி இழப்பு என்பதைச் சொல்லவில்லை. மேலும், ஆட்சிக்கு வந்த ஆறு மாதத்தில் பேருந்துக் கட்டணத்தை இரண்டு

மடங்காக உயர்த்தியும், இழப்பு ஏற்படுகிறது என்றால், நிருவாகத் திறமையின்மைதான் காரணமாக இருக்குமென்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பைத் தயவுசெய்து முழுமையாகப் படித்துப் பார்க்கவேண்டும். இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களில், தமிழகத்திற்கு அருகில் இருக்கின்ற கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் எத்தனை பைசா கட்டணத்தில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன?

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் அரசுப் பேருந்துகள் 1 கிலோ மீட்டருக்கு 42 பைசா என்று மிகக் குறைந்த கட்டணத்தில் இயக்கப்படுகின்றன. குறைந்தக் கட்டணத்தில் பேருந்தை இயக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 9–ஐப் பாருங்கள். தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டருக்கு 42 பைசா. ஆனால், ஆந்திரா மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 59 பைசாவும், கேரளா மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 64 பைசாவும், கர்நாடகா மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 59.75 பைசாவும், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 90 பைசா என்ற அளவிலும் பேருந்துக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

அடித்தட்டு மக்கள், ஏழையெளிய மக்கள் மற்றும் சாமானிய மக்கள் சிறந்த முறையில், பேருந்து வசதிகளைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இந்தியாவிலேயே குறைந்த கட்டணத்தில், கிலோ மீட்டருக்கு 42 பைசா கட்டணத்தில் பேருந்துகளை இயக்க உத்தரவிட்டிருக்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.



**திரு. அ. பாஸ்கர்:** ஒவ்வோர் ஆண்டும் சுமார் ரூ.500 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் விலை உயர்வை ஈடுகட்ட அரசு நிதி வழங்கி வருகிறது. பேருந்துக் கட்டண உயர்விலும் கூடுதல் வருமானம் வரும். அப்படி இருந்தும், போக்குவரத்துக் கழகங்கள் ஏன் நஷ்டத்தில் இயங்குகின்றன? 2013–2014 ஆம் ஆண்டில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.43 என்றிருந்த டீசல் விலையை கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு ரூ.21 உயர்த்தி ரூ.64 என்று நிர்ணயித்தது. இந்த டீசல் விலை உயர்வால், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நலிவடைந்து விடக்கூடாது, பேருந்துகளை முழுமையாக இயக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ819 கோடியை டீசல் மானியமாக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட டீசல் விலை உயர்வால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குண்டான செலவு ரூ.1,160 கோடி, சம்பளம் உயர்வு ரூ.1,140 கோடி, சுங்க வரி –Toll Gate– வசூல் கட்டணம் ரூ.37 கோடியிலிருந்து ரூ.118 கோடியாக உயர்ந்திருக்கிறது. இப்படிப் பல்வேறு வகைகளிலே பேருந்து இயக்கச் செலவுகள் அதிகரித்திருக்கின்றன. டீசல் விலை உயர்வால், உதிரிப் பாகங்களின் விலைகளும் உயரும் நிலை உள்ளது. அதை முற்றிலுமாகக் குறைக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு நிதிகளை வழங்கியுள்ளார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகங்களையும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களையும், தமிழக மக்களையும் காக்கின்ற கடவுளாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களுக்குக் கட்டணம் நிர்ணயம் செய்ததுபோல், ஆம்னி பேருந்துகளுக்கும் கட்டணம் நிர்ணயம் செய்து,

பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டில் புதிய பணிமனைகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. புதிய பணிமனைகள் இதுவரை எத்தனை கட்டப்பட்டுள்ளன. சோளிங்கர் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்படும் என்று 2012–2013 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால், சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், பாண்டியநல்லூர் என்ற பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டும், தேவையில்லாத காரணத்தைக் கூறி அங்கு இன்னும் பணிமனை துவங்கப்படாமல் உள்ளது. அந்தப் பகுதியில் பணிமனை கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

எனது நண்பர் திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு தடம் எண் 180 UD அரசு விரைவுப் பேருந்தில் 16–1–2014 அன்று பயணம் செய்ய கடந்த 2–1–2014 ஆம் தேதியன்று முன் பதிவு செய்தார். அங்கு தனியார் நிறுவனமான Radiant Info. மூலம் முன்பதிவு செய்யப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2006 முதல் 2011 வரை புதிதாகத் தொடங்கப்பட்ட பணிமனைகளினுடைய எண்ணிக்கை 10 மட்டுமே. அதில், சென்னை மாநகரில் தொடங்கப்பட்ட பணிமனை பூஜ்ஜியம். பேருந்துகளுடைய எண்ணிக்கைக்கேற்ப புதிய பணிமனைகளைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மூன்று ஆண்டுகளில் மட்டும் 68 பணிமனைகளைஅரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் 9 பணிமனைகளுக்குண்டான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா



அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சி இருக்கின்ற பணிமனைகளுக்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறையின் செயல்திறன் கையேடு பக்கம் எண் 32–ல், ஒவ்வொரு பணிமனைக்கும் எவ்வளவு இடம் போன்ற விவரங்களை நீங்கள் தயவு செய்து பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறைக்கு வழங்கியிருக்கின்ற சாதனைத் திட்டங்கள் அனைத்தும் செயல்திறன் கையேட்டில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், பேசுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. முன்பதிவு செய்யப்பட்ட பயணச் சீட்டுக்குக் கட்டணமாக 465 ரூபாய் செலுத்தப்பட்டது. 16–1–2014 ஆம் தேதியன்று புறப்பட்டு வரும் அவருடன், அவருடைய உதவியாளரும் வந்தார். அந்தப் பேருந்திலேயே அவருக்கு பயணச் சீட்டு வழங்கப்பட்டது. அதற்குக் கட்டணமாக 440 ரூபாய் வசூலிக்கப்பட்டது. தனியார் நிறுவனத்தின்மூலம் முன்பதிவு செய்ததற்கும், போக்குவரத்துக் கழகத்தின் பேருந்திலேயே பயணச் சீட்டு பெற்றதற்கும் ரூ.25/– வித்தியாசம் உள்ளது. அந்த 25 ரூபாய் தனியார் நிறுவனத்திற்குச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. இதைப் போக்குவரத்துக் கழகமே செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 14 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். மோனோ இரயில் திட்டம் சென்னை மாநகரில் செயல்படும் என்று 2011–2012–ல் அரசு அறிவித்தது. முதற்கட்டமாக 111 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பணிகள் துவக்கப்பட்டு, படிப்படியாக 300 கிலோ மீட்டர் தூரம் வரை விரிவுபடுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் 111 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்தெந்த வழித்தடங்களில் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அவற்றில் முதல் கட்டமாக 3 வழிதடங்களின் பணிகளும் இரண்டாவது

கட்டமாக 4–வது வழித்தடத்தின் பணிகள் மேற்கொள்ளப்படும் எனச் சொல்லப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2013–2014–ல் 3 வழிதடங்களில் 57 கிலோ மீட்டருக்கான மோனோ இரயில் பாதை அமைப்பதற்கான ஆய்வுப் பணிகளும், முன் விவர ஆய்வும், தொழில்நுட்ப ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மோனோ இரயில் திட்டப் பணிகளுக்கான ஏல நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், நீங்கள் நேற்று வழங்கிய கொள்கை விளக்கக் குறிப்பில் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சொன்னவற்றை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோனோ இரயில் திட்டம் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்க எண் 88–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான மோனோ இரயில் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி வடிவம் பெறக்கூடிய நிலையில் இருக்கின்றது. மிக விரைவாக ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்த மோனோ இரயில் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சி நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லும் சொல்லை வெல்லும் சொல் இவ்வுலகில் இல்லை. இந்தத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய திட்டம், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். அதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.



முற்பகல் 11–55

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யும் பணம் பல வகைகளில் நிருவாகத்தால் சொந்தச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று வைப்பு நிதி, கடன் சொசைட்டிக்காகப் பிடித்தம் செய்யப்பட்ட பணம், எல்.ஐ.சி.–யில் கட்டுவதற்காகப் பிடித்தம் செய்யப்பட்ட பணம், பென்சன் நிதிக்குச் செலுத்த வேண்டிய பணம், புதியவர்களிடம் பிடித்து பென்சனுக்குக் கட்ட வேண்டிய பணம், பணிக்கொடை பணம் என இப்படித் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணத்தைச் செலுத்தாமல் நிருவாகம் பயன்படுத்திக் கொண்டது. எனவே, இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற அந்த நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, பணிபுரிகின்ற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, முறையாக செலுத்தப்படுகின்ற நிதி எதுவாக இருந்தாலும், உரியமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று அனைத்து மேலாண்மை இயக்குநர்களுக்கும் உத்தரவிடப்பட்டு, அதற்குண்டான பணிகளை அவர்கள் சிறப்பாகச் செய்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர், ஓட்டுனர்கள், நடத்துனர்கள் பணி நேரம் முடிந்தும், மீண்டும் அதிகாரிகள் அவர்களைத் தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபடுத்துகிறார்கள். இதனால் மன உளைச்சலுக்கும், உடல் சோர்வுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இதனால் அதிக விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அவர்களைப்

பணி நேரத்தில் மட்டும் பணி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேனும் கருத்துகள் இருந்தால் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எந்த இடத்திலும் அதிக நேரம் பணி செய்யச் சொல்லி ஊழியர்களை வலியுறுத்துவதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தேவையான ஓட்டுனர்கள், நடத்துனர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், பணி நிரந்தரம் செய்யப்பட்டு, பணிகள் வழங்கப்பட்டு அவர்களுக்குண்டான தேவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். எந்த ஒரு தொழிலாளியையும் பணி செய்ய அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கியிருக்கின்ற பணிகளைப் போக்குவரத்துக் கழகச் சேவைகளை மிகச் சிறப்பாக செய்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். உரையை ஆரம்பித்து 20 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டன.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக வேலைக்குச் சேரும் தொழிலாளர்கள் 240 நாட்கள் பணி முடித்தவுடன் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஆனால் பல ஆண்டுகளாக ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பதிலிப் பணியாளர்களாகப் பணியாற்றிய 9,157 பேரை நிரந்தரம்



செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், அவர்களோடு சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பணி வழங்கப்பட்ட 8,406 Reserve Conductors, 7,049 Reserve Drivers, Technical staff 2,387 பணியாளர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரேமாதிரியான நிலை ஆணை வேண்டும். விழுப்புரம் மண்டலத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மிகைப் பணி செய்யும்போது ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. ஆனால் தருமபுரி மண்டலத்தில் மிகைப் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபாய் 15 வழங்கப்படுகிறது. போக்குவரத்துத் தொழிலாளர்கள் பணி செய்யும்போது இறப்பு ஏற்பட்டால் அவர்களுடைய வாரிசுகளுக்குப் போக்குவரத்துக் கழகத்தில் அவர்களின் தகுதிக்கு ஏற்ப பணிகள் வழங்க வேண்டும். பொது மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் சேவை செய்யும் துறையாக உள்ளது போக்குவரத்துத் துறை. விபத்து ஏற்பட்டால் நீதிமன்றத்தின் மூலமாக இழப்பீடு கொடுக்க வேண்டியுள்ளது. இழப்பீடு தர இயலாதபோது பேருந்துகளை பேருந்து நிலையங்களில் ஜப்தி செய்கிறார்கள். தருமபுரி மண்டலத்தில் மட்டும் சுமார் 40 பேருந்துகள் ஜப்தி செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் விபத்து இழப்பீடாக வழங்கப்பட்ட தொகை 463 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 3

வருடங்களில் 386 கோடி ரூபாய் விபத்து இழப்பீட்டு நிவாரணமாக வழங்கப்பட்டு, பேருந்துகள் மீட்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டுக்கு இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மண்டலத்தில் உள்ள 40 பேருந்துகள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதைத்தான் நான் சொன்னேன். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணம் வசூல் செய்வதைப் போல் தனியார் பேருந்துகளிலும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. அரசுப் பேருந்துகளை விட தனியார் பேருந்துகளில் பயணம் செய்யவே பயணிகள் விரும்புகிறார்கள். அரசுப் பேருந்துகளின் உள்கட்டமைப்புகள் பராமரிப்பின்றி உள்ளதால் பயணிகள் பயணம் செய்ய சிரமப்படுகிறார்கள். எனவே, தனியார் பேருந்துகளுக்குப் பயணிகள் காத்திருந்து பயணம் செய்கிறார்கள். எனவே, தனியார் பேருந்துகளுக்கு நிகராக அரசுப் பேருந்துகளின் உள்கட்டமைப்பை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சேலம் அரசுப் போக்குவரத்துக் கழக மண்டலத்தில் பயணிகளின் எண்ணிக்கையை இங்கே சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய பேருந்துகளை வழங்கி மக்களுக்குச் சேவை செய்வதால், எந்தப் பயணியும் தனியார் பேருந்துகளை நாடிச் செல்வதில்லை. இன்றைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கிய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யலாம் என்கிற இலட்சியத்தோடு பயணிகள் பயணம் செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. பாஸ்கர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அரசின் கொள்கை முடிவால் உச்ச வயது வரம்பை மாற்றியமைக்கும்போது அவ்வலுவலகத்தில் பதிவு மூப்பு மாறுபடுகிறது. இதனால் மக்கள் பாதிப்படைகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. பாஸ்கர், நீங்கள் 37 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** காலிப் பணியிடங்களை நிரப்பும்போது வயது உச்ச வரம்பை அதிகப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்கு அரசு தனது முழு ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும். இந்திய விமான நிலைய ஆணையக் கோரிக்கையின் அடிப்படையில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி தெரிவித்து உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** இதில் வேடிக்கை என்னவென்றால் 2011 ஆம் ஆண்டு முதல், கடந்த நான்கு ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரே மாதிரியாக சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பணிகளெல்லாம் எப்போது முடிவுக்கு வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விமான நிலைய விரிவாக்கம்

என்பது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. விமான நிலைய விரிவாக்கத்திற்கு இடங்கள் தேவையென்று சொல்கின்றபோது, வருவாய்த் துறை மூலமாக அந்த நிலங்களைப் பெற்று, ஒப்படைப்புச் செய்கின்ற பணிகள் மட்டுமே போக்குவரத்துத் துறையின்மூலமாகச் செய்யப்படுகின்றன. விமான நிலைய விரிவாக்கம் என்பது முழுக்க, முழுக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டில், மத்திய அரசைச் சார்ந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

***திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிமேல் வெற்றி சேர்க்கும், தமிழகத்திற்கு வலிமைச் சேர்க்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2014–2015 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, விவாதத்தில் கலந்து கொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்த தொழிலாளர்களின் காவல் தெய்வம், தொழிலாளர்களின் விடிவெள்ளி, அன்புத் தாயை பணிந்து வணங்குகின்றேன்.

சாதனைகள் பல படைத்து அதில் வெற்றியும் கண்ட தங்கத் தலைவி, தங்கத் தாரகையின் பாதம் தொட்டு வணங்குகின்றேன். தமிழர்களின் பாரம்பரியமிக்க ஆடையான வேட்டியை எல்லா இடங்களிலும் அணிந்துகொண்டு செல்லலாம் என்று தமிழர்களின் மானங்காத்த தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பை 36 ஆண்டுகளாகப் பெற முடியாத தீர்ப்பை அயராது பாடுபட்டு, பெற்று, நடைமுறைப்படுத்தி, தென்மாவட்ட விவசாய மக்களின் வயிற்றில் பால் வார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நாளை நமதே, நாற்பதும் நமதே, என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குப் பலித்தது. மக்களைப் பார்த்து "நீங்கள் செய்வீர்களா" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் வேண்டுகோள் விடுக்க, "செய்வோம்" என மக்களவைத் தேர்தலில் மக்கள் மகத்தானத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், அயராது உழைத்து, 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் பிரச்சாரத்திற்குச் சென்று, மக்களைச் சந்தித்து, கழகத்தினுடைய சாதனைகளையும், கழகத்தினுடைய திட்டங்களையும் எடுத்துக்கூறி, மத்தியில் காங்கிரஸ் கூட்டணிக் கட்சி செய்த ஊழல்களை அம்பலப்படுத்தி, அவர்கள் தமிழ்நாட்டிற்கு இழைத்த துரோகங்களைப் பட்டியலிட்டு மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடந்துகொண்ட தி.மு.க. – காங்கிரஸை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

நூறாண்டு பேசும் மூன்றாண்டு சாதனைகள் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் எழுச்சிமிகு தலைமையில், மக்கள் என்றுமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பக்கம் என்பதை நிரூபிக்கின்ற வகையில், 37 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திலே மூன்றாவது பெரிய கட்சியாகத் தமிழ்நாட்டினுடைய வரலாற்றை உருவாக்கித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரிய பேருந்துகள் செல்ல முடியாத பகுதிகளுக்கு மக்கள் எளிதாகத் தங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் தமிழக அரசின் வரலாற்றில் முதல் முறையாக மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பாக 100 சிற்றுந்துகளை சென்னை மாநகரத்தில் இயக்கி, மக்களுக்கு உதவியிருக்கின்றார்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, கடந்த 26–6–2014 வரை 4,642 புதிய

பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் துவக்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1,436 புதிய வழித் தடங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஆண்டுதோறும் டீசலுக்கும், இலவச பஸ் பாஸ்களுக்கும் 850 கோடி ரூபாயை மானியமாக வழங்கியதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்கள் நலம் பெறும் வகையில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தொழிலாளர்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய சம்பளப் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்றும் இன்றைக்குத் தொழிலாளர்கள் மத்தியிலே சிலர் விஷமப் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்தச் சம்பளப் பேச்சுவார்த்தை நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் தி.மு.க. ஆட்சிதான். 2010 ஆம் ஆண்டு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தொழிற்சங்கங்களுடைய அங்கீகாரத்திற்கான தேர்தல் நடைபெற்றது. அந்த அங்கீகாரத் தேர்தலில் மைனாரிட்டி தி.மு.க. தொழிற்சங்கமான எல்.பி.எப். பங்கேற்று, தேர்தல் நடத்தினார்கள். 2010 ஆம் ஆண்டு வரை தேர்தலிலே பங்கு கோண்டு யாரெல்லாம் 10 சதவிகித வாக்குகளைப் பெறுகின்றார்களோ அவர்கள் எல்லாம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளலாம் என்பதுதான் இருந்த நடைமுறை. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 25-1-2010 அன்று தேர்தல் நடைபெற்றது. உயர் நீதிமன்றம் சென்று தி.மு.க. தொழிற் சங்கம் அங்கீகாரத் தேர்தல் நடத்த தீர்ப்பைப் பெற்று வந்தது. இந்திய உணவுக் கழகத்தால் நடத்தப்படுகின்ற தேர்தலை மேற்கோள் காட்டி ஒரு தீர்ப்பினைப் பெற்று வந்தார்கள். அதாவது Food Corporation of India–க்கு தேர்தல் நடந்தது. Food Corporation of India என்பது இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய ஒரு கழகம். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகம் என்பது ஒரு மாநிலத்திலே இருக்கக்கூடிய கழகம். ஆகவே, அந்தத் தீர்ப்பு இந்தத் தேர்தலுக்குப் பொருந்தாது என்று சொல்லி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கப் பேரவையின் சார்பாக உச்ச நீதிமன்றத்திலே நாங்கள் வழக்கு தொடுத்தோம்.



எல்லா தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. உச்ச நீதிமன்றம், தேர்தல் நடத்தலாம், ஆனால் அந்தத் தேர்தலினுடைய முடிவை நீங்கள் அறிவிக்கக்கூடாது, அதை உச்ச நீதிமன்றத்திற்குத்தான் அனுப்ப வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. ஆனால், அன்றைக்கு தேர்தல் நடத்தி ஒரே சங்கம் என்கின்ற நிலையை எடுத்து, அவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், தேர்தல் நடத்திய அதிகாரிதான் இதை முடிவு செய்வார் என்று அறிவித்துவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

பிற்பகல் 12–10

கடந்த காலங்களில் தி.மு.க. ஆட்சி வருகின்றபோதெல்லாம் போக்குவரத்துத் துறையை நஷ்டத்திலே ஈடுபடுத்திச் சென்றிருக்கின்றார்கள். அந்த ஆட்சி வருகிறபொழுதெல்லாம் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை மற்றும் 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் போக்குவரத்துத் துறையை நஷ்டத்தில் ஈடுபடுத்திவிட்டுத்தான் சென்றிருக்கிறார்கள். கடந்த 2006–2011 ஆம் ஆண்டு வரை நடந்த ஆட்சியில் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்களையும் இன்றைக்கு வங்கிகளிலே அடமானம் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதனால் ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை வட்டியாகக் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் நடத்தக்கூடாது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றைக்கும் சொல்லவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, தொழிலாளர்களின் பக்கம்தான் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு காலகட்டத்திலேயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

கடந்த ஆட்சி, மின்சாரத் துறையில் 55 ஆயிரம் கோடி ரூபாய் கடனாக வைத்துவிட்டுச் சென்றதை மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் கடனைச் சரி செய்து, மின்சாரப் பற்றாக்குறையே இல்லாத மாநிலம் என்கின்ற நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத் துறையிலே பணியாற்றுகின்ற இலட்சோப இலட்சம் தொழிலாளர்களுக்குச் சம்பளப் பேச்சுவார்த்தை நடத்தி, 7 சதவிகித சம்பள உயர்வைத் தாராளமாக வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒப்பந்தத்திலே கம்யூனிஸ்டுகள், தி.மு.க. உட்பட கையொப்பமிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள், சிரமப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1 இலட்சத்து 30 ஆயிரம் போக்குவரத்துத் தொழிலாளர்களில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் 87 ஆயிரம் தொழிலாளர்கள், அனைத்திந்திய அண்ணா தொழிற் சங்கத்திலே இணைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அனைத்துத் தரப்பு தொழிலாளர்களும் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம்தான் இருக்கிறார்கள். செய்ய வேண்டிய நேரத்தில், முடிக்க வேண்டிய பிரச்சினைகளை நிச்சயமாக முடித்துக் கொடுத்து, தொழிலாளர்களின் பக்கம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருப்பார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம் இருப்பார்கள் என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் பேசுகின்றபோது போக்குவரத்துக் கழகங்கள் நூறு கோடி ரூபாய் அளவிற்கு வட்டியைச் செலுத்துகின்றன என்று சொன்னார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படுத்திய கடன் சுமை காரணமாக ஓர் ஆண்டிற்கு 468 கோடி ரூபாய் வட்டியை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செலுத்தி வருகின்றன.

மேலும், அண்ணா தொழிற்சங்கத்தில் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றியும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்ற சீரிய சிறப்பான திட்டங்களை, போக்குவரத்துச் சேவையினைத் தொழிலாளர்கள் இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டுள்ளனர். அண்ணா தொழிற்சங்கப்



பேரவையில் 90 ஆயிரம் நபர்கள் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் நாங்கள் பணியாற்றுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இணைந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயக்க ஊர்திகள் பல்கிப் பெருகி வருகின்றன. சொந்தப் பயன்பாட்டு வாகனங்கள், இரு சக்கர வாகனங்கள் பெரிய அளவிற்கு அதிகரித்த வண்ணமுள்ளன. வாகன அடர்த்தி சாலைகளை அடைத்துக்கொள்கின்றன. எனவே, பொதுப் போக்குவரத்தை அதிகப்படுத்தி, சொந்த வாகனத் தேவைகளை மட்டுப்படுத்துவது அவசியம். மோனோ இரயிலின் இரண்டு திட்டங்களான பூந்தமல்லி–கத்திப்பாரா, போரூர்–வடபழனி குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. வட சென்னை பகுதி மக்களுக்கு இந்த மோனோ இரயில் திட்டம் மிக அதிகம் தேவைப்படுகிறது. ஆகவே, வட சென்னையையும் இந்தத் திட்டத்திலே இடம்பெறச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, முதல்வரின் பாதுகாப்பு கான்வாய் (convoy) உள்ளிட்ட அனைத்து அரசு ஊர்திகளையும் பராமரிக்கின்றது. 2012 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்கு 569 பேரை நியமிக்க விதி 110–ன்கீழ் அறிவித்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே இன்னும் தொழிலாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே, வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 85 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, அவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். எஞ்சியிருக்கின்ற பணியிடங்கள் படிப்படியாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு, பணி

நியமனம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஆட்டோக்களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன. அதிலே மேலும் குளறுபடியும், சிக்கல்களும் இல்லாமல் இருக்க வேண்டுமானால், எரிபொருள் விலை ஏற்றத்திற்கேற்ப ஆட்டோமீட்டர் கட்டணத்தை மாற்றி அமைப்பதற்குத் தேவையான முத்தரப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். சென்னையிலுள்ள அனைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் பிப்ரவரி 2014–க்குள்ளாகவே G.P.S. மீட்டர் விலையில்லாமல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அரசாணையும் இருக்கிறது. ஆனால், இன்னும் மீட்டர் வழங்கப்படவில்லை.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இருக்கின்ற மக்கள் சிறப்பாக ஆட்டோக்களில் பயணம் செய்யவேண்டும் என்பதற்காக தமிழக அரசின் வரலாற்றில், ஆட்டோ கட்டணத்தை நிர்ணயம் செய்து, 100 சதவிகிதம் சிறப்பான சேவைகளை வழங்கியிருக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்டோ ஓட்டுநர்கள் வாங்கவேண்டிய மீட்டர்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு நிதியைக் கொடுத்து, ஆட்டோ மீட்டர்களைப் பொருத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக மூன்று மாத காலம் அந்தப் பணிகள் தள்ளிச் சென்றன. எல்காட் நிறுவனத்திற்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்குண்டான ஆணையை இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் முடிவடைந்து, விரைவாக ஆட்டோ ஓட்டுநர்களுக்கு



மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் மீட்டர்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் விமான நிலையத்தில் முன் கட்டண ஆட்டோ சேவைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இப்பொழுதும் ஆங்கிலத்தில்தான் விண்ணப்பங்கள் தரப்படுகின்றன. இந்த அவையிலே திரும்பத் திரும்ப நானே இதுகுறித்துப் பேசியிருக்கிறேன். இப்பொழுதும் அந்த நிலையிலே மாற்றம் இல்லை. ஆகவே வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தமிழில் படிவங்கள் வழங்க வேண்டும். ஆட்டோ ரிக்ஷா பர்மிட் கொடுக்கும்போது, அவர்களுடைய முகவரியிலிருந்து, மாவட்ட எல்லைக்குள் 30 கிலோ மீட்டருக்குள் இயக்கவேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. அங்கு செல்கிறவர்கள் எந்த மொழியில் விண்ணப்பம் வேண்டும் என்று தேர்வு செய்கிறார்களோ, அதனை வாங்கி, பூர்த்தி செய்து தங்களுடைய விண்ணப்பங்களை வழங்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைக்குள் 30 கிலோ மீட்டர் என்பதிலே ‘மாவட்ட எல்லை’ என்கிற அந்த நிபந்தனையை அகற்றவேண்டும். ஏனென்றால், மாவட்டப் பிரிவினைகளால் மாவட்டங்களின்

எல்லைகள் சுருங்கி வருகின்றன. ஈரோட்டில் இருந்து பள்ளிப்பாளையத்திற்கு வருவது, சென்னையிலே இருந்து தாம்பரத்தைத் தாண்டி போவது என்பதெல்லாம் தற்பொழுது இயல்பாக நடக்கிற ஒன்றாகிவிட்டது. எனவே, அதில் மாற்றம் தேவை.

ஓட்டுநர் உரிமம் உள்ளவர்களுக்கு மட்டுமே ஆட்டோ பர்மிட் வழங்க வேண்டும்.

இராமேஸ்வரத்திலுள்ள கோயிலைச் சுற்றியிருக்கிற இரத வீதிகளில் ஆட்டோக்களை அனுமதிப்பதன் மூலமாக முதியோர்களுக்கும், உடல் நலம் குறைந்தவர்களுக்கும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பந்த ஊர்திகளாகச் செயல்பட வேண்டிய ஆம்னி பேருந்துகள் சட்டவிரோதமாக இயக்கப்படுகின்றன. ரெகுலர் சர்வீஸ்களாக இயக்கப்படுகின்றன. அவை ஒப்பந்த ஊர்திகளாக இயக்கப்படுவதில்லை. அமலாக்கப் பிரிவு ஏன் இந்த விஷயத்தில் செயலற்று இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பேருந்துகளைப் பொறுத்தவரையில், 'கான்ட்ராக்ட் கேரேஜ்'—அவை ஒப்பந்த ஊர்திகளாகத்தான் இயக்கப்படுகின்றன. அவற்றிற்கு முழுமையான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவதில்லை. அவர்கள் அதை முன்பதிவு செய்வதில்லை. பண்டிகைக் காலங்களில் ஆம்னி பேருந்துகளைச் சிறப்புப் பேருந்துகளாகத்தான் இயக்குகிறார்கள். எனவே, அவ்வாறு தவறாக ஆம்னி பேருந்துகளை இயக்குகிறவர்கள்மீது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு, துறையின் சார்பாக, சிறப்புப் பண்டிகை தினங்கள் மற்றும் பல்வேறு முக்கிய தினங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான அபராதம் விதிக்கப்பட்டு, உரிமங்கள் இரத்துச் செய்யப்படுகின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழாக் காலங்களில் ஆம்னி பேருந்துகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைவிட இரண்டு மடங்குக் கூடுதலாகக் கட்டணங்களை வசூலிக்கிறார்கள். 300 கிலோ மீட்டருக்குமேல் உள்ள வழித்தடப் பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக இயக்கப்படும் என்கிற அரசின் அறிவிப்பு இன்னும் செயலுக்கு வரவில்லை. அது செயல்பாட்டுக்கு வந்தால் ஆம்னி பேருந்துகளை நாம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழாக் காலங்களில் சென்னையிலிருந்து வெளியூர் செல்லக்கூடிய அனைத்துத் தரப்பட்ட மக்களும், வெளியூரிலிருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்லக்கூடிய மக்களும் சிரமமின்றிச் செல்ல வேண்டும் என்பதற்காகச் சிறப்பான பேருந்து வசதிகளை தமிழக அரசினுடைய போக்குவரத்து வரலாற்றிலேயே இல்லாதவகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். சிறப்பான சேவையைப் பெற்று, அந்த மக்கள் இன்முகத்தோடு தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை பேருந்துகள் இயக்கப்பட்டன; எவ்வளவு வருவாய் ஈட்டப்பட்டது; எவ்வளவு முன்பதிவுகள் செய்யப்பட்டன என்கிற விவரங்கள் எல்லாம் செயல்திறன் கையேட்டில் தெளிவாக உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புப் பேருந்துகள் இயக்கத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி நானும் துறையின் அலுவலர்களெல்லாம் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் முகாமிட்டிருந்தோம். அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கக்கூடிய கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் வந்து 'எங்களுடைய பேருந்துகளில் இருக்கைகள் காலியாக இருக்கின்றன. நாங்கள் கட்டணத்தைக் குறைத்துவிட்டோம். நாங்கள் நிர்ணயம் செய்ததைவிட கட்டணத்தைக் குறைத்துவிட்டோம், எங்களுடைய பேருந்துகளில் பயணம் செய்ய வாருங்கள்', என்று கூவி, கூவி, அழைத்தார்களே தவிர, எந்தப் பயணியும் செல்லவில்லை. முழுக்க, முழுக்க

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2014 ஜூலை 23

மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய அரசு சிறப்புப் பேருந்துகளிலே பயணம் செய்தார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்தக் கூற்று முழு உண்மையாயின், ஆம்னி பேருந்துகளின் எண்ணிக்கை 200–லிருந்து, 300–ஆக, 400–ஆக உயர்ந்து, இன்றைக்கு தமிழகத்திலே ஆயிரமாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் தெரிவித்தாக வேண்டும். ஆம்னி பேருந்துகள் சட்டவிரோதமாக இயங்குகின்றன. அமலாக்கப் பிரிவு கடுமையாக இருக்க வேண்டுமென்பது மட்டும்தான் என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் தங்களுடைய பேருந்துகளைச் சரியாக இயக்கமுடியவில்லை என்கிற காரணத்தால் ஓர் உரிமையாளர் மட்டும் 10 பேருந்துகளுக்குண்டான உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கின்றார். ஆம்னி பேருந்துகளில் பயணிகளுடைய எண்ணிக்கை அந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது. 300 கிலோ மீட்டருக்குமேல் செல்லக்கூடிய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 477 பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். இன்று முற்றிலுமாக 6 வயது என்று அந்தப் பேருந்துக்குக் காலத்தை நிர்ணயித்திருக்கிறோம். அதற்குக் குறைவாகத்தான் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு நிர்ணயித்திருக்கிறோம். அனைத்தும் புதிய பேருந்துகளாக, மக்களுக்கு வசதியுள்ள பேருந்துகளாக இயக்கப்படுகின்றன. சிறப்பான வசதிகளை தமிழக மக்களும், வெளியிலிருந்து வருகின்ற மக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பெற்று வருகின்றார்கள். இதுதான் சுத்தமான உண்மை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 22,442 பேருந்துகள் இருக்கின்றன. இதில் 9,729 பேருந்துகள் காலாவதியானவை (old aged) என்று கழகங்களின் புள்ளி விவரக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது, 43.8 சதவிகிதம் பேருந்துகள் காலாவதியானவை என்பது பொருள். இந்த நிலைமையை நாம் மாற்றியாக வேண்டும். புதிய பேருந்துகள் நிறைய விடுகிறோம். ஆனால், தேவைக்கேற்ப பேருந்துகளை விட முடியவில்லை. தேவைக்கேற்ப புதிய பேருந்துகள் விட வேண்டுமென்பதுதான் வேண்டுகோள். இல்லையென்றால் பாதுகாப்பான, தரமான, தடையில்லாத பயண வசதியைச் செய்து கொடுப்பதிலே சிக்கல் ஏற்படும். போக்குவரத்துக் கழகங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 பேருந்துகள் வாங்கினாலும்கூட ஒரே மாதத்தில், ஒரே ஆண்டில் அதற்கான ஒப்பந்தப் பணிகளை முடித்து, கூண்டு கட்டுகிற பணிகளை நிறைவு செய்துவிட முடியாது. ஆண்டுக்காண்டு, படிப்படியாகப் புதிய பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள். முதலாம் ஆண்டு 3,000 பேருந்துகள், அடுத்த ஆண்டு 3,000 பேருந்துகள் என 6,000 பேருந்துகளை வழங்கி, அவற்றில் 4,649 பேருந்துகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் வழங்கியிருக்கின்றார்கள். எஞ்சியிருக்கின்ற பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எந்த அளவிற்குப் புதிய பேருந்துகள் தேவையோ, அதை வழங்கியிருக்கின்ற முதலமைச்சர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2014 ஜூலை 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு சங்கிரிதான் தெரியும். ஹங்கேரி தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெளிநாட்டுப் பயணமாக மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் ஹங்கேரி சென்றுவர வேண்டுமென்று அனுப்பி வைத்தார்கள். அங்கு சென்று, அங்கு இயக்கப்படுகின்ற பேருந்துகளையும், கட்டமைப்புகளையும் பார்த்தபோது, ஹங்கேரியில் 19 ஆண்டுகள் இயக்கக்கூடிய பேருந்துகள் அந்த மக்களுடைய பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வந்தன. அந்தப் பேருந்துகளுடைய தன்மை மற்றும் அதை எப்படி இயக்குகின்றார்கள் என்பதை ஆய்வு செய்யும் வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டு வழங்கினார்கள். அருகாமையில் இருக்கின்ற ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா போன்று இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், குறைந்த வயதுள்ள பேருந்துகளை இயக்கக்கூடிய மாநிலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சி நடக்கக்கூடிய தமிழ்நாடு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** கழகங்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொண்டிருக்கின்ற விதிப்படி, காலாவதியான பேருந்துகள் எவ்வளவு என்ற கணக்கைத்தான் நான் சொன்னேன். வேறு ஒன்றுமில்லை. போக்குவரத்துக் கழகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கை வண்டிக்கு 7.50 பேர் இருக்க வேண்டுமென்று விதி ஏற்கெனவே இருந்தது. இப்போது 6.50 ஆக குறைக்கப்பட்டுவிட்டது. இதனால் 20,000 பணியிடங்கள் குறைந்துவிட்டன. இந்த 6.50–ம் இப்போது 6.26 என்கிற அளவுக்குச் சுருங்கிவிட்டது. தொழில்நுட்பப் பிரிவிலும் பணியாளர்களுக்குப் பெரிய பற்றாக்குறை இருக்கிறது. இதில் மாற்றுப் பணி (O.D.) என்ற பெயரில் வேலை செய்யாமல் சம்பளம் பெறுகிறவர்களும் இருக்கின்றார்கள். 27 பணிமனைகள் இருக்கின்ற மாநகர் போக்குவரத்துக் கழகம்—M.T.C.-ல் மட்டும் 490 பேர் பணிமனை ஓட்டுநர்களாக உள்ளனர். இதில் நோயாளிகள் சிலர் இருக்கலாம். ஆனால், பணிமனைக்கு 18 பேர் எப்படி உள்ளனர்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 ஜூலை 23]

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆசியோடு, உத்தரவோடு முதலாமாண்டு மானியக் கோரிக்கையை தாக்கல் செய்து பேசுகின்றபோது, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஏறத்தாழ 5,000–க்கும் மேற்பட்டவர்கள் பணிகளுக்கே செல்லாமல், சம்பளம் பெற்ற அவல நிலையை நான் இந்த அவையிலே எடுத்துக் கூறினேன். இன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கையினால், ஆளுமைத் திறனால் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் எவரும் வேலைக்குச் செல்லாமல் சம்பளத்தைப் பெறமுடியாது. அவர் ஏதேனும் ஒரு பணியைச் செய்ய வேண்டும். பேருந்து நிலையத்திலிருந்து அந்தப் பேருந்துகளினுடைய நேரத்தைக் கண்காணித்து, சரியான முறையில் இயக்குவதற்குண்டான பணிகளைச் செய்ய வேண்டும்; பேருந்துகளை ஓட்ட வேண்டும்; பராமரிக்க வேண்டும்; நடத்த வேண்டும். இப்படிப் பல்வேறு நிலைகளில் அவர்கள் பணிபுரிந்தால் மட்டுமே அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்து ஊழியர்களுடைய சம்பள ஒப்பந்தம் தள்ளிப் போய்க் கொண்டிருப்பதற்கு நீதிமன்ற வழக்கு மற்றும் L.P.F. தொழிற்சங்கம் ஆகியன காரணங்களாகும். இது எப்போது முடியும் என்றே நமக்குத் தெரியவில்லை. விலைவாசி காரணமாகத் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றார்கள். ஆகவே, மாதம் ரூ.3,000/– இடைக்கால நிவாரணமாக அவர்களுக்கு வழங்கி, ஒப்பந்தம் எப்போது போடுகிறோமோ அப்போது அதை நிருவாகம் சமன் செய்துகொள்ளலாம் என்பது எனது வேண்டுகோள்.

பிற்பகல் 12–25

போக்குவரத்துக் கழகங்கள் பெரும் சமூகப் பங்களிப்பைச் செய்து வருகின்றன. தமிழகத்தின் இன்றைய முன்னேற்றத்தில் மின்சாரத்திற்கு அடுத்தபடியாக போக்குவரத்துக் கழகங்கள்தான் முக்கியப் பங்காற்றியுள்ளன. ஆனால், பேருந்து இயக்கத்தின் ஒரு

கிலோ மீட்டருக்கு ஓடும் செலவு (Cost per kilometer) 31.84 பைசா. ஒரு கிலோ மீட்டருக்கு வரும் வருமானம் (Earning per kilometer) 29.74 பைசா அளவிலே உள்ளது. ஒரு கிலோ மீட்டருக்கு 2.1 பைசா இழப்பு ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த வருமானத்திற்கும், செலவிற்கும் உள்ள இடைவெளியை நாம் ஈடுகட்ட வேண்டியிருக்கிறது. இந்த இடைவெளிக்குக் காரணம், diesel விலையேற்றம். சமூகப் பொறுப்பு காரணமாக, நஷ்டம் அடைகிற 9,000 வழித்தடங்களிலே, பேருந்துகளை ஓட்டுகிறோம்; ஓட்டித்தான் தீரவேண்டும். மாணவர்களுக்குப் பயணச் சலுகை வழங்குகிறோம்; வழங்கித்தான் தீரவேண்டும். மாணவர்கள் பயணச் சலுகைக்கு அரசு சற்றுப் பணம் ஈடுகட்டித் தந்தாலும்கூட, முழுமையாக ஈடுகட்டவில்லை. முழுமையாக அதை அரசு ஈடுகட்டுமேயானால், அதுவும் ஓரளவுக்குப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் துணையாக இருக்கும்.

6,000 கோடி ரூபாய் மின் வாரியத்திற்குக் கொடுத்ததைப்போன்று, மிக முக்கிய கேந்திரமான போக்குவரத்துக் கழகங்களுக்கும் அரசு உடனடியாக ரூ.6,000 கோடி உதவி செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களிடம் அரசு மற்றும் கழகங்கள் பட்டிருக்கும் கடன்களைச் சரி செய்வதற்காக நான் இதைக் கேட்கிறேன். வருங்கால வைப்பு நிதியில் 1,695 கோடி ரூபாய்; பென்ஷனிலே 947 கோடி ரூபாய்; பணிக்கொடையிலே 561 கோடி ரூபாய்; கடன் வழங்கும் சொசைட்டியிலே 101 கோடி ரூபாய்; மற்ற வகைகளிலே 263 கோடி ரூபாய்; இப்படி 4,087 கோடி ரூபாய் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பணம் உரிய இடங்களில் செலுத்தப்படாமல் இருக்கின்றது. இதிலே, ஓய்வு பெற்று, பணப் பயன்கள் பெறாமல் நிலுவையில் இருக்கும் தொகை மட்டும் ரூ.448 கோடி. இந்தப் பிரச்சினையில் அரசு உதவி செய்யாவிட்டால், போக்குவரத்துக் கழகங்கள் இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலிருந்து மீள்வது சிரமம் என்பதுதான் என்னுடைய ஆணித்தரமான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2006 முதல் 2011 வரை, ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கிய



ஒட்டுமொத்தத் தொகை 928 கோடியே 86 இலட்சம் ரூபாய்; அவர்கள் விட்டுச் சென்ற நிலுவைத் தொகை 922 கோடியே 24 இலட்சம் ரூபாய். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஓய்வுபெற்ற தொழிலாளர்களுடைய குடும்ப நிலையைக் கருத்திலே கொண்டு, அவர்களுடைய பிள்ளைகளுக்குத் திருமணம், படிப்புச் செலவு மற்றும் குடும்பத் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக, தாயுள்ளத்தோடு இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,016 கோடி ரூபாய் நிதியை ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்காக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் நிலுவையாக விட்டுச் சென்ற 922 கோடி ரூபாயையும் வழங்கியிருக்கின்ற தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓய்வுபெற்று இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் என பாக்கி இருந்தவர்களுக்குப் பணம் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஓய்வூதியம் தராமல் உள்ள ஓய்வூதியர்களைப் பற்றித்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு படிப்படியாகப் பணப் பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. யார் யாருக்கு நிலுவை இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் படிப்படியாக வழங்கக்கூடிய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** பணியில் இருக்கும்போதே வருமானம் போதாமல் அவதிப்படுகிற தொழிலாளிக்கு, ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் அவர்களுக்கு வர வேண்டிய பணப் பயன் வராமலிருந்தால் எவ்வளவு கஷ்டம் என்கிற வேதனையோடுதான் நான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நானும் அதைத்தான் சுட்டிக்காட்டினேன். ஐந்து ஆண்டுகளில், கடந்த ஆட்சியில் வழங்கிய தொகை 928 கோடி ரூபாய். ஆனால், மூன்றாண்டுகளில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1,016 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், ஓய்வுபெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்கள்மீது எந்த அளவுக்கு அக்கறை கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எஞ்சியிருக்கின்ற தொகையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களாலேயே படிப்படியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படியும், சட்டப்படியும் தினக்கூலியாகப் பணியாற்றும் ஓட்டுநருக்கு 504 ரூபாய் வழங்கப்பட வேண்டும். நடத்துநர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளருக்கு 496 ரூபாய் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஓட்டுநருக்கு 230 ரூபாயும்; நடத்துநருக்கு 229 ரூபாயும்; தொழில்நுட்பப் பணியாளருக்கு 229 ரூபாயும்தான் வழங்கப்படுகிறது. இது தமிழகத்தில் இருக்கிற குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட கூலியை விடவும் குறைவானது. அந்தச் சட்டத்தில் மோட்டார் தொழிலாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டதைவிடவும் குறைவானது. எனவே, இது சட்டத்திற்கு விரோதமானது. ஆகவே, போட்டிருக்கிற



ஒப்பந்தப்படி உடனடியாக தினக் கூலித் தொழிலாளர்களுக்கு ஊதியத்தைத் தீர்மானித்து வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்றவர்களுக்கும், அவர்களுடைய வாரிசுகளுக்கும் புறநகர் வழித்தடங்களிலே செல்வதற்கு பாஸ் கொடுக்க வேண்டும்.

ஓய்வுக் கால சேமநலத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தினை, இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் 1992–ல் ஒப்பந்தத்தை நாம் உருவாக்கினோம். 2013 மே மாதத்திலிருந்து அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல திட்டம் நிறுத்தப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடர்ந்து நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்குகின்ற நிதி என்பது படிப்படியாக அந்தத் தொழிலாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சியிருக்கின்றவர்களுக்கும் படிப்படியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

*பிற்பகல் 12–30*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய வேலை நிறுத்தங்களிலே பங்கெடுப்பவர்களுக்கு 'வேலை இல்லை–சம்பளம் இல்லை' என்ற அடிப்படையில்தான் வேலைக்கு வராத நாளை நேர் செய்வது வழக்கமாக இருந்தது. ஆனால், இப்போது ரெவ்யூவை நிறுத்துவது, பதவி உயர்வை நிறுத்துவது, ஓய்வு பெறுவோருக்கு அவர்களின் ஓய்வுக்கால பலன்களை நிறுத்துவது போன்ற கடுமையான தண்டனைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. இதில், தொழிலாளர்

துறை துணை ஆணையர் தலையிட்டு 'வேலை இல்லை–சம்பளம் இல்லை' என்ற அடிப்படையில்தான் நீங்கள் அந்தத் தண்டனையை முடிக்கவேண்டும் என்று அறிவுறுத்திய பிறகும், போக்குவரத்துக் கழகங்கள் அதை அமல்படுத்த மறுக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்களுக்கான தண்டனையை நேர் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழக விதிமுறைகளுக்குட்பட்டுதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, துறையின் சார்பாக அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு நிலுவையிலே உள்ளது என்ற காரணத்திற்காக ஓய்வு பெற்றவர்களுடைய ஓய்வுக் கால பணப் பலன்களை நிறுத்துவது என்பது சட்டப்படி தவறாகும். அதற்கான நீதிமன்றத் தீர்ப்புகளும் இருக்கின்றன. கும்பகோணம் T.S.T.C.–ல் பணிபுரிந்த நடத்துநர் ஜோதி என்பவர் ஓய்வு பெற்ற பிறகு, ரூபாய் 49,450 பணம் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு பிடித்தம் செய்தார்கள். அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை பெஞ்ச் 'The order seems to be the outcome of the imagination of a sick mind. The impugned order is not only arbitrary, but on the face of it blatantly perverse. The impugned order is therefore, violative of Article 14 of the Constitution of India.' என்று கூறி, 9 சதவிகித வட்டியுடன் அந்தப் பணத்தைத் திருப்பித் தரவேண்டுமென்று உத்தரவிட்டது. இந்த உத்தரவு வந்த பிறகும், 31–5–2013–ல், கந்தசாமி



என்ற ஓய்வுபெற்ற ஓட்டுநரிடம் ரூ.3,35,560 பிடித்தம் செய்யவேண்டுமென்றும், இறந்துபோன நடத்துநரின் மனைவி ஹேமமாலினியிடமிருந்து 2,26,920 ரூபாய் பிடித்தம் செய்யவேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது நல்ல முறையாக எனக்குப் படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிரானது. மனநிலை பிறழ்ந்த முடிவை தொடரக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்றபோது, ஏதேனும் வழக்கு அவர்கள்மீது நிலுவையில் இருந்தால், புகார்கள் நிலுவையில் இருந்தால், அவை நிலுவையில் இருக்கின்றபோது, நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தத் தொழிலாளிக்கு ஓய்வு அளிக்கின்ற நடைமுறை வழக்கத்தில் இருக்கின்றது. அப்படி அவர் ஓய்வு பெற்ற பிறகு, அந்தப் புகாரை விசாரித்து, அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டால், அதற்குண்டான நடவடிக்கை, அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் என்ன சட்டத் திட்ட விதிகள் உள்ளனவோ, அந்த விதிகளுக்குட்பட்டுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையூர் என்கிற இடத்தில் M.T.C.–ல் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற 1,357 பேர், தங்களுடைய வைப்பு நிதி பணத்தையெல்லாம் போட்டு, 15 ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டுவசதி சொசைட்டி மூலமாக 84 ஏக்கர் நிலம் வாங்கினார்கள். அதற்குப் பக்கத்திலேயே இப்போது போக்குவரத்துப் பணிமனை கட்டப் போகிறோம். 0.80 சென்ட்—(ஒரு சென்ட் கூட கிடையாது)—அளவிற்கு நுழைவு உரிமை அரசுப் புறம்போக்கு நிலத்தில் கொடுத்தால், அந்தத் தொழிலாளர்கள் அங்கு வீடு கட்டி வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அது இன்றும் மறுக்கப்படுகின்றது. பலர் இறந்து விட்டனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி அந்த இடத்தைத் துறையின் செயலாளரோடு, நான் நேரடியாக ஆய்வு செய்தேன். அந்த ஒட்டுமொத்த மனைப் பிரிவில், இடையிடையே தனியார் நிலங்களும் இருக்கின்றன. அந்தத் தனியார் நிலங்கள் வழியாகச் சாலை அமைப்பதில் சில பாதிப்புகள் ஏற்படுகின்றன. இடையிலே இருக்கின்ற தனியார் நிலங்களுக்கு விரைவாக தீர்வு எட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே அதற்குண்டான நடவடிக்கைகள், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவோடு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகின்றன. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் பல வழித்தடங்கள் தனியார்மயமாக்கப்படும் என்றும், அதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. அப்படி எதுவும் நடக்கக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நானும் கடிதம் எழுதியுள்ளேன். ஒரே ஒரு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் பதில் சொல்லிவிடுகிறேன். பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் எல்லாம் உண்மையாக இருக்கவேண்டும் என்பதல்ல. தமிழகத்தில் 37 இடங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நலத் திட்டங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) வேட்பாளர்கள் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எந்தப் பத்திரிக்கையிலாவது 37 இடங்களில் நாங்கள் வெற்றிபெறுவோம்





என்று சொன்னார்களா? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்கள், மக்களிடத்திலே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று, டில்லியை ஆளக்கூடிய ஒரு தகுதிவாய்ந்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபிக்கும்வகையில் தமிழக மக்கள் 37 இடங்களிலும் வெற்றி வாய்ப்பை வழங்கினார்கள். இப்படி பத்திரிகைச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவது சரியல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் புகாருக்கு, அந்தப் பத்திரிகைமீது துறையின் சார்பாக வழக்குத் தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே பாயின்ட். அரசு அதற்கு மறுப்பு தெரிவித்தால் எங்கள் எல்லோருக்கும் மன நிம்மதிதான், வேறு ஒன்றும் இல்லை. இப்போது நீங்கள் அந்த நாளேட்டின்மீது வழக்கு தொடரப் போகிறோம் என்று சொல்லிவிட்டீர்கள். மிக்க மகிழ்ச்சி.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான செய்தி வெளியிட்ட பத்திரிகைமீது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழக்குத் தொடர உத்தரவிட்டு, துறை சார்பாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், L.S.S., Express, சாதாரண கட்டணப் பேருந்துகள்

என்கிற பிரச்சினை குறித்து நேற்றுகூட சாதாரண கட்டணப் பேருந்துகள் நிறைய ஓடுவதாக பேசினார்கள். திருப்பூர் நகரத்தில் இயக்கப்படும் பேருந்துகள் குறித்து தகவல் அறியும் ஊரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்கள் பெற்றோம். அதன்படி அங்கு இயக்கப்படும் 127 நகரப் பேருந்துகளில், 120 பேருந்துகள் L.S.S. ஆகவும், 6 பேருந்துகள் Express ஆகவும், ஒரே ஒரு பேருந்து மட்டுமே சாதாரணக் கட்டணத்தில் இயக்கப்படுவதாகவும் தகவலை வழங்கியிருக்கிறார்கள். இதை ஆய்வு செய்து, அங்கு சாதாரணக் கட்டணத்தில் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட சாதாரண கட்டணப் பேருந்துகளைவிட, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அதிகமான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஏழை மக்களின் பயன்பாட்டிற்காக 20,684 பேருந்துகளில் 10,483 பேருந்துகள் சாதாரணக் கட்டணத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில், நீண்ட தூரம் செல்கின்றபோது, அதற்குரிய கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தப் பேருந்து சாதாரணக் கட்டணம், இந்தப் பேருந்து விரைவுக் கட்டணம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகம், நெடுஞ்சாலைகளில் ஓடக்கூடிய பேருந்துகளுக்காக, சுங்கச் சாவடிகளில் ஆண்டிற்கு 170 கோடி ரூபாய் செலுத்துகிறது. 1 கிலோ மீட்டர் இயக்கத்திற்கு 52 பைசா வீதம் Tollgate–ல் மட்டும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். 1 கிலோ மீட்டர் இயக்கத்திற்கு 140 பைசா



வீதம் 468 கோடி ரூபாய் கடனுக்கான வட்டியாக செலவழித்துக்கொண்டிருக்கிறோம். 1 கிலோ மீட்டர் இயக்கத்திற்கு 9 பைசா பேருந்து நிலைய கட்டணமாக செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்படக்கூடிய நஷ்டம் கிலோ மீட்டருக்கு 2.10 பைசா. இவற்றை பெருமளவு ஈடுகட்டுவதற்கு, அரசாங்கம் இந்தப் பணங்களை நேரடியாகத் தர வேண்டும் அல்லது சமூகப் பணியாற்றும் போக்குவரத்துக் கழகங்களுக்கு இவற்றிலிருந்து விதிவிலக்கு பெற்றுத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை உயர்வுக்குப் பிறகு, உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. விலைகள் உயர்ந்தபோதும் இந்தியாவில் மிகக் குறைந்த கட்டணத்தில் தமிழகத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கப்படும் பேருந்துகளின் இயக்க வருவாய் உயர்ந்து, அவற்றின் செலவினங்கள் மிகக் கடுமையாக உயர்ந்திருக்கின்றன. இந்த மூன்றாண்டுகளில் மட்டும் டீசல் விலை 1,170 கோடி ரூபாய் உயர்ந்திருக்கின்றது என்று சுட்டிக்காட்டினேன். அதேபோன்று, 2010–2011 ஆம் ஆண்டில் 37 கோடி ரூபாயாக இருந்த Toll gate fee இந்த 3 ஆண்டுகளில் மட்டும் 80 கோடி ரூபாய் உயர்ந்து, 118 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இவ்வாறு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படுகின்ற கூடுதல் செலவினங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். டீசல் மானியமாக மட்டும் ஓராண்டிற்கு 819 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். 2010–2011 ஆம் ஆண்டில் மாணவர்களுக்குப் பயண அட்டை வழங்கும் திட்டத்திற்காக வழங்கப்பட்ட தொகை 421 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2013–2014 ஆம் ஆண்டில் மாணவர் பயண அட்டை வழங்கும் திட்டத்திற்கு 652 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். கூடுதலாக 230 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய பயன்பாட்டிற்குப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி உரையை முடிப்பதற்கு முன்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு மாதம் ரூ.3,000/– இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும் என்று மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை எழுதித் தருகிறேன் என்று சொல்லி, நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

**தொகுதிக் கோரிக்கைகள்**

பெரம்பூர் தொகுதியில் உள்ள கண்ணதாசன் நகர் பஸ் நிலைய சுற்றுச் சுவர் விழுந்துவிட்டது. அதை உடனே கட்டித்தர வேண்டும் என்றும், பின்புறத்தில் ஒரு விக்கெட் கேட் வைத்து மக்கள் சுற்றி வருவதைக் குறைக்க வேண்டும் என்றும் கோருகிறேன்.

பெரம்பூர் தொகுதி, கண்ணதாசன் நகரில் இருந்து வழித்தடம் 33–ல் கூடுதலாக 4 பேருந்துகளை இயக்க வேண்டும்.

முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், கொடுங்கையூர் உட்புறங்களை இணைக்கும் விதத்தில் பெரம்பூர் இரயிலடிக்கு சிற்றுந்துகள் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசி முடித்திருக்கிறார். இடையில் பேச அனுமதி தர இயலாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிந்த பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்குப் பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பொதுச் சங்கத் தேர்தல் நடைபெற்றபோது எல்.பி.எப். தி.மு.க.–வினுடைய தொழிற்சங்கம் பெற்ற வாக்குகள் எண்ணிக்கை 73,450. அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 30–6–2014 நிலவரப்படி, 18,148



ஆகக் குறைந்திருக்கிறது. அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றபோது, "தாங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட சங்கம்" என்று கூறி தங்களை மட்டுமே அழைக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது. எனவே, ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

பிற்பகல் 12–40

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வால்பாறை தொகுதியிலும், திருத்துறைப்பூண்டியிலும் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகங்கள் செயல்பட உத்தரவிட்டு, நடைமுறைபடுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, தொகுதியின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில், சென்னையிலிருந்து பல்வேறு ஊர்களுக்குத் தடையின்றி, அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் தங்களுடைய ஊர்களுக்குச் செல்ல அனைத்து வசதிகளும் செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை பாராட்டுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவினை ஏற்று, நேரில் சென்று அதற்கானப் பணிகளை நிறைவேற்றிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். 31–3–2014 அன்று நிலவரப்படி, மாநிலத்தில் 11.36 இலட்சம் போக்குவரத்து வாகனங்களும், 176.73 இலட்சம் போக்குவரத்து அல்லாத வாகனங்களும், ஆக மொத்தம், 188.09 இலட்சம் வாகனங்கள் இயக்கப்பட்டு வருவதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இவற்றுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கும்போது, அரசு அறிவித்துள்ள சட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அவை உட்பட்டவையா என்பதைச் சோதித்து வழங்கப்பட்டனவா என்று நான் அறிய விரும்புகிறேன்.

பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள் பள்ளிக் குழந்தைகளையும், கல்லூரி மாணவ, மாணவியர்களையும் ஏற்றிச் செல்லும்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி வாகனங்களைச் சீராக ஆய்ந்து, அவை இயக்குவதற்கு தகுதியானவையாக இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து, அதற்குண்டான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. எந்தெந்த வாகனங்கள் இயக்குவதற்குத் தகுதியில்லையோ, அவை நிராகரிக்கப்படுகின்றன. அந்த வாகனங்கள் சரி செய்யப்பட்டு, மீண்டும் தகுதிக்கான ஆய்வு செய்யப்பட்ட பிறகுதான், அதற்குண்டான தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்வதற்கென்று குழு அமைத்திருக்கின்றார்கள். அந்தக் குழு பள்ளிப் பேருந்துகளுக்கான ஆய்வுகளை மேற்கொண்டு, சிறப்பான சேவைகளைச் செய்துவருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்லும்போது அந்தப் பேருந்துகள் போக்குவரத்து விதிகளை மீறும் வகையில், பேருந்து நிறுத்தம் இல்லாத இடங்களில் நிறுத்தி ஏற்றிச் செல்லும் நடைமுறை இருந்துவருகிறது. அதை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான கல்வித் தகுதி தளர்த்தப்பட வேண்டும். வால்பாறையில் செயல்பட்டுவரும் வட்டாரப்



போக்குவரத்துப் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நாளொன்றுக்கு 91.20 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துகளை இயக்கி வருகின்றன என்றும், 2 கோடியே 10 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்தியில் இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசும் சரி, இப்பொழுது அரசுப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய திரு. நரேந்திர மோடி அவர்களின் அரசாக இருந்தாலும்சரி, இந்த அரசுகளால் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட மிகக் கடுமையான டீசல் விலை உயர்வால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதலான நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.200 கோடியும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.500 கோடியும் டீசல் விலை உயர்வினை ஈடுசெய்ய மானியமாக தமிழக அரசே கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. இருந்தாலும், நடப்பு நிதியாண்டிலும் ரூ.500 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது பாராட்டுக்குரியது.

மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி ஆகிய 8 போக்குவரத்துக் கழகங்களில் 1,817 உபரிப் பேருந்துகள் உட்பட, 22,501 பேருந்துகள் இயங்கி வருகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

2011 ஆம் ஆண்டில் 19,110 ஆக இருந்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை, 2014 ஆம் ஆண்டு, மார்ச்–ல் 20,684 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 1,574 பேருந்துகள் இந்த இரண்டு ஆண்டுகளில் உயர்த்தப்பட்டிருப்பது என்பது பாராட்டுதலுக்குரியது. இதில் பணிபுரியக்கூடிய மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1,43,468 ஆகும். போக்குவரத்துக் கழகங்களின் கிளைகள் 294 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் நடத்தப்பட்டுவருகின்றன. இந்தக் கல்லூரிகளில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகள் மருத்துவம் மற்றும் பொறியியல் படிக்க இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில், படித்துப் பட்டம் பெற்றவர்கள் இன்றைக்கு வேலைக்கு செல்கின்றார்கள். இந்த மருத்துவ மற்றும்

பொறியியல் கல்லூரிகளில், போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய இடங்களை இன்னும் கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

சென்னை மாநகரத்தில் ஆட்டோ கட்டணத்தை ஒழுங்குபடுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகள் பாராட்டுதலுக்குரியதாக இருந்தாலும்கூட, கோவை போன்று தொழில் நகரங்களாக இருக்கக்கூடிய இதர மாவட்டங்களில், ஆட்டோ கட்டணத்தைக் குறைந்தபட்சம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் குழந்தைகள் சிறப்பான கல்வியைப் பெற வேண்டுமென்பதற்காக தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரியைத் தொடங்கினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவை தொடங்கப்பட்டன. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கென்று கல்வி நிலையங்களை வழங்கியிருக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய கல்வி நிறுவனங்களில்—அந்த மாணவச் செல்வங்களின் நலன் கருதி, ஈரோடு சித்தோடில் அமைந்துள்ள கல்வி நிறுவனத்தில் கூடுதல் இடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அது கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியில் கட்டடப் பொறியியல் மற்றும் தானியங்கிப் பொறியியல் பிரிவுகளில் கூடுதலாக 30 இடங்களை நிரப்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால்



நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் மூலமாக இன்றைக்கு அவர்கள் கல்வியைப் பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரங்கள் இருக்கக்கூடிய கோவை மாவட்டம் போன்றிருக்கக்கூடிய மாவட்டங்களில், ஆட்டோ கட்டணத்தை ஒரு கிலோ மீட்டருக்குக் குறைந்தபட்சம் 30 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வைக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது. இப்போது உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருப்பதாகக்கூட தகவல்கள் வருகின்றன. எனவே, சென்னையைப்போல கோவையிலும், ஆட்டோ கட்டணத்தை ஒழுங்குபடுத்துவதற்கான முறையில், குறைந்தபட்சம் ஒரு கிலோ மீட்டருக்கு 30 ரூபாய் என்ற அளவில் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள், அகில இந்திய அளவில் சிறப்பாகச் செயல்பட்டு வருவதையும், தமிழக மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து வருவதையும் அனைவரும் அறிவர். குறிப்பாக, சென்னை நகரில் இயக்கப்படும் மினி பேருந்துகள் பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, போக்குவரத்துக் கழகத்திற்கு நல்ல வருவாயையும் ஈட்டித் தருகின்றன என்பது சிறப்பான அம்சமாகும். புற நகர்களில் தனியார்மூலம் இயக்கப்படும் மினி பேருந்துகளை, போக்குவரத்துக் கழகங்களே ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

மத்திய அரசின் தவறான கொள்கையினால், டீசல் விலை மாதா மாதம் உயர்த்தப்படுகிறது. இதனால் போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதி நெருக்கடிக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளன. இதனையொட்டி அரசு சில நேரங்களில் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி செய்துள்ளது. தொடர்ந்து நஷ்டத்தில் தள்ளாடிக் கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கு இந்நிதி போதுமானதல்ல. பொது மக்கள் சேவையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் பற்றாக்குறையினை, அதாவது வரவுக்கும் செலவுக்குமான

இடைவெளியை அரசே ஈடுகட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1–9–2013 முதல் அமலுக்கு வரவேண்டிய போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒப்பந்தக் காலம் முடிந்ததற்குப் பின்னால், இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில், உச்ச நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கு எப்போது முடியும், தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தை எப்போது தொடங்கும் என்று தொழிலாளர்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் தருணத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளில் எங்களுக்கும் உடன்பாடு; அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மற்றும் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய அனைத்துத் தொழிற்சங்கங்களையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்பது A.I.T.U.C.–ன் நிலையாகும். L.P.F. சங்கத்தைப் பொறுத்தமட்டிலும், கடந்த முறை அவர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக வந்திருந்தாலும்கூட, இப்பொழுது நிலைமைகள் மாறி, அனைவரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துப் பேச. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L.P.F. உறுப்பினர்கள் தேர்தல் நேரத்தில் பெற்ற வாக்குகளையும், தற்போது அதில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்களின் நிலவரங்களையும் சுட்டிக்காட்டினேன். L.P.F. தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் சொல்கின்ற கூற்று, 'நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோற்றுவிட்டேன்; தோற்றுவிட்டாலும் நான்தான் நாடாளுமன்ற உறுப்பினர்' என்று சொல்வதைப்போல, நாங்கள்தான் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று சொல்கின்றார்கள். இன்றைக்கு 90,900 உறுப்பினர்களைக் கொண்டுள்ள அண்ணா தொழிற்சங்கப் பேரவையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையையேற்று, அந்தத் தொழிலாளர்கள் தங்களை இணைத்துக்கொண்டு, சிறப்பான சேவைகளைச் செய்து வருகின்றார்கள். அதிகப் பெரும்பான்மை பெற்ற தொழிற்சங்கங்களைப் பேச்சுவார்த்தைக்கு



அழைக்க வேண்டும். அதேபோல, இருக்கின்ற மற்ற தொழிற்சங்கங்களின் கருத்துகளையும் கேட்கவேண்டும். ஆகவே, அதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கு நிறைவு பெறுவதற்கு, வழக்கினை விரைவாக முடிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, சீரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்கின்ற காரணத்தினாலேதான், உடனடியாக அவர்களை அழைத்துப் பேச வேண்டும். வழக்கு மன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால், பேச்சுவார்த்தைக்கு அது தடையாக இருக்கின்ற காரணத்தினால், போக்குவரத்து ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, மாதம் 3 ஆயிரம் ரூபாயை அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாகக் கொடுப்பதோடு, பேச்சுவார்த்தை நடைபெறுகின்றபோது, அதை சரிசெய்துச் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

கடந்த ஆட்சியின்போது தேர்வு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களைத் தவிர்த்து, ஏனைய தொழிற்சங்கங்களுடன் நிருவாகம் பேசக்கூடாது என்று 8–12–2010 அன்று அரசாணை எண் 359 பிறப்பிக்கப்பட்டது. தொழிற்சங்க உரிமைகளை நிலைநாட்டவும், தொழிலாளர் நலன் கருதியும் இந்த அரசாணையைத் திரும்பப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் ஆட்சியின்போது அமல்படுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கான சேம நல நிதித் திட்டம் 2013 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது. நிறுத்தப்பட்டுள்ள சேம நல நிதியை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்டினேன். சேம நல நிதித் திட்டம் நிறுத்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அந்தத் தொழிலாளர்களுக்குப் படிப்படியாக அதற்குரிய நிதி வழங்கப்பட்டு வருகின்றது. போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக எஞ்சியுள்ள தொழிலாளர்களுக்கும் படிப்படியாக அது வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–4–2014 தேதியிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்த வெளியிடப்பட்ட அரசாணை எண் 42–ல், அரசு பென்ஷன் மறுக்கப்பட்ட முன்னாள் அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அரசு பென்ஷன் வழங்கிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்குத் தனிச் சட்டம் இயற்றி, அரசின் பொறுப்பில் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று அரசால் நியமிக்கப்பட்ட பென்ஷன் சீரமைப்புக் குழு 6–10–2008 அன்று அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பென்ஷன் தொடர்பான சட்டத்தை இயற்ற தற்போதைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 1–4–2003–க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களையும் இந்தப் பென்ஷன் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். போக்குவரத்துக் கழகங்கள் அசுர வளர்ச்சியடையக் காரணமாக இருந்த ஓய்வூதியதாரர்கள் அனைத்துப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். அரசு ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 1–7–2014 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் திட்டம் போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களுக்கு மத்தியில் உள்ள இந்தப் பாரபட்சத்தைக் களைந்து, போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களையும் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



விபத்துகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. மக்களின் உயிர், உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. அதேநேரத்தில், விபத்து என்பது ஓட்டுநர்களால் மட்டுமே நிகழ்வது அல்ல. இதற்குப் பல்வேறு காரணங்களும், சூழ்நிலைகளும் உள்ளன. ஒரு விபத்தில் சம்பந்தப்படுகின்ற ஓட்டுநர் நீதிமன்ற மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப்படுகின்றபோது, காரண காரியங்களை ஆராயாமல், ஓட்டுநர்களின் உரிமங்களைப் பறித்துவிடும் நிலைமை தொடர்கிறது. இதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப பராமரிப்புப் பிரிவுகளில் தொழில்நுட்பப் பணியாளர்கள் இல்லை. பல ஆண்டுகளாக அலுவலக மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இதனால் பேருந்துகளின் பராமரிப்புப் பணி பாதிக்கப்படுகிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பினை முழுவதுமாகப் படித்திருப்பார் என்று எண்ணுகிறேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பேருந்துகள் சிறப்பாகப் பராமரிக்கப்படவேண்டும் என்பதற்காக கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி 2,388 தொழில்நுட்பப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகள் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டுவருவதன் காரணமாக உயிரிழப்புகளை ஏற்படுத்தும் விபத்துகள் குறைந்துள்ளன. 19,110 பேருந்துகள் இயக்கப்படுகின்ற நிலையில், 2010 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை 1,472 ஆக இருந்தது, ஆனால் 2011–2012 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த எண்ணிக்கை 1,237 ஆகக் குறைந்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,500 ஆக மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தி இயக்க ஆணையிட்டதன்பேரில் அதிகமான பேருந்துகள் இயக்கப்பட்ட சூழ்நிலையிலும் விபத்துகளின் எண்ணிக்கை 1,233

ஆகக் குறைந்துள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் 20,684 இயக்கப் பேருந்துகள் இயக்கப்பட்ட சூழ்நிலையிலும்கூட, அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் விபத்துகளின் எண்ணிக்கை 1,187 ஆகக் குறைந்திருக்கின்றது. இப்படிச் சிறப்பான சேவைகள் மற்றும் சிறப்பான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்ற ஊக்கம், வழிகாட்டுதலின் மூலமும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் விபத்து எண்ணிக்கையும், உயிர் இழப்புகளின் எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் பணியில் இருந்தவர்களை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுகிறார்கள் என்பதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எஞ்சிய தொழிலாளர்களையும் தொடர்ந்து நிரந்தரம் செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

பிற்பகல் 12–55

பல ஆண்டுகளாக வாரிசுப் பணிக்காகக் காத்திருப்போருக்குத் தகுதிக்கேற்ப நிபந்தனையின்றி பணி வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். 600 நாட்களுக்கு மேல் பணி புரிந்துள்ள ரிசர்வ் பிரிவு மற்றும் தினக் கூலி ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளனர். 240 நாட்களுக்கு வேலை செய்த அனைத்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

எனக்கு முனனால் பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தினக் கூலி ஊழியர்களுக்கு, ஒப்பந்தத்தின்படி நாளொன்றுக்கு



500 ரூபாய் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் தேங்கி கிடக்கின்றன. அவர்களை, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக் கூலி அடிப்படையில் பணி புரிகின்றவர்களை, நிரந்தரப் பணியில் எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றனவோ அதற்கேற்றார்போல்தான் அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய முடியும்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பணி ஆணை வழங்கி, பணி நிரந்தரம் செய்யப்படாமலிருந்த 9,157 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களைப் பணி நிரந்தரம் செய்திருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி, தங்களுடைய உயிரை நீத்த தொழிலாளர்களுடைய வாரிசுகள் 349 பேர்களை கடந்த ஆட்சியில் பணி நிரந்தரம் செய்யாமல் விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். அந்த ஏழைத் தொழிலாளர்கள் இறந்தாலும்கூட, அவர்களுடைய வாரிசுகளின்மீது கருணை கொண்டு, கருணைத் தாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 349 வாரிசுகளின் பணியை நிரந்தரம் செய்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஷரத்துகளில், சில ஷரத்துகள் அமல்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தோடு கலந்துபேசி அவற்றை அமல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகங்களில்

கட்டாயமாக double duty வாங்கப்படுவதாக சொல்லப்படுகிறது. கட்டாய double duty–யை உடல்நிலை சரியில்லாதபோதும்கூட, விடுப்புக் கொடுக்காமல் பழிவாங்குவது என்ப . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களை இயக்குவதற்குத் தேவையான பணியாளர்களை நியமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் படிப்படியாக அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். யாருக்கும் பணி அழுத்தம் வழங்கப்படுவதில்லை. கூடுதல் பணியைச் செய்ய யாரையும் வலியுறுத்துவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் எங்கேனும் ஓர் ஓட்டுநர், நடத்துநர்களுக்குக் கூடுதல் பணிச் சுமை வழங்கப்பட்டது என்று அவர்களின் பெயர் குறிப்பிட்டு, பணியையும் குறிப்பிட்டு, எந்தப் பணிமனை என்று குறிப்பிட்டால் அது குறித்து துறையின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவினைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எந்த இடத்திலும் தொழிலாளர்களுக்கு பணி அழுத்தம் தரப்படுவதில்லை. தொழிலாளர்கள் சிறப்பாக அவர்கள் சேவையைச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 45 வயதிற்கு மேற்பட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனைத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய ஓய்வுக்காலப் பலன்கள் காலத்தில் வழங்குவதற்கும், இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு மாதம் முழுவதும் சம்பளத்தை முறையாக வழங்குவதற்கும். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆறுமுகம், உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** Gratuity, pension போன்றவை அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதிய நிதி, காப்பீட்டுக் கழகங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வீடு கட்டும் கடன் சங்கங்கள் ஆகியவற்றிற்காக தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளைக் கழக நிருவாகங்கள் உரிய அமைப்புகளுக்குச் செலுத்தாமல் கழகங்களின் அன்றாடச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன என்ற செய்தி வந்துள்ளது. இதனால் அவசரத் தேவைகளுக்கு, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன். இந்தத் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியவர்கள் கடந்த கால தி.மு.க. ஆட்சியாளர்கள்தான். தற்போது, அரசுப் போக்குவரத்துக் கழகங்களை முழுமையாகச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, தொகைகளை உரிய இடத்தில் செலுத்தவேண்டுமென்று மேலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கைகள் துறையின் சார்பாகச் செய்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் தமிழகத்திலே சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்நிலையில், கழகங்களுடைய நிதிச் சுமையைக் குறைக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எங்களுடைய ஆலோசனையாகச் சொல்ல விழைகின்றோம்:

மோட்டார் வாகன வரி விலக்கு அளிக்கலாம். டீசல் மீதான மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரிக்கு விலக்கு பெற அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். கழகப் பேருந்துகள் செலுத்தும்

Toll Gate சுங்க வரிக்கு மத்திய அரசிடமிருந்து விலக்கு பெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம். M.T.C., S.E.T.C. தவிர்த்து இதர கழகங்களுக்கு தற்போது மாணவ–மாணவியர் இலவச பயணச் சீட்டு சலுகையால் ஏற்படும் 44% கட்டணச் செலவு முழுவதும் அரசே ஏற்கலாம். பேருந்துகளை பொதுத் துறை இன்சூரன்ஸ் நிறுவனங்களில் காப்பீடு செய்வதன்மூலம் விபத்து இழப்பீட்டுத் தொகைச் செலவினத்தைக் குறைக்கலாம். பேருந்துகளுக்கு கூடு கட்டும் பணி ஏற்கெனவே அரசுத் துறையிடமிருந்ததுபோல நடைமுறைப்படுத்தி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எம். ஆறுமுகம், உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** செயல்படுத்தினால் கழகங்களின் செலவுகளைக் கணிசமாகக் குறைக்கலாம் என்று கூறி வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமருகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியது, அரசே வழங்கலாம், அரசே வழங்கலாம் என்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள அத்தகைய இழப்புகளைச் சரிசெய்வதற்காகத்தான் இதுவரை தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாதவகையில், ஒரே ஆண்டில் 819 கோடி ரூபாய் டீசல் மானியமாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்தில் பிணையத்திலுள்ள பேருந்துகளை மீட்பதற்கும், பயண அட்டை பெறுகின்ற மாணவர்களுக்குண்டான அந்தத் தொகையைக் கூடுதலாக உயர்த்தியும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதிகள் மட்டும் வழங்கவில்லையென்று சொன்னால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி ஏற்படுத்திய கடன் சுமை காரணமாக இந்நேரம் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் இழுத்து மூடப்பட்டிருக்கும்.



மக்களுக்குச் சேவைகளை வழங்கியிருக்க முடியாது. மக்களுக்குச் சிறப்பான சேவைகள் வழங்க வேண்டும். ஏழை மக்கள் தமிழக மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்பதற்காக, தொழிலாளர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக தாயுள்ளத்தோடு நிதிகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றவென்று சொன்னால், அரசுப் பேருந்துகள் முழுமையாக இயக்கப்படுகின்றன என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவற்றுக்குக் கடவுளாகத் திகழ்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்சார்பிலே எனக்குப் பேசக் கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி சொல்கிறேன். போக்குவரத்து ஊழியர்களுக்கு 2013 செப்டம்பர் மாதம் வழங்க வேண்டிய சம்பள ஒப்பந்தத்தை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. ஓய்வு பெற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வருங்கால வைப்பு நிதி மற்றும் விடுப்பு ஒப்படைப்புச் சம்பளம் 2013 ஆம் ஆண்டு முதல் வழங்கவில்லை. ஓய்வூதியதாரர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டினேன். கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கிய தொகை எவ்வளவு, இந்த 3 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கிய தொகை எவ்வளவு என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினேன். ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் அனைவரும் முழுமையான தொகையைப் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த 3 ஆண்டுகளில் 1,016 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2014 ஜூலை 23

அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். எஞ்சியிருக்கின்ற ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கும் படிப்படியாகப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியதாரர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு மற்றும் நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு மாதந்தோறும் வழங்க வேண்டிய சேம நல நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கென்று அனைத்துத் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட நிதி (Labour Welfare Fund) வழங்கப்படுவதில்லை. குமரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வலியுறுத்துகிறேன். முதிர்வு அடிப்படையிலே பணியமர்த்தப்பட வேண்டுகிறேன். பணிமூப்பு பெற்று இந்நாட்டின் மூத்த குடிமக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதற்கு, முறைப்படி கிடைக்க வேண்டிய பணப் பயன்கள் வழங்கப்படாததற்குக் காரணமான, அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுத்து, உடனடியாக பணப் பயன்கள் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கிட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனைகளிலே கேன்டீன்களை தனியார்கள் நடத்துகிறார்கள். அதனை அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் ஒன்றாம் தேதி கொடுக்க முடியாத நிலை சில மாவட்டங்களில் இருக்கின்றது. சென்ற 4 மாதங்களாக இந்த நிலை உள்ளது. அதனைச் சரி செய்ய வேண்டுகிறேன். மலைப்பகுதியிலே மற்றும் கிராம மக்களுக்கு வசதியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 ஜூலை 23]

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகாலம் மத்தியிலே ஆட்சியில் இருந்துவிட்டு, 43 ரூபாயாகயிருந்த டீசல் விலையை 64 ரூபாயாக உயர்த்தி, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் செலவாக ஓராண்டிற்கு 1,160 கோடி ரூபாய் டீசல் விலை உயர்வால் மட்டும் ஏற்படுத்தியுள்ளீர்கள். நீங்கள் ஆட்சியிலிருந்தபோது டீசல் விலையை நீங்கள் உயர்த்தியிருந்தாலும்கூட, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற அந்த நிதிச் சுமையை ஈடுசெய்ய, மக்களுக்காக இயக்கப்படுகின்ற பேருந்து கழகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, மக்களுக்குண்டான திட்டங்களாக இருந்தாலும் சரி, முழுமையாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியைக் கொடுத்து, இன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில்கூட புதிய பேருந்துகள் இயக்கப்படவில்லை. திருநெல்வேலியில் இயக்கப்பட்ட பேருந்துகள்தான் உங்களுடைய மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டு இயக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு புதிய பேருந்துகளையும் வழங்கி, அந்த மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? உங்கள் உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார். திரு. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மத்தியில் 10 ஆண்டுகள் நாங்கள் ஆட்சி செய்தோம், டீசல் விலையை உயர்த்திவிட்டோம் என்று. தற்போது ஆட்சி பொறுப்பேற்ற பாரதிய ஜனதா கட்சி 41 நாட்களுக்குள்ளாக 3 முறை டீசல் விலையை ஏற்றியிருக்கிறது. 1½ ரூபாய் ஏற்றியிருக்கிறது. அதற்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்கவில்லை என்ற வருத்தத்தை நான் சொல்லவேண்டும். உலகச் சந்தையிலே கச்சா எண்ணெய்யின் விலை ஏறுகின்றபோது, யாராலும் கட்டுப்படுத்த முடியாது, காங்கிரஸ் ஆட்சியிலே கோடிக்கணக்கான பணத்தை மானியமாகக்

கொடுத்து விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி மற்றும் கிராமப்புற மக்களின் வசதிக்காக, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் சொல்வதை நான் மறுக்கிறேன். உயர்த்தப்பட்ட டீசல் விலையைத் திரும்பப் பெறவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையைக் குறைக்க வேண்டுமென்று கடிதம் எழுதியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி விலை குறைந்தால், நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், விலை குறையாதபட்சத்தில் இன்னும் விலை ஏறுகின்றபோதாவது கண்டனம் தெரிவிப்பீர்களாக என்பதனை இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையிலே, சிற்றுந்துகள் இயக்கப்படுவதுபோல். கன்னியாகுமரி மாவட்டத்தில், மலைப் பகுதியிலேயுள்ள, சிறிய கிராமங்களிலே போக்குவரத்து வசதிக்காக சிற்றுந்துகள் இயக்க முன்வருவீர்களா என்பதை உங்கள் சமூகத்தின்முன் வைக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய 90 விழுக்காடு பேருந்துகள் பழுதடைந்துள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியிலே இருந்த நிலையை இங்கே சுட்டிக் காட்டக்கூடாது. கடந்த 5



ஆண்டுகால தி.மு.க. ஆட்சியிலே அப்படி ஒரு சூழ்நிலை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்திலும் இருந்தது. திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகக் கோட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் இந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 248 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் 248 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குட்பட்ட தூத்துக்குடிக்கு 154 பேருந்துகள், திருநெல்வேலிக்கு 257 பேருந்துகள், கன்னியாகுமரிக்கு 248 பேருந்துகள் என மூன்று மாவட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேருந்துகளை வழங்கியிருக்கின்றார்கள். இந்த மூன்று மாவட்டங்களில், உங்களது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் 248 புதிய பேருந்துகளை 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வருத்தப்படக் கூடாது, உண்மையைச் சொல்கிறேன், சென்ற ஆண்டில் 16 புதிய பேருந்துகள் மட்டுமே கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தவறாகச் சொல்லியிருப்பார்கள். நான் உங்களைக் குறை சொல்லவில்லை. 90 விழுக்காடு பேருந்துகள் மோசமான நிலையிலிருப்பதைத் தெளிவுபடுத்தியும், நீங்கள் நம்பாவிட்டால், அதற்கென்று ஒரு நபர் அல்லது ஒரு கமிட்டி அமைத்து அந்த இடத்தைச் சென்று பார்வையிடக் கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இயக்கப்படுகின்ற 1,500–க்கும் அதிகமான பேருந்துகளில் எத்தனை விழுக்காடு பேருந்துகள் சரியாக இயக்கப்படுகின்றன, அவற்றால் எத்தனை விபத்துகள் ஏற்படுகின்றன என்றும் நான் இங்கே கேட்க விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ போகிற போக்கில் இங்கே பேசக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏற்பட்ட விபத்துகளையும், அது குறைந்திருக்கின்ற சதவிகிதத்தையும் நான் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறினேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 248 புதிய பேருந்துகள் வழங்கியிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்துகளைப் புதிதாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், வருகின்ற புதிய பேருந்துகளின்மூலம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய பேருந்துகளைத் தொடர்ச்சியாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அனைத்துப் புதிய பேருந்துகளும் முழுமையாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாகவும், 100 சதவிகிதம் மக்கள் பயணிக்கக் கூடிய பேருந்துகளாகவும் இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தமட்டில் நான் தெளிவாகச் சொல்வேன். உண்மையைச் சொல்வேன். நீங்கள் நல்லது செய்தால் சொல்வேன். இப்பொழுது சென்னையில் ஆட்டோக்கள் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதை வரவேற்கிறேன். மற்ற மாவட்டங்களுக்கும் அதை விரிவுபடுத்துங்கள்; அதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கேட்டுப்பார்த்தால் தெரியும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் உங்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஏற்கெனவே நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். எவ்வளவு பேருந்துகள் இயக்கப்பட்டன, விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் எவ்வாறு குறைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினேன். இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களில் பேருந்துகளினுடைய எண்ணிக்கை உயர்ந்தும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படுகின்ற விபத்துகள் குறைந்திருக்கின்ற ஒரே மாநிலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்தக்கூடிய தமிழ்நாடுதான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரம் இல்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் நான் என்ன பேசியிருந்தாலும் எடுத்துவிடுங்கள். அதை வைக்கக்கூடாது. ஆனால், மனசாட்சியோடு நான் பேசுவதை நீங்கள் வைக்கவேண்டும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற புள்ளிவிவரத்தைக் கேட்டுவிட்டு, பிறகு மனசாட்சியைத் தொட்டுப்பாருங்கள். முந்தைய ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் இயக்கத்தின்போது பேருந்துகளுக்கு ஏற்பட்ட பழுது–ரோட்டிலே போய்க்கொண்டிருக்கும்போது brack down ஆகி நின்ற பேருந்துகள் 5,682. அதே 2010–2011 ஆம் ஆண்டு 427 பேருந்துகள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களுடைய சீரிய நடவடிக்கையால் 2011–2012 ஆம் ஆண்டு அது 317 ஆகக் குறைந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேருந்துகளை மிகச் சிறப்பாக இயக்க வேண்டும், முழுமையாகப் பராமரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு அதன்படி செயல்பட்டதன் காரணமாக 2012–2013 ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இயக்கத்தின்போது ஏற்பட்ட பழுது வெறும் 33 மட்டுமே. 2013–2014 ஆம் ஆண்டும் அதே நிலை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேருந்துகளைச் சிறப்பாக இயக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். இந்த மூன்று ஆண்டுகள், இரண்டு மாதங்களையும் சேர்த்து, கடந்த மாதம் வரை ஒட்டுமொத்தமாக 396 பேருந்துகளில் மட்டும்தான் இயக்கத்தின்போது பழுது ஏற்பட்டிருக்கின்றது. 100 சதவிகிதம் சிறப்பான சேவைகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் இதை நினைத்துப்பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1 மணி 5 நிமிடங்களுக்குதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்றதை விட்டுவிடுகிறேன். இனிமேலாவது எங்கள் மாவட்டத்திற்கு 500 புதிய பேருந்துகளைத் தாருங்கள். எங்கள் மாவட்டத்தை ஒதுக்காமல், எங்கள் மாவட்டத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்யுங்கள் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வரலாற்றில் இல்லாத வகையில், 5 ஆண்டுகளில் வழங்கிடாத பேருந்துகளை மூன்றே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள். முதலில் இதற்கு நீங்கள் நன்றி சொல்லியிருக்கலாம். ஆனால், நீங்கள் நன்றி சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறப்பாகப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், கூடுதல் பேருந்துகளைக் கேட்டிருக்கின்றீர்கள். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்தின்வாரியாக எந்தெந்தப் பேருந்துகள் புனரமைக்கப்பட வேண்டும், எந்தெந்தப் பேருந்துகள் வயது நிரம்பியிருக்கின்றன; குறிப்பிட்ட இயக்கத்தை எட்டியிருக்கின்றன என்பதைத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டமாக இருந்தாலும் சரி, கரூர் மாவட்டமாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் சிறப்பான சேவைகளை, சிறப்பான பேருந்து வசதிகளை வழங்கி இருக்கின்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், சீக்கிரம் முடியுங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்துவிடுகிறேன். பணிமனையிலே spare parts இருப்பு இல்லை. Brake liners கூட இரண்டு வருடங்களாக இல்லை என்ற சங்கடத்தைச் சொல்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இரண்டு பஸ் தர வேண்டும் என்று கேட்டேன், தந்தார்கள். நான் நன்றியைத்தான் சொல்கிறேன். ஆனால், . . .

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பேச வேண்டும் என்பதற்காகப் பேசக்கூடாது. ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்று சொன்னால் பிரேக்டவுன் இந்த அளவிற்கு எவ்வாறு குறையும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 19,110 பேருந்துகள் இயக்கியபோது கடந்த ஐந்து ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இயக்கத்தின்போது ஏற்பட்ட மொத்த பழுது 63,633. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் இந்த மூன்ற ஆண்டு ஆட்சியில் இயக்கப் பேருந்துகளாக 20,684 பேருந்துகள் இயக்க உத்தரவிடப்பட்டு, இயக்கத்தின்போது ஏற்பட்ட மொத்த பழுது 6,940, வெறும் 10 சதவிகிதம்தான் பழுது ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டு சொல்லவேண்டும். ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுமையான சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறார்கள். அதன்மூலம் சிறப்பான பேருந்து வசதிகளை மக்கள் பெற்றுவருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத்தான் பேச வாய்ப்பு தந்திருக்கிறீர்கள். நன்றி. இன்னும் ஐந்து நிமிடங்கள் தாருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் போன்ற ஏனைய பணிமனைகளில் mechanical staff மிகவும் குறைவாக இருக்கிறார்கள். Skilled labourers குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை அதிகமாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திங்கள் நகர், குளச்சல் பணிமனைகளை விரிவுபடுத்தி, நவீனப்படுத்தவும், கருங்கல், காட்டான்துறை பகுதிகளில் புதிய பணிமனைகளை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகளுக்கு டீசல் போடுவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. வெளியில் bunk–ல் சென்று டீசல் போடுவதில் சில பிரச்சினைகள் இருப்பதாக அறிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் எடுத்துவந்து சிறப்பாகச் செயல்பட்டதைத் தடுத்து நிறுத்தியவர்களே நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) Bulk purchase என்று சொல்லப்படுகிற ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்யப்படுகின்ற எந்தப் பொருளாக இருந்தாலும் தள்ளுபடி விலையில், குறைவான விலையில் வழங்குவது நியாயம், இயற்கை. ஆனால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்யப்படுகின்ற டீசலுக்கு இரட்டை விலைக் கொள்கையை கொண்டுவந்த அரசு மத்திய காங்கிரஸ் அரசு; உங்கள் இயக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இரட்டை விலைக் கொள்கையை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடுத்தார்கள். இரட்டை விலைக் கொள்கை காரணமாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு உங்களால் ஏற்பட்ட அந்த விதிகளின்படி, டீசலை மொத்தமாகக் கொள்முதல் செய்யும்போது கூடுதல் செலவினம் ஏற்படுவதைக் கருத்தில்கொண்டுதான், போக்குவரத்துக் கழகங்களுடைய நலனைக் கருதி வெளியே டீசல் கொள்முதல் செய்யப்பட்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றமே இரட்டை விலைக் கொள்கையை விளக்கியிருக்கிறது. எங்களைக் குறை கூறுவது தவறு. முதியவர்களுக்கு இலவச பாஸ் கொடுக்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் சொன்னீர்கள். அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பேருந்துகள் சிறப்பாக இயங்குகின்றன. இன்றைக்கு நவீன பேருந்துகள் இயக்கப்பட்டு, அதிக இலாபம் அவர்களுக்குக் கிடைக்கின்றன. குறிப்பிட்ட நேரத்தில் அவர்களும் கொண்டு சேர்க்கிறார்கள். அப்படிப்பட்ட புதிய நவீன வாகனங்களை அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இயக்க வேண்டுகிறேன். ரூ.50–க்கு டிக்கெட் எடுத்தால் சென்னையில் ஒரு நாள் முழுவதும், எந்தப் பேருந்திலும் பயணம் செய்யலாம். இதுபோன்ற முறையினை அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூ.25–க்கு டிக்கெட் பெற்று, கன்னியாகுமரி மற்றும் பிற மாவட்டங்களில் நாள் முழுவதும் பயணிகள் பயணிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில கிராமங்களில் ஓடுகின்ற பேருந்துகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி, வாராந்திர, மாதாந்திரப் பயணங்கள் செய்ய அந்த அட்டைகளைச் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம்மூலம் சென்னை மாநகர மக்கள் பெறுகின்ற அந்த வாய்ப்பினை, 10 மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தி, அந்தத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது (குறுக்கீடு) இல்லை, நேரம் ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு மற்றதை எழுதித் தந்துவிடுகிறேன். எனது தொகுதியில் ரீத்தாபுரம் பேரூராட்சிப் பகுதியில், சாதன் மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. கடந்த 18–6–2014 அன்று மாலை 5 மணியளவில், மார்த்தாண்டத்திலிருந்து கருங்கல் வழியாகச் சென்னை வரக்கூடிய S.E.T.C. Deluxe Bus பள்ளி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த இரண்டு பிள்ளைகள் மீது மோதியது. அதில் அவர்கள் படுகாயமடைந்து unconscious ஆகி coma stage–ல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ் உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ப்ரியா 11 வயது மற்றும் ஸ்னேகவர்ஷினி 12 வயது, இருவரும் ஏழாம் வகுப்பு படிக்கிறார்கள். அவர்கள் வசதியில்லாதவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன். (குறுக்கீடு) நீங்கள் முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். உரையை முடியுங்கள். தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

பிற்பகல் 1–20

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடில் புதிய ஆர்.டி.ஓ. அலுவலகம் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன். கன்னியாகுமரியிலுள்ள 2 போக்குவரத்துக் கழக அலுவலகங்களிலே தினந்தோறும் சுமார் 500 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதற்குக் கூடுதலாக ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள். உட்காருங்கள்.

**தொகுதிக் கோரிக்கைகள்**

திங்கள் நகரிலிருந்து வேளாங்கண்ணிக்குப் புதிய பேருந்து இயக்கவும், முளகு சந்திப்பிலிருந்து நாகர்கோவிலுக்குப் புதிய பேருந்து இயக்கவும், குளச்சலிலிருந்து திங்கள் சந்தை, கட்டிமாங்கோடு வழி நாகர்கோவிலுக்குப் புதிய பேருந்து இயக்கவும், மணவாளக்குறிச்சியிலிருந்து கேரளா மாநிலம் கொச்சிக்குப் புதிய பேருந்து இயக்கவும், இரவிபுதூர்கடையிலிருந்து மதுரைக்குப் புதிய பேருந்து இயக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட முளகுமூடு பேரூராட்சியில் புதிய R.T.O. அலுவலகம் அமைக்கும் பணியை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சியூட்டியவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆவார்கள். அவர்கள் வழியில் வந்தவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்”

என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஏழைகளின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி வைத்தவர் நம் புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்காக ஒரு நாளின் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்து வருகிறார் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அமைதி, வளம், வளர்ச்சி எனும் தாரக மந்திரத்தைத் தமிழகத்தில் அரங்கேற்றி வீரவரலாறு படைத்திட்ட வெற்றித் திருமகள், (மேசையைத் தட்டும் ஒலி) போர்ப் பரணி பாடும் இன்றைய தமிழகம், நாளைய வரலாறு மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது சிறிய உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழினத்தின் உரிமைக்குக் குரல் கொடுத்து, தமிழர்களின் நலன்காக்கும் தமிழர் குலச்சாமி எங்கள் அம்மா! மங்காத வீரம் கொண்ட மாநிலத்தை ஆளுகின்ற மாதரசியே எங்கள் அம்மா! கலைமகளும் வாழ்த்துகின்ற காவியமே! ஏழைகளின் இதயத்துடிப்பே எங்கள் அம்மா! எண்ணிலாச் சரித்திரத்தின் குவியலே! இல்லார்க்கு இரங்குகிற எங்கள் இதய தெய்வமே, எங்கள் அம்மா! வங்கக் கடலோரம் துயில் கொள்ளும் தங்கத் தலைவனின் கனவுக்கு உயிர் கொடுத்து, கழகத்தைக் கட்டிக் காத்து வரும் கம்பீரச் சிங்கம், எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் மழை பொய்த்தாலும், வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் தாயின் ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்கள்; எண்ணற்ற சாதனைகள். மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு, இங்கு கால்குலேட்டரும் இல்லை, கணினியும் இல்லை. ஏனெனில், எண்ணற்ற சாதனைகள், எண்ணிக்கையில் அடங்காது, இவை நூறாண்டு பேசும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளமை பெருக்க, தரணியே வியக்கும் வகையில் புதுமைகள் படைத்திடவும், மகராசி ஆட்சியின் மதிப்பிற்குரிய பேரவையில் சிலவற்றை எடுத்து இயம்புகிறேன். அம்மாவின் நல்லாட்சியில் ஏழைகளுக்கு விலையில்லா அரிசி; ஏழைப் பெண்களுக்கு தாலிக்குத் தங்கம்; இல்லத்துப் பெண்களுக்கு விலையில்லா மிக்சி–கிரைண்டர்; உழைத்து வாழ்வதற்கு ஆடு–மாடுகள். உண்பதற்கு



'அம்மா உணவகம்'. உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்பதற்கு 'அம்மா உப்பு'; குடிப்பதற்குத் தரமான 'அம்மா குடிநீர்'. குடியிருப்பதற்கு அழகான 'பசுமை வீடுகள்'. படிக்கும் மாணவர்களுக்கோ விலையில்லா 'மடிக் கணினி'. பிணி தீர்ப்பதற்கு 'அம்மா மருந்தகம்'. ஓய்வுக்கு விலையில்லா மின்விசிறி. இந்தியாவிலேயே முதன்முறையாக வறட்சிக்கு நிவாரணம் வழங்கிய ஒரே மாநிலம், தமிழகம் தான், (மேசையைத் தட்டும் ஒலி) என எண்ணற்ற சாதனைகளைப் படைத்தவர் எங்கள் அம்மா. 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடைப்பிடிப்பான்' என்பார்கள். ஆனால், இன்று அற்பனுக்கு வாழ்வு வந்தால் டெல்லியிலும் கொடி பிடிப்பான் என்னும் கதையாகி, தறிகெட்டு அலைந்த மாடாய், தகுதி மீறித் திரிந்து, முழுநேரமும் நிதானம் இன்றி, துன்புற்ற வீட்டில் நன்றி என உளறி, நன்றி கெட்ட கோமாளிக்கு நாடாளுமன்றத் தேர்தலில் முகவரியே இல்லாமல் செய்தார்கள். முகத்திரையைத் தமிழ் மக்கள் கிழித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளை உதிரிகளாக்கி, சூழ்ந்துவரும் சோதனைகளைச் சாதனைகளாக்கிய எங்கள் சாதனைத் தலைவியே, முத்தமிழ் வாழ்வுக்கு முக்காலம் உழைக்கின்ற முழுமதியே, காவேரியை மீட்டு வந்து, முல்லைப் பெரியாறு உரிமையைக் காத்த அன்னையே, நெய்வேலிக்கே வேலி போட்டு நிகரில்லாப் புரட்சிகளை நித்தம் நித்தம் தந்து, மக்கள் நலத் திட்டங்களை மற்ற மாநிலங்களுக்கும், சொல்லித் தந்து, மக்கள் நலத் திட்டங்களை அள்ளி, அள்ளித் தந்த தாய்க்கு அன்னைத் தமிழகம் இரட்டை இலையில் வாக்களித்தது. மூன்றாண்டு ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றி. சென்னை உட்பட அனைத்து மாநகராட்சிகளிலும் கழகத்தின் மேயர்கள், நாடாளுமன்றத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39–க்கு 37 பேர் வெற்றி, இவை யாவும் தங்கள் வழிகாட்டுதலின் தலைமையில் விளைந்த வெற்றிகள் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றார் நம் தானைத் தலைவி, தங்க நிகர் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முந்தைய மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் அவலத்தினால் பெரும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த போக்குவரத்துக் கழகங்களைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி அதிலே புதுமையைக் கண்டவர் நம் பொன்மனத் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் வள்ளலாகவும், வீரமங்கை வேலுநாச்சியாரின் மறு உருவமாகத் திகழும் தங்கத் தலைவியின் சீர்மிகு ஆட்சியில்

போக்குவரத்துக் கழகங்கள் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. அகில இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், நம் தங்கத் தலைவியின் பொற்கால ஆட்சியில் போக்குவரத்துக் கட்டணம் குறைவு என்ற வகையில் இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறது.

பிற்பகல் 1–25

போக்குவரத்துத் துறையின் சார்பில் அகில இந்திய அளவில் உலகமே வியக்கும் வண்ணம் மாபெரும் இரத்ததான முகாம் நடத்தி, அதில் 53,129 பேர் கலந்துகொண்டு கின்னஸ் சாதனை படைத்தார்கள். இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நடைபெற்ற மிகப் பெரிய சாதனையுாகும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால அரசு பதவி ஏற்றதிலிருந்து ரூ.1,026 கோடி செலவில் 6,000 புதிய பேருந்துகள் வாங்க அனுமதி அளித்து, இவற்றில் 4,179 பேருந்துகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. போக்குவரத்தில் புதிய சரித்திரம் படைத்தவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் பராமரிப்பிற்காகப் புதியதாக 68 பணிமனைகளை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு நடவடிக்கை எடுத்து, அவற்றைச் செயலாக்கம் செய்ய முனைந்து செயல்பட்டுவருகிறது.

16,661 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள், தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். போக்குவரத்துக் கழகங்களில் பணி செய்யும்போது இறந்துபோன பணியாளர்களின் 346 வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில், பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது, நம் தானைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான ஆட்சியில்.

போக்குவரத்துக் கழகத்தில் அஞ்சல் சேவைகளை அறிமுகப்படுத்தியதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 44,21,000 ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

4,653 போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 100 கோடியே 19 இலட்சம் ரூபாய்க்கான ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.



மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் விதமாக அடுக்கடுக்கான திட்டங்கள்மூலம் மூன்றாண்டுகாலம் செய்திட்ட சாதனைகளை ஆண்டாண்டுகாலம் அறிவுலகம் பேச வைத்த அரிமா பார்வைக் கொண்ட அறிவுக் கோர்வை எங்கள் மாண்புமிகு அம்மா.

இன்று சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் விதமாக சென்னையில் மோனோ இரயில் திட்டத்தை ரூபாய் 8,500 கோடி செலவில், (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக மூன்று வழித்தடங்களில் 57 கிலோ மீட்டர் தூரத்திற்கு DBFOT முறையில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசு அனுமதி அளித்து, இவை அனைத்தும் விரைவில் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது.

புழுதிவாரித் தூற்றிடும் புல்லுருவிக் கூட்டங்களை நாடாளுமன்றத்தில் பூஜ்யமாக்கி ராஜ்யம் நடத்திடும் பேரறிவுப் பெரியாராம் தமிழகத்தைக் காத்திடும் தேன் தமிழ்த் தேசமே, திராவிடத்துப் பாதையாம், ஈரடியால் உலகளந்த இறைவன் ஈரிலையால் தேசம் ஆள ஈன்றிட்ட பேரறிவாம் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் சீர்மிகு ஆட்சியில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 50 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்குக் கட்டணமில்லா கையடக்க இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு தீட்டியிருக்கும் புதிய சரித்திர சாதனைகள் பல.

நவம்பர் 2011 முதல் 37 பயண வழி உணவகங்கள் தரம் உயர்த்தப்பட்டு, பயணிகள் அறுசுவை உணவு உண்டு, இனிமையான பயணத்திற்கு, அன்னபூரணி மாண்புமிகு அம்மா அவர்களின் தூய அரசு வித்திட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விபத்தில்லா பயணத் திட்டத்தின்கீழ் ரூபாய் 91.52 இலட்சம் மதிப்பில் விபத்தில்லாமல் பணி செய்த ஓட்டுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வள்ளலின் வாரிசாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால அரசு ஆணையிட்டுள்ளது.

[திரு. ஆர். சீனிவாசன்] [2014 ஜூலை 23

பண்டிகைக் கால முன்பணம் ரூபாய் 2,000–லிருந்து, ரூபாய் 5,000 ஆக உயர்த்தி போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வயிற்றில் பால்வார்த்துள்ளது நம் பொன்மனத் தாயின் புதுமை அரசு.

2.16 கோடி ரூபாய் செலவில் பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள பணியாளர் ஓய்வறைகள் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 12 கோடி செலவில் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் கான்கிரீட் தளம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு, வல்லரசு, வலிமையான அரசு முனைப்போடு செயலாக்கம் செய்து வருகிறது.

சரித்திரம் போற்றுகிறது சகாப்தம் படைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை விரிந்த வாசக ஞானம், தெளிந்த ஆங்கிலப் பேச்சு, தளராத தன்னம்பிக்கை, அபூர்வமான அரசியல் ஆளுமை, முற்கால அனுபவம், தற்காலச் சூழல், பிற்கால விளைவுகள் என மூன்று காலங்களையும் அறிந்திருக்கும் ராஜதந்திரம், வீரத்தின் விளைநிலம், ஒன்றரைக்கோடி கழகத் தொண்டர்களுக்கு விழியாகவும், ஏழுகோடித் தமிழர்களின் வாழ்வின் ஒளியாகவும் திகழும் அம்மா எனும் ஆலயமே! (மேசையைத் தட்டும் ஒலி)

பாரி, ஓரி என வரலாறு கூறும் கடையேழு வள்ளல்களைப் படித்திருக்கிறோம். ஏழையெளியவர், மாணவ மாணவியர், முதியோர், பெண்கள், ஆண்கள் என அனைவரின் துயர் துடைக்கும் வாழும் வள்ளல் நீங்கள்தான் தாயே!

அன்று இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் என்று உலகமே கூறியது. இன்று இந்தியாவின் இரும்புப் பெண்மணியாகத் திகழ்பவர் தாங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்து இழந்தவர்கள் நாளை வரும் சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் நாம் பெறப்போகும் 234–க்கு 234 என்ற முழுமையான வெற்றியைக் காணப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகள், துரோகிகள், எத்தர்கள், ஏளனம் பேசியவர்கள், துச்சாதனர்கள் அனைவரும் வாய்மூடி மௌனியாக இருக்கும் நாள் அதுதான். தங்களின் திறமையான ஆட்சியின் பயனால், தங்களின் யூகத்தால் நாம் அடையப்போகும் நிச்சய வெற்றி தாயே.



2014 ஜூலை 23] [திரு. ஆர். சீனிவாசன்]

தரணிப் போற்றும் தங்கத் தாரகையே, தமிழகம் உள்ளளவும் உங்களின் வீர வெற்றி வரலாறு தொடரும். போக்குவரத்துத் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிரிகளின் சதிகளை முறியடித்து எஃகு கோட்டை அமைத்து புனித ஜார்ஜ் கோட்டையை அலங்கரிக்கும் எங்கள் புனிதத் தாய் அம்மா! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் தமிழக மக்களுக்காக அயராது பாடுபட்டு வரும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு, போயஸ் தோட்டத்தின் புனித மாதா, வேதா நிலையத்தின் வேள்வித் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து இடம் அமர்கிறேன். என் தொகுதிக்குட்பட்ட கோரிக்கைகளை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**தொகுதிக் கோரிக்கைகள்:**

ஆற்காடு நகரத்தில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள விளையாட்டுத் திடலை மேம்படுத்தி, உள் விளையாட்டு அரங்கம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஆற்காடு நகரில் இயங்கி வரும் பளுதூக்கும் பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற்று, அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் முதலிடத்தைப் பிடித்து இதுவரையில் 40–க்கும் மேற்பட்டோர் இரயில்வே துறையில் வேலைசெய்து வருகின்றனர். ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் ஹாக்கி விளையாடும் போட்டியில் வெளிமாவட்டங்களுக்குச் சென்று, பெண்கள் திறமையாக விளையாடி, பரிசுகளைப் பெற்று வந்துள்ளனர். இவர்களின் விளையாட்டுத் திறமையை மேம்படுத்தும்பொருட்டு, உள் விளையாட்டு அரங்கம் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பளு தூக்கும் போட்டியில் ஆற்காடு நகரத்தில் உள்ளவர்கள் இந்திய அளவில் கலந்துகொண்டு முதல் பரிசைப் பெற்றுள்ளனர். தமிழகத்தில் செயல்படும் விளையாட்டுச் சங்கங்கள் இரு பிரிவுகளாக இருந்து விளையாட்டில் ஆர்வம் காட்டாமல்

உள்ளனர். தனித் தனியாக இருக்கும் சங்கங்களை ஒன்றிணைத்து ஒரே சங்கமாகச் செயல்பட மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், ஆற்காடு பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரில் புறவழிச் சாலை அமைக்க நில உரிமையாளர்கள் நகராட்சிக்கு நிலம் வழங்கியுள்ளார்கள். எனவே, புறவழிச் சாலை அமைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரைச் சுற்றி பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 3 கால்வாய்கள் செல்வதால், ஆற்காடு நகரின் சுகாதாரம் மாசுபட்டு கொசுக்களின் உற்பத்தி காரணமாகப் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, இக்கால்வாய்களைச் சீரமைத்து ஆற்காடு நகரத்தைத் தூய்மையான நகரமாக மாற்ற ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரத்தில் ஒரு புற்றுநோய் மருத்துவமனை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

200 ஆண்டுகள் பழமைவாய்ந்த காசி விஸ்வநாதர் ஆலயத்திற்குக் கோபுரம் அமைத்து, கும்பாபிஷேகம் செய்வதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் Phase–I, Phase–II ஆகிய பகுதிகளில் சாலை வசதிகளை ஏற்படுத்தித் தந்து, பூங்கா அமைக்க ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஓர் அழகிய பூங்கா அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரில் காய்கறி கழிவுப் பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆற்காடு நகரில் கழிவுப் பொருட்களின் குப்பைகளைப் புதுமையான முறையில் அப்புறப்படுத்தி சுத்தமான நகரமாக்கவும், அந்தக் கழிவுப் பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கவும் ஆற்காடு நகராட்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட சாலைப் பகுதிகளைப் புதுப்பித்து, கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க போதுமான நிதி ஒதுக்கீடு செய்துதருமாறு மாண்புமிகு அம்மா அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகரம் வரலாற்றில் இடம் பெற்ற நகரமாகும். இதை மாதிரி நகரமாக்க தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காட்டில் இயங்கி வரும் பழுதடைந்த நீதிமன்றக் கட்டடத்தை மாற்றி, அருகில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் புதிய நீதிமன்றம் அமைக்க ஆவன செய்யுமாறும், ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், புதிய காவலர் குடியிருப்பு அமைக்கவும், ஆற்காடு ஒன்றியப் பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைக்கவும், ஆற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காட்டிலிருந்து புதூர், இலுப்பை வழியாகச் செல்லும் சாலைகளை அகலப்படுத்தவும், காஞ்சிபுரம் செல்ல புதிய வழித்தடம் அமைக்கவும், ஆற்காட்டிலிருந்து சக்கரமல்லூர், வளவனூர், புதூர் வழியாகக் காஞ்சிபுரத்திற்கும், காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கும் புதிய பேருந்து வழித்தடத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எசையனூர் ஊராட்சியிலிருந்து தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் காவேரிப்பாக்கம் செல்ல பாலாறு குறுக்கே ஒரு மேம்பாலம் அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் உள்ள ஆற்காடு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திமிரி ஆண்கள், பெண்கள், பென்னகர், கலவை பெண்கள், ஆண்கள் அரசினர் மேல்நிலைப் பள்ளிகள், வளையாத்தூர் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால் வன விலங்குகள் உள்ளே புகுந்து நாசம் செய்கின்றன. எனவே, இப்பள்ளிகளுக்குத் தடுப்புச் சுவர் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் உள்ள கலவை, திமிரி, விளாப்பாக்கம் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தி, கழிவுநீர்க்

கால்வாய் அமைத்துத் தருமாறும், திமிரி பேரூராட்சியில் 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஸ்ரீகுமரகிரி கோயிலுக்குச் செல்லும் பாதையைச் செப்பனிட்டு, குடிநீர் வசதி செய்து தருமாறும், திமிரி ஒன்றியப் பகுதியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துத் தருமாறும், வெங்கடாபுரம் அல்லது வரகூர் பகுதிகளில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கலவை பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களான சென்ன சமுத்திரம், வேம்பி, பென்னகர், மாம்பாக்கம், மேலப்பழந்தை, வாழப்பந்தல், குட்டியம், செங்கனாவரம் ஆகிய பகுதிகளுக்குப் பாலாற்றிலிருந்து கிணறு அமைத்து, பைப் லைன் விஸ்தரிப்பு செய்து குடிநீர் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நாகநதி ஆற்றுபாலத்தின் குறுக்கே நாள் ஒன்றுக்கு சுமார் 20 ஆயிரம் மக்கள் சென்று வருகின்றனர். மழைக் காலங்களில் இப்பாலத்தின் வழியாகப் பொதுமக்கள் செல்ல முடியாத நிலையில், நாகநதி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடுக்கம்பாறை அரசினர் மருத்துவமனையில் இரத்தம் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மனநோய் மருத்துவமனை தனியார் துறை வசம் உள்ளது. இதை அரசு மருத்துவமனையில் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஊராட்சியில் 11 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இதை பேரூராட்சியாகத் தரமுயர்த்தி அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்கள், பெண்கள் என 1900 பேர் கல்வி பயின்று வருகிறார்கள். இதைத் தனித் தனியாக ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என பிரித்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய பெருமையைப் பறைசாற்றுவதற்கும், வளர்ச்சியை வெளிப்படுத்துவதற்கும் போக்குவரத்துத் துறை ஒரு மிகச் சிறந்த சாதனம் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தவகையில், தமிழகத்தில் போக்குவரத்துப் புரட்சியை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்குப் பல்வேறு உதாரணங்களை நாம் கோடிட்டுக் காட்ட முடியும். தமிழகத்திலே இருக்கக்கூடிய குக்கிராமங்களுக்கெல்லாம் பேருந்து வசதி செய்துகொடுத்து, இப்படிப்பட்டக் கிராமங்கள் எல்லாம் இருக்கின்றனவா என்கின்ற அளவிற்கு மிகப் பெரிய சாதனையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் பேருந்து நிலையத்திற்குச் சென்று, அங்கு எழுதப்பட்டிருக்கும் கிராமங்களுடைய பெயர்களையெல்லாம் பார்ப்போமேயானால், இப்படிப்பட்ட கிராமங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கின்றனவா என்று வியக்கத்தக்க அளவில் குக்கிராமங்களுக்கெல்லாம் இன்றைக்குப் போக்குவரத்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய ஆலோசனையின்பேரில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மிக அரிய பெரிய காரியங்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு போக்குவரத்துத் துறைமூலம் 53 ஆயிரத்து 129 நபர்கள், 18,439.28 லிட்டர் இரத்த தானம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செய்யமுடியாத அளப்பரிய காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேருந்து நிலையங்களுக்குச் செல்கின்றபோது, குழந்தைகள், பெரியவர்கள், தாய்மார்கள் என அனைவரின் கைகளிலும் அம்மா குடிநீர்தான் இப்படி அனைவரது கைகளிலும் தாகம் தீர்க்கக்கூடிய தண்ணீர்ப் பாட்டிலைப் பார்க்க முடிகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) விலை குறைவானது, தரத்தில் உயர்ந்தது, அம்மா குடிநீர் என்று தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் இன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு வருகின்றபோது,

அவர்களுடைய கைகளிலேயும் அம்மா குடிநீரைப் பார்க்க முடிகின்றது என்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த போக்குவரத்துக் கழகங்களுக்கான தேசிய விருதைப் பெற்றமைக்காக போக்குவரத்துத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் விருதுகளைப் பெறுகின்றன என்று சொன்னால், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்ற ஆக்கமும், ஊக்கமும்தான் காரணங்கள். நிதி, பல்வேறு உத்தரவுகள், எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்று வழிகாட்டி, இப்படித்தான் பேருந்துகள் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும், அது மகத்தான சேவையாக இருக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையைப் பெற்று, பேருந்துகள் இயக்கப்பட்டதன் காரணமாக, தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் விருதுகளைப் பெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய பெருமையைக் காப்பதில், ஒற்றுமையைக் காப்பதில், சட்டம்–ஒழுங்கைப் பேணிக்காப்பதில் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விளங்குகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அடையாள அட்டை கிடைத்த ஒரேயொரு காரணத்தினால்தான், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் இன்றைக்கு நகர்ப்புறங்களுக்கு வந்து தங்களுடைய கல்வியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 1–35

கடந்த காலங்களில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வழியிலே நிற்பதை நாம் பார்த்திருக்கின்றோம். பேருந்துகளினுடைய கூரைகளின்மேல் பயணம் செய்ததையும் பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை மாற்றி, ஒரு நல்ல சூழ்நிலையை, போக்குவரத்துக்கு உகந்த சூழ்நிலையை, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திருக்கிறார்கள் என்பதை உணர்த்தும் வகையில் பல்வேறு கிராமங்களிலிருந்து செல்லக்கூடிய பேருந்துகள் எல்லாம் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் சென்று வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகப் பல்வேறு மக்களும் பயன்பெறுகின்ற வகையில், குறிப்பாக மாணவர்கள், இளைஞர்களெல்லாம் தேர்வுக் காலங்களில் தேர்வு எழுதுகின்றபோது, அவர்களுக்காகச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவது பாராட்டுக்குரியது. பண்டிகைக் காலங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே முன்னின்று போக்குவரத்தைச் சரி செய்து, ஆங்காங்கே இருக்கக்கூடிய பயணிகளெல்லாம் எந்தவிதமான பாதிப்புக்கும் ஆளாகாமல், தங்களுடைய சொந்தக் கிராமங்களுக்குச் சென்று வருவதற்கு அவர்கள் செய்திருக்கக்கூடிய அந்தச் சேவை என்பது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த அளவிற்கு அவரைத் தயார்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெளிநாட்டிலிருந்து தாய்த் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளெல்லாம் போற்றுகின்ற வகையில் பேருந்துகள் அமைந்திருக்கின்றன. ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்கின்றேன். நான் சார்ந்திருக்கின்ற அணைக்கட்டு தொகுதியிலே இருக்கக்கூடிய பொற்கோயிலுக்கு வெளிநாட்டுப் பயணிகளெல்லாம் வருகின்றனர். அவர்கள் வருகின்ற போது, 'போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகளிலே நாங்கள் பயணம் செய்கின்றோம்; தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்க்கின்றோம்; பயணம் வெகு சிறப்பாக இருக்கிறது' என்று சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். நான் அடிக்கடி அந்தக் கோயிலுக்குச் சென்று வருகின்றவன், அந்த வெளிநாட்டுப் பயணிகளோடு நெருங்கிப் பழகுகின்றவன்

என்ற முறையிலே இதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அளவிற்கு இன்றைக்கு நம்முடைய பேருந்துகளெல்லாம் சிறப்பாகவும், சொகுசாகவும் இருக்கின்றன என்பதை இந்தப் பேரவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துக் கழகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஓய்வுபெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு gratuity . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகக் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து வேலூரிலும், கும்பகோணம் கோட்டத்தைப் பிரித்து ஸ்ரீரங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டும் இரண்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அரசாணை (நிலை) எண் 10ல்) போக்குவரத்துத் துறையின் சார்பாகத் தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறையில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள்மீது அதிகமான அன்பும், பரிவும் கொண்டிருக்கக்கூடியவர்கள். அந்த வகையில் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை, அதாவது gratuity தொகையை விரைந்து வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை ‘commutation’–ஐயும் விரைந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை உடனே முடித்துவிடுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** உடனே உரையை முடித்துவிடுகிறேன். ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும், பணியிலுள்ள பணியாளர்களுக்கும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத் தொகையை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய, ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்காக, அந்த மூன்று திட்டங்களுக்கும் சேர்த்து 1,016 கோடி ரூபாய் நிதியை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இன்றைக்கு டீசல் விலை உயர்வினாலும், அவ்வப்போது toll gate–ல் ஏற்படுகின்ற பிரச்சினையினாலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–40

இன்றைக்குக்கூட அதிகாலை 5–00 மணிக்கு வேலூருக்கு அருகிலே இருக்கக்கூடிய பள்ளிகொண்டா, நாட்ராம்பள்ளி போன்ற டோல்கேட்டுகளில், மாதத்திற்கு 50 முறைதான் சென்று வரவேண்டும் என்கின்ற ஒரு சூழ்நிலையில், 50 முறை முடிந்தவுடனேயே அந்த டோல்கேட்டில் பேருந்து நிறுத்தப்பட்டு, அந்த பஸ்ஸிலே பயணம் செய்த பயணிகளுக்கும், அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணியாளர்களுக்கும் மிகப் பெரிய போராட்டம் ஏற்பட்டது. எனக்குத் தகவல் கிடைத்தவுடன்,

நான் விரைந்து சென்று பார்த்தேன். அந்த டோல்கேட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள் மிகக் கொடூரமாக, மிருகத்தனமாக, மனிதாபிமானம் இல்லாமல் பயணிகளிடத்திலே கடுமையாகப் பேசி, அவர்களை அங்கேயே நிறுத்தி வைத்திருந்தார்கள். போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அலுவலர்கள் அங்கே வந்து பேசிய பிறகும்கூட, அவர்கள் சமாதானம் அடையவில்லை. இரண்டு, மூன்று மணி நேரம் கடந்து நான்கரை மணியளவில் பேச்சுவார்த்தை நடத்தி, பிறகு பேசிக்கொள்ளலாம், முதலில் பயணிகள் செல்வதற்கு வழிவிடுங்கள் என்று சொல்லி சமாதானம் செய்து வைத்தேன். இதைச் சொல்வதற்குக் காரணம், கடந்த பல ஆண்டுகளாக ஆறு வழிச் சாலை போடப்படுகிறது என்று சொல்லி மாதம் தோறும் வசூலிக்கப்பட்ட 4,650 கோடி ரூபாய் கட்டணத்தை, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** இது முக்கியமான பிரச்சினை. இன்றைக்குக் காலையில் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட இது தெரிந்திருக்கும் என்று நான் கருதுகின்றேன். ஆகையால், இதைப்பற்றி கண்டிப்பாக விவாதித்தே தீரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டோல்கேட்டில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் செல்கிறார் என்று சொன்னால், அந்தக் காரிலே சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறாரா என்று கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தவுடனே சட்டமன்ற உறுப்பினர்கள் என்றா தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** காந்தியா, நேருவா, இல்லை நம்முடைய மாண்புமிகு முதல்வரா, பார்த்தவுடனே இவர் இன்னார் என்று தெரிந்துகொள்வதற்கு. ஆகையினால், அந்த டோல்கேட்டை தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய நிலை வருவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் மத்திய அமைச்சரவையில் இருக்கின்றபொழுது தமிழகத்திற்கு ஒரு மிகப் பெரிய இழிவை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை, தமிழக மக்களுக்கு இத்தகைய ஒரு துரோகத்தை செய்திருக்கிறார். 2010–2011 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மூலம் சுங்கக் கட்டணமாக செலுத்தப்பட்டது 37 கோடி ரூபாயாக இருந்தது. 2013–2014 ஆம் ஆண்டு 118 கோடி ரூபாயாக அது உயர்ந்து இருக்கிறது. இதற்கும் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிதிகளை வழங்குகின்றார்கள். இது மத்திய அரசு சார்ந்த பணிகள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த டோல்கேட் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படுகின்ற வகையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால் மிகப் பெரிய இழப்பு தமிழக அரசுக்குத்தானே ஏற்படுகிறது. நான் அரசுக்குத்தான் பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடிக்கிறீர்களா அல்லது நான் வேறு உறுப்பினரைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தச் சுங்கச் சாவடி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்றது. தனியார் ஒப்பந்தம் போட்டு, அந்தச் சாலையை அமைத்து, அங்கே அந்தச் சுங்க வரியை வசூல் செய்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துகளை எல்லாம் ஏற்கெனவே அரசின் மூலமாக மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. இது மாநில அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை அல்ல. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலே வருகின்ற சுங்கச்சாவடிகள் 40 இருக்கின்றன. தமிழ்நாட்டிலே தேசிய நெடுஞ்சாலைகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் 43 சுங்கச் சாவடிகள் இருக்கின்றன. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால்தான் இதை அரசால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆதங்கத்தை மைய அரசுக்கு நிச்சயமாகத் தெரிவித்து, அதற்கு ஒரு தீர்வு காண மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக நல்ல பதில் சொல்லியிருக்கிறார்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய ஆதங்கம் அதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** ஏனென்று கேட்டீர்கள் என்றால், அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். நோயாளிகள் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். உங்களுக்கு ஏழு நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடிக்கமாட்டீர்கள். சரி, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். இன்றைக்குக் காலையில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் சொல்கிறேன். இது மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அதிகாரத்திற்கு உட்படுகிற சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாகத் தனியார் பங்களிப்புடனும் அங்கே சுங்கச்சாவடி அமைக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுக்கும் அதற்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாநில அரசுக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பது நம்மைப் போன்றவர்களுக்குத் தெரியும். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்கள்—இன்று காலையிலேகூட அண்ணா பல்கலைக்கழகத்திற்கு கலந்தாய்வுக்கு வரக்கூடிய மாணவர்களெல்லாம் அங்கே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, இது மிக முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடிக்கிறீர்களா, அல்லது அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்கவா? உரையைச், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** இவ்விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு ஒரு நல்லத் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். தற்போது நேரம் 1.45 மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக கருத்துகளையும், ஆலோசனைகளையும் பதிவுசெய்வதற்கான வாய்ப்பை வழங்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெறும் பணியாளர்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பணப் பலன்கள் உரிய காலத்தில் கிடைக்காததால், பல்வேறு சிரமங்களில் சிக்கித் தவிக்கின்றனர். ஓய்வுபெறும் பணியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளோடு ஓய்வுபெறுகின்றனர். ஓய்வுக்குப்பின் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பணத்தைக் கொண்டு பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுக் காணவும், எதிர்காலத்தில் வாழ்வை நிம்மதியாகக் கழிக்கலாம் என்ற எதிர்ப்பார்ப்போடும் ஓய்வுபெறுகின்றனர். ஆனால், போக்குவரத்துக் கழக நிருவாகங்கள் பணியிலிருந்து ஓய்வுபெறுபவர்களை வெறும் கையோடு வீட்டிற்கு அனுப்புவதால் அவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகிறது. ஆகவே, பணியாளர்கள் ஓய்வுபெறும்போது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாண்டுகளில் வழங்கிய தொகை 1,016 கோடி ரூபாய் என்பதை ஏற்கெனவே வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றேன். எஞ்சியிருக்கின்ற தொகைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டுகாலத்தில் வழங்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக இந்த மூன்று ஆண்டுகளில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா, வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏறத்தாழ 18 ஆயிரம் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்களில் இடஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படாததை ஆதாரங்களுடன் காலையில் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளேன். உதாரணத்திற்காக, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர்கள் 1,202 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். 42 முஸ்லிம்களுக்குப் பணியிடங்கள் கொடுக்கவேண்டிய நிலையில் 12 முஸ்லிம்களுக்குத்தான் பணியிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் பணியிடம் நிரப்பும் பணி இன்னும் முழுமையாக நிறைவுபெறவில்லை, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் கும்பகோணம், திருச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற மண்டலங்களிலும் இடஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப் படி ஜூலை, 2013 மற்றும் ஜனவரி, 2014 நிலுவையில் உள்ளன. அதை உடனடியாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதுகுறித்து ஏற்கெனவே இரண்டு, மூன்று உறுப்பினர்கள் பேசி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். வேறு விஷயத்திற்குச் செல்லுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** 2012 ஆம் ஆண்டு வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஆம்பூரிலிருந்து பெங்களூருக்கு நேரடிப் போக்குவரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இயக்கித் தருவதாக வாக்குறுதியளித்தார்கள். அது இன்று வரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மாவட்ட எல்லைக்குள் இயக்கப்படுகின்ற பேருந்து வழித்தடங்கள் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உடனே இயக்கிவிடலாம். இது இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பேருந்துகள் இயக்க எல்லைகளில் வருகின்றது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அடுத்து நடைபெறுகின்ற இரு மாநிலங்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையின்போது, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலும் அதனைச் சுற்றியும் பல்வேறு பகுதிகளில் சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. என்னுடைய தொகுதியிலே நாயக்கனேரிமலை, பனங்காட்டுனேரி, காமனூர்தட்டு போன்ற பகுதிகளிலே முழுக்க, முழுக்க மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். அவர்களுக்குப் பேருந்து வசதிகள் கிடையாது. தனியார் பேருந்து வரும், ஆனால் வராது என்கிற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் ஆம்பூர்



நகருக்குத்தான் அவர்கள் வர வேண்டும். பெண்கள், ஆண்கள் என அனைவரும் மலைவழிப் பாதை வழியாக இறங்கி வந்துதான் செல்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்குச் சிற்றுந்து இயக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கே தனியார் வாகனங்கள் வராததற்குக் காரணம் சாலைப் போக்குவரத்தானது மிகவும் மோசமாக இருக்கின்றது. மூன்று மாதங்களுக்கு முன்புகூட நான் மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, Tribal Welfare நிதியின் மூலமாக அங்கே சாலைப் போக்குவரத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். திட்ட மதிப்பீடும் தயார் செய்யப்பட்டு இந்த ஆண்டே செய்யப்படும் என்ற ஒரு சூழல் இருந்தது. ஆனால், ஏதோ காரணத்திற்காகக் கடைசி நேரத்தில் அது விலக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அந்தப் பகுதிக்கு நல்ல சாலை வசதியை ஏற்படுத்தித் தந்தால் மட்டுமே அங்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அந்த மலைவாழ் பகுதி மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, நல்ல சாலை வசதியை ஏற்படுத்தித் தந்து, அங்கே சிற்றுந்துகளை இயக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–50*

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களிலே சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகின்றீர்கள். அது வரவேற்கத்தக்கது. அதேபோன்று, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற பண்டிகைகளின்போதும் சிறப்புப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்பர் பிளேட் இல்லாமல் இன்றைக்கு அதிக அளவிலே வாகனங்கள் இயக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு, என்னுடைய ஆம்பூர் நகரத்திலேயே நம்பர் பிளேட் இல்லாமல் தண்ணீர் சப்ளை செய்யும் வாட்டர் டேங்கர்கள், டிராக்டர்கள், லாரிகள் மற்றும் ஆட்டோக்கள் இயக்கப்படுகின்றன. இதைக் கடுமையாகச் சோதனை செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்ற ஆண்டு, விழுப்புரம் கோட்டத்தைப் பிரித்து வேலூர் கோட்டத்தைத் தனியாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பர் பிளேட் இல்லாதது போன்ற குறைபாடுகள் உள்ள எத்தனையோ வாகனங்கள்மீது துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதன்மூலம் எவ்வளவு அபராதத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பதும் தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பர் பிளேட் இல்லாமல் வண்டிகள் இன்றும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று விபத்துகளுக்குக் காரணம் ஓட்டுநர்கள். சென்னை மாநகராட்சியில் மட்டும் ஓட்டுநர்கள் கண்டிப்பாக seat belt அணிய வேண்டும் என்று ஒரு கட்டாயச் சட்டம் உள்ளது. தமிழகம் முழுவதும் இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும். சமீபத்தில் விபத்தில் இறந்த மத்திய அமைச்சர் திரு. கோபிநாத் முண்டே அவர்கள்கூட seat belt அணிந்திருந்தால், அவர் ஆபத்திலிருந்து தப்பித்திருக்கலாம், உயிர் பிழைத்திருக்கலாம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே, தமிழகம் முழுவதும் seat belt அணியக்கூடிய ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேருந்துகளில் பயணம் செய்யக்கூடியவர்களிடம் குறை கேட்கும் நிகழ்ச்சி மாதம் இரு முறை நடைபெறும் என்று பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அது வரவேற்கத்தக்கது. அதேபோல பணியாளர்களிடமும் நீங்கள் மாதம் இரு முறை குறைகேட்பு நடத்த வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்கள் வெளியிலே சொல்ல முடியாத அளவுக்கு பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக பதிவு செய்கிறேன். அவர்களுடைய குறைகளையும் கேட்க வேண்டும். எதற்காகச்



சொல்கிறேன் என்றால், அவர்களுக்கு collection target fix செய்யப்படுகிறது. அந்த collection target–ஐ அடையவில்லை என்றால், அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள். லிட்டருக்கு 4.5 கி.மீட்டர்தான் ஒரு பேருந்து கொடுக்கும் என்று அசோக் லேலண்ட் நிறுவனத்தினுடைய பொதுவான கருத்து இருந்தும்கூட 5.25 கி.மீட்டர் இயக்கத்திறன் வேண்டும் என்று அவர்களை வலியுறுத்துகின்றபோது அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கின்றேன். எந்த ஓர் ஓட்டுநருக்கும், நடத்துனருக்கும், தொழில்நுட்பப் பணியாளருக்கும் மன அழுத்தம் கொடுக்கின்ற ஒரு நிலை இப்போது இல்லை. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதுபோன்ற நிலைமைகள் இருந்தன. அவர்களுடைய 8 மணி நேரத்திற்கேற்ப அவர்கள் பணி நேரத்தில் மட்டும் பணி செய்தால் போதும். அதற்குண்டான பணியாளர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பணி நியமனம் செய்ய உத்தரவிட்டு, அவர்கள் பணியில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, அவர்களுக்கு மன அழுத்தம் என்பது எந்தச் சூழ்நிலையிலும் இல்லை. ஓர் ஓட்டுநர் முதல் நாள் வண்டியை ஓட்டுகின்றார். அடுத்த நாள் அவருக்கு விடுப்பு. அதற்கு அடுத்த நாள் வண்டியை ஓட்ட வேண்டும். இதுபோன்ற சூழ்நிலை இருக்கின்றபோது அவர் மருத்துவமனைக்குச் சென்று தன்னுடைய உடலைப் பரிசோதித்து, என்ன கோளாறு இருக்கிறது என்று பார்த்துக்கொள்வது என்பது அவருடைய வேலைப் பளுவின் காரணமாகக் குறைவாக உள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டும், ஓர் ஓட்டுநர், ஒரு நடத்துனர், ஒரு பணியாளர், 45 வயதைக் கடந்த போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளி தன்னுடைய உடலை முழுமையாகப் பரிசோதித்து, அதற்கேற்ப தன்னுடைய உடல் நலனை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியாவிலேயே முதல் முறையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 23

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். 9 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மோட்டல்கள்–நெடுஞ்சாலைகளிலே இருக்கக்கூடிய உணவகங்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். 5 ரூபாய் பிஸ்கட் பாக்கெட் 15 ரூபாய், 1 ரூபாய் தண்ணீர் பாக்கெட் 3 ரூபாய், ஒரு தோசை 70 ரூபாய், ஒரு குழம்பு பாக்கெட் 70 ரூபாய் என்று விற்கப்படுகின்றன. அவை அனைத்தும் தரமற்றவையாகவும், சுகாதாரச் சீர்கேட்டை உண்டாக்கக்கூடிய உணவகங்களாகத்தான் உள்ளன. இவற்றை முறைப்படுத்த வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–55

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் முந்தைய 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்கு வேண்டிய உணவகங்களில் நிறுத்தப்பட்டன. இந்த நிலையை மாற்றி, பயனாளிகளுக்குத் தரமான உணவுகளை வழங்க வேண்டுமென்பதற்காக துறையின் சார்பாக அதிகாரிகள் அங்கு சென்று பார்வையிட்டு, ஆய்வுசெய்து, உணவகங்களுக்குச் சில விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். பயணிகளுக்கு என்ன என்ன தேவையோ அதற்குண்டான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டுமே அனுமதிகளை வழங்குகின்றார்கள். ஆகவே, ஒப்பந்த முறையில் டெண்டர் விடப்பட்டு, டெண்டர் மூலமாகத்தான் அந்த மோட்டல்களிலே இன்றைக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. தி.மு.க. ஆட்சியில் அந்த மோட்டல்களின்மூலம் வந்த வருமானம் யாருக்குச் சென்றது என்று அவர்களுக்கே வெளிச்சம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அந்த மோட்டல்களிலிருந்து டெண்டர்மூலம் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் வருமானம் ஈட்டியுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் எங்கேயாவது உணவிலே குறைபாடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2014 ஜூலை 23] [திரு. வி. செந்தில்பாலாஜி]

சுட்டிக்காட்டினால், துறையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா, நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்யுங்கள். மாண்புமிகு அமைச்சர் நன்றாக பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக வால்வோ பேருந்துகளில் வாகனப் பராமரிப்பு பற்றி மட்டும் கூற விரும்புகிறேன். வேலூரிலிருந்து ஆம்பூருக்கு வரக்கூடிய வால்வோ பேருந்துகளில்கூட பராமரிப்பு சற்று குறைவாகத்தான் இருக்கின்றது. ஆகவே, அதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஓட்டுநர்கள், பணியாளர்கள் ஓய்வறை நவீனப்படுத்தப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்றது. அவர்கள் தங்கக்கூடிய அந்தப் பகுதிகளில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி, கழிவறை, குளியல் அறை, குடி தண்ணீர் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டும். அதேபோல், அவர்கள் செய்கின்ற பணியின் தன்மையானது மிகவும் சூடாக இருக்கக்கூடிய சூழலில் அமைந்துள்ளது. ஆகவே, அவர்கள் நன்றாக ஓய்வு எடுப்பதற்குக் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ஓய்வறைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த 3 ஆண்டு பொற்கால ஆட்சியில் மட்டும் 16 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிமனைகள் மற்றும் பணியாளர்களுடைய ஓய்வறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா, நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துக்கள் வணங்கிடும் கீதையைப்போல்; கிறித்துவர்கள் வணங்கிடும் பைபிளைப்போல்; இஸ்லாமியர்கள் வணங்கிடும் குர்ரானைப்போல்; உலகத் தமிழ் மக்கள் வணங்கிடும் புனிதப் பொக்கிஷம்தான் நீங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்த் தாய் உங்களால்தான் தலை நிமிர்ந்தாள்; தமிழர்களோ உங்களால்தான் பெருமை பெற்றார்கள்.

பாண்டியர்களின் தலைநகரம் மதுரை; சோழர்களின் தலைநகரம் தஞ்சை; பல்லவர்களின் தலைநகரம் காஞ்சி; அம்மா நீங்களோ அறிவின் தலைநகரம். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவுச் சுடராம் அண்ணாவாகவும்; அன்புக் கடலாம் புரட்சித் தலைவராகவும்; பாச ஊற்றாம் அன்னை தெரசாவாகவும், மொத்தத்தில் மூவரின் வடிவாய் வாழும் தங்கத் தலைமைதான் அம்மா நீங்கள். அம்மா! நீங்கள் அகல் விளக்கு அல்ல; அதிசயங்கள் பல நிகழ்த்தும் அற்புத விளக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) பேச்சுக்கு மட்டும் தமிழ் என்று வாழ்பவர்கள் மத்தியில், மூச்சே தமிழாக வாழும் முதல்வர்தான் நீங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழின் வளர்ச்சியாக நான்காம் தமிழாய், அறிவியல் தமிழுக்கு சிம்மாசனம் போட்ட சிந்தனைக் களஞ்சியம்தான் நீங்கள் அம்மா! தேர்தலைப் பற்றி மட்டுமே சிந்திக்காமல், தேசத்தைப் பற்றியே சிந்திக்கும் தேசியத் தலைமை, மக்கள் நேசிக்கும் தலைமை, மக்களை நேசிக்கும் தலைமை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஏழைகளுக்கு உதவிடுவேன், நோயாளிகளிடம் இரக்கம் காட்டுவேன்' என்று காலமெல்லாம் ஏழை மக்களுக்குத் தொண்டு



செய்த தூயவர்தான் அன்னை தெரசா. 'எழுமின், விழுமின், உழைமின்' என்று இளைஞர்களை ஊக்கப்படுத்தி, சமுதாய மறுமலர்ச்சிக்கு அறைக்கூவல் விடுத்தார் சுவாமி விவேகானந்தர். 'வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடினேன்' என்று மனித நேயத்தின் மாணிக்கமாய் விளங்கினார் அருட்பெருஞ்ஜோதி வள்ளலார். 'இரத்தத்தைத் தாருங்கள், நான் சுதந்திரத்தைத் தருகிறேன்' என்று அழைப்பு விடுத்தார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். மக்கள் நலன் காப்பதற்காக, தன் நலனை மறந்து, நாளும் உழைத்து வருகின்றார் நம் மாண்புமிகு அம்மா. திராவிட இயக்க வரலாற்றில் அண்ணன், தம்பி பாசம் வளர்த்தார் அறிஞர் அண்ணா; இரத்தத்தின் இரத்தமே என்று இதய சுத்தியோடு வாழ்ந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; ஆனால், நம் மாண்புமிகு அம்மா அவர்களே தம் தொண்டர்களுக்கு மட்டுமின்றி தமிழக மக்களுக்கும் உறவுகளில் புனித உறவாம், தாய் உறவாய் வாழ்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் 66–வது பிறந்த நாளையொட்டி இரத்த தானம் செய்கின்றோம் என்று போக்குவரத்துத் தொழிலாளர்களும், அவர்தம் குடும்பத்தினரும் இலட்சம் பேர் திரண்டார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஆர்வத்திற்கு அணை போடாமல் செயல்வடிவம் கொடுக்க களம் இறங்கினர் போக்குவரத்துத் துறையினர்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** சென்னை, விழுப்புரம், வேலூர், சேலம், கோயம்புத்தூர், கரூர், திருச்சி, கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 14–2–2014 அன்று மாபெரும் இரத்த தான முகாம்கள் அமைக்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற இந்த உயிர் காக்கும் முகாமிற்கு 'நாங்களும் உறுதுணையாக இருப்போம்' என்று படை திரண்டனர் மாணவக் கண்மணிகளும், இளைஞர்களும். கட்டுக்கடங்காத கூட்டத்தால் 10 மணி நேரத்தில் 53,129 பேரிடம் மட்டுமே, இரத்த தானம் பெறப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது யாராலும் நிகழ்த்த முடியாத சாதனை. இதுவே 24 மணி நேரம் என்றால், இலட்சத்தைத் தாண்டியிருக்கும் இச்சாதனை. ஆம், உண்மையில் இது கின்னஸ் சாதனை, உலக சாதனை.

'எந்த ஒரு செயலையும் உளப்பூர்வமாக, உணர்வுப்பூர்வமான ஈடுபாட்டுடன் செய்தால் அச்செயல் சாதனையாக மாறும்' என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்குக் கற்றுத்தந்த பாடம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவர்களாக கார்ல் மார்க்ஸ், லெனின், மாசே துங், ஃபிடல் காஸ்டிரோ, சேகுவேரா போன்ற பலர் தோன்றினர். ஆனால், எவர் பின்னாலும் குருதிக் கொடையளிக்க குடும்பம், குடும்பமாக இத்தனை இலட்சம் பேர் எங்கும் திரண்டதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிடாமலேயே மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாள் அகிலத்தின் சிறந்த நாளாய்த் திகழ்ந்து உலக சாதனையாகப் பதிவாகியது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உலக சாதனையை அங்கீகரிக்கும் வகையில் கடந்த 17–2–2014 அன்று தலைமைச் செயலகத்தில் தியாகத் திருவடிவாம் மாண்புமிகு அம்மா அவர்களை கின்னஸ் அமைப்பின் பிரதிநிதி திருமதி லூரசியா அவர்கள் சந்தித்து, கின்னஸ் சாதனைக்கான சான்றிதழை வழங்கினார்கள். அந்நாள் எங்கள் வாழ்வின் ஆனந்தத் திருநாள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு மட்டுமல்ல, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், மாணவக் கண்மணிகள், இளைஞர்கள் என அனைவருக்கும் இன்பத் திருநாள் என்பதை இந்த அவையிலே தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நீர்இன்றி அமையாது உலகு'. உலக இயக்கத்திற்கு நீர்தான் முக்கியமானது. உலகில் உள்ள தண்ணீரின் அளவு 97.5 சதவிகிதம். ஆனால், அத்தனையும் குடிப்பதற்கு உகந்த நீரல்ல. 2.5 சதவிகிதம்தான் உலக மக்களுக்கு உதவும் நீராக உள்ளது. மனித உடலில்கூட பாதிக்குமேல் நீர்தான் உள்ளது. அதனால்தான், தமிழர்கள், நதிகளைத் தாயாகக் கருதி, 'அம்மா' என்று அன்பொழுக அழைத்து மகிழ்கின்றனர். புற்றீசல்போல புதிது, புதிதாய் பாக்கெட் தண்ணீராகவும், பாட்டில் தண்ணீராகவும் விற்பனைக்கு வந்த, மாசு நிறைந்தத் தண்ணீரைப் பார்த்து, நோயிலிருந்து மக்களைக் காத்திடவும், பேருந்துப் பயணிகளுக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்கிடவேண்டுமென்றும் குறைந்த விலையில் பாதுகாப்பான 'அம்மா குடிநீர்' உற்பத்தி நிலையத்தினைத் திறந்து வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு லிட்டர் பாட்டில் ரூ.10/– என அதன் விற்பனையையும் தனது திருக்கரங்களால் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15–9–2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.



'அம்மா குடிநீர்' சென்னையிலுள்ள பேருந்து நிலையங்கள், மாவட்டங்களிலுள்ள புறநகர்ப் பேருந்து நிலையங்கள் என மொத்தம் 234 தொகுதிகளுக்குட்பட 304 விற்பனை மையங்கள்மூலம், விநியோகம் செய்யப்படுகின்றன. தொடங்கிய நாள் முதல் ஜூன் 2014 வரை மொத்தம் 3,20,29,546 லிட்டர் தண்ணீரைப் பேருந்துப் பயணிகள் பயன்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ரூ.12 இலட்சம் கோடி அளவிற்கு வரவு, செலவு நிருவாகம் செய்யக்கூடிய மத்திய இரயில்வே துறையில் ரூ.151–க்கு குறைவாகக் குடிநீர் வழங்கமுடியவில்லை. அதிலும் மத்திய இரயில்வே துறை 2009 ஆம் ஆண்டு 'இரயில் நீர்' திட்டத்தைத் தொடங்கும்போது, மத்திய ஆட்சியில் அங்கம் வகித்த தி.மு.க. மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தது. 2009 ஆம் ஆண்டில் மத்திய இரயில்வே துறை ரூ.151–க்கு 'இரயில் நீர்' திட்டம் தொடங்கியபோது தி.மு.க. எதிர்ப்பு தெரிவித்ததா என்றால் இல்லை. இன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டமான "அம்மா குடிநீர்" மக்களிடத்தில் பெற்ற வரவேற்பைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசிப் பார்த்தார்கள்.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்றும் 'காமாலைக் கண்ணுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சள்' என்றும் கிராமத்தில் சொல்வார்கள். மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்ற 'அம்மா குடிநீர்' திட்டத்தைக் குறுகிய மனப்பான்மையோடு பார்க்கிறவர்களுக்கும் அதுபோலவே தெரிந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்னதாய் ஒரு பேருந்து, அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்த பெயர் சிற்றுந்து; மகிழுந்து போலவே பயணியர் மனசுக்கும் மகிழ்ச்சி தரும் சீருந்து; கட்டணம் அதிகம் இல்லை, குறைவுதான்; சேவைக் குறைவு இல்லை, நிறைவுதான்; வாகனம் போவதென்ன விரைவுதான்; வழி நெடுக ஏறும் கூட்டம் மிகுதிதான்; வாகனத்தைச் சீராக ஓட்டிச் செல்ல சிறந்த ஓட்டுநர், பயணிகளைப் பரிவுடனே ஏற்றிச் செல்ல சிறந்த நடத்துநர்; மாண்புமிகு அம்மா தந்த வாகனம், அழகு மிகுந்த வாகனம்; பக்கங்கள் இரண்டிலும் பசுமை ஓவியம் படர்ந்திருக்கும் சிறந்த வாகனம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்னை மாநகரில் அரசுப் பேருந்துகள் தடம் பதிக்க முடியாத இடங்களில் வாழும் மக்களின் நன்மையைக் கருதி, சென்னை

மாநகரில் போக்குவரத்து வசதி கிடைக்கப்பெறாத மூலை முடுக்குகளிலும், இண்டு இடுக்குகளிலும், குடிசைப் பகுதிகளிலும் சென்றுவரும் வகையில் சிற்றுந்துச் சேவையை 23–10–2013 அன்று, முதல் கட்டமாக 50 சிற்றுந்துகள் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

பிற்பகல் 2–05

அதேபோல், மக்களின் தேவையை உணர்ந்து மேலும் 50 சிற்றுந்துகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சென்னை மாநகரில் சிற்றுந்துகளின் சேவைமூலம் அதிக வருவாயை ஈட்டி, பயணிகளை அதிகமான அளவில் ஏற்றிச் சென்று பேருந்துகள் சேவை செய்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் மிகக் குறைந்த கட்டணத்தில் பேருந்துகள் இயக்கப்படும் மாநிலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி நடைபெறும் தமிழ்நாட்டில் மட்டும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காங்கிரஸ் ஆளும் மகாராஷ்டிராவில் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 90 பைசா; கேரளாவில் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 64 பைசா; அதே கேரளாவில் 2010 ஆம் ஆண்டு சி.பி.எம். ஆட்சியில் இருந்தபோது பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 55 பைசா; கர்நாடகாவில் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 59.75 பைசா; ஆந்திராவில் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 59 பைசா மற்றும் குஜராத்தில் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 58.41 பைசாவாகும். ஆனால், அன்னைத் தமிழகத்தில் தமிழர் நலன் காக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கும் பல்வேறு நிதியுதவிகளால் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 42 பைசா மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தி.மு.க. ஆட்சி விட்டுச்சென்ற பெரும் நிதிச் சுமையைச் சமாளிக்க, மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–2014 ஆகிய மூன்றாண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளார்கள். மூன்றாண்டுகளில் டீசல் விலை உயர்வின் காரணமாக,



வழங்கியிருக்கின்ற மானியம் ரூ.1,281 கோடி; ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கிட ரூ.178 கோடி; விபத்து இழப்பீடு வழங்கக் கடன் ரூ.25 கோடி; பேருந்துகளுக்குக் கூண்டு கட்ட மற்றும் நீதிமன்றத்தில் பிணையிலிருக்கும் பேருந்துகளை மீட்பதற்கு; பங்கு மூலதன நிலுவையைச் சரிசெய்வதற்கு; ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்குவதற்கென, இப்படி 2,833 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துக் கழகங்களையும், தொழிலாளர்களையும், மக்களையும் காத்துவருகின்ற கடவுள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2009–2010 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்க வருவாய் ரூ.5,264 கோடியே 3 இலட்சத்திலிருந்து, 2010–2011 ஆம் ஆண்டு ரூ.5,163 கோடியே 58 இலட்சமாகக் குறைந்தது. இதுதான் தி.மு.க. ஆட்சியின் சாதனை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கையால், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்க வருவாய் முறையே 2011–2012 ஆம் ஆண்டு ரூ.5,991 கோடியே 3 இலட்சம்; 2012–2013 ஆம் ஆண்டு ரூ.7,252 கோடியே 40 இலட்சம்; 2013–2014 ஆம் ஆண்டு ரூ.7,337 கோடியே 98 இலட்சமாக உயர்ந்திருக்கின்றது.

அரசுப் பேருந்துகளில் விளம்பரம் செய்யப்படுவதால் பெறப்படும் விளம்பர வருவாய் என்பது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் உயர்ந்திருக்கின்றது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2009–2010 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் விளம்பர வருவாய் ரூபாய் 12 கோடியே 85 இலட்சமாக இருந்தது. 2010–2011 ஆம் ஆண்டு விளம்பர வருவாய் ரூபாய் 11 கோடியே 32 இலட்சமாகக் குறைந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதன் காரணமாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் விளம்பர வருவாய் ஆண்டுக்காண்டு உயர்ந்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு விளம்பர வருவாய் ரூபாய் 12 கோடியே 83 இலட்சம்; 2012–2013 ஆம் ஆண்டு விளம்பர வருவாய் ரூபாய் 16 கோடியே 13 இலட்சம்;

2013–2014 ஆம் ஆண்டு விளம்பர வருவாய் ரூபாய் 16 கோடியே 37 இலட்சமாக உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகங்களின் நிதிச் சுமையைக் குறைக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இதர வருவாயையும் பெருக்கியிருக்கின்றது. விளம்பர வருவாய், குடிநீர் வருவாய், பயணவழி உணவகங்கள், வணிக வளாகங்கள் எனப் பல்வேறு வகைகளிலே இதர வருவாயைப் பெருக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவைகள் மூலமாக, 2011–2013 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 44 இலட்சத்து 31 ஆயிரமும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூபாய் 52 இலட்சத்து 10 ஆயிரமும் வருவாய் ஈட்டப்பட்டு பயணிகளின் வசதிக்காக 37 இடங்களில் பயணவழி உணவகங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக 2011–2013 ஆம் ஆண்டுகளில் 4 கோடியே 67 இலட்ச ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் 4 கோடியே 28 இலட்ச ரூபாய் வருவாயை இந்த உணவகத்தின் மூலமாக ஓராண்டில் மட்டும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியிருக்கின்றன.

மின்னணு தொழில்நுட்ப முறையில் ஏலம் விடுகின்ற புதிய திட்டத்தினை 1–10–2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக, 2011–2012 ஆம் ஆண்டில் 1 கோடியே 97 இலட்ச ரூபாயாக இருந்த இந்த வருவாய், 2013–2014 ஆம் ஆண்டில் 30 கோடியே 72 இலட்ச ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டிகை என்றால் மக்களுக்குச் சொந்த ஊர் செல்ல பயம். அதுவும் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தீபாவளி, பொங்கல் பண்டிகை என்றால் மக்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்லப் பயந்தனர். காரணம், வேலையை முடித்துவிட்டு கோயம்பேடு பேருந்து நிலையம் சென்றால் பேருந்து இருக்காது. விடிய, விடிய காத்திருக்க வேண்டும். விடியற்காலை தடியடி நடக்கும். தீபாவளி தீராத வலியாகிவிடும். இதுதான் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சொந்த ஊர் சென்று பண்டிகை கொண்டாட நினைத்தவர்களின் நிலை. காரணம், கடந்த மைனாரிட்டி தி.மு.க.



ஆட்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.ஐ.டி. காலனிக்கும், கோபாலபுரத்திற்கும் போக்கும் வரத்துமாக இருந்தாரே தவிர, ஐந்தாண்டுகளில் ஒரு நாள்கூடப் பேருந்து நிலையத்திற்குச் சென்றாரா என்றால், கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் சொந்த ஊருக்குச் செல்ல சிறப்புப் பேருந்துகள், சிறப்பு முன்பதிவு மையங்கள், அலுவலர்கள் சிறப்புப் பணியில் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் முகாமிட்டிருந்தனர். எந்நேரமும் கோயம்பேடுக்கு வரலாம், சொந்த ஊருக்குச் செல்லலாம் என்ற நிலையை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பண்டிகைக் காலங்களில் சொந்த ஊருக்குச் செல்பவர்கள் ஆன்லைன்மூலம் முன்பதிவு செய்தனர். இந்தத் திட்டத்தைத் தமிழக மக்களுக்கு வழங்கியிருக்கின்ற தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக, பல்வேறு நிலைகளில், பயணிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து, வருவாயும் உயர்ந்திருக்கின்றது.

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலே பார்க்கின்றபோது, 2012 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு முன்பதிவு செய்தவர்கள் 1,90,299 பேர்; 2013 தீபாவளிப் பண்டிகைக்கு முன்பதிவு செய்தவர்கள் 2,24,719 பேர். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் ஏழு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் போக்குவரத்துக் கழகங்களுக்கு வருவாய் கிடைத்துள்ளது. 2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான சிறப்புப் பேருந்துகளில் ஆன்லைன்மூலம் முன்பதிவு செய்தவர்கள் 1,38,436 பேர். அதன்மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு 4.40 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. 2013 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு, சிறப்புப் பேருந்துகளில் முன்பதிவு செய்தவர்கள் 2,27,291 பேர். அதன்மூலம் போக்குவரத்துக் கழகத்திற்கு 7.27 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. 2014 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு முன்பதிவு செய்த பயணிகள் 2,33,182 பேர். அதன்மூலம் போக்குவரத்துக் கழகங்கள் 7.56 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றம், முன்னேற்றம் என எதிலும் முன்னேற்றப் பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு முன்பதிவில் 10 சதவீதம் கட்டணச் சலுகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்ற இந்தச் சிறப்பான திட்டத்தின்மூலம் இதுவரை 63,755 பயணிகள் 4,920 குழுவாகப் பயணம் செய்தனர். இவர்கள் 10 சதவீதம் கட்டணக் கழிவுச் சலுகையின்மூலம் 18,80,832 ரூபாய் பயனடைந்துள்ளனர். இந்தக் குழு முன்பதிவுப் பயணத்தின்மூலம் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 1,69,27,488 ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளன.

சென்னை மாநகரில் நெரிசல் நேரத்தில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக சிறப்புப் பேருந்துகளைக் கூடுதலாக இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தொலைநோக்குப் பார்வையோடு, மக்களுக்குச் சிறப்பான வசதிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக, சென்னையில் இயங்கிவந்த 134 மகளிர் மற்றும் சிறுவர் பேருந்துகளின் எண்ணிக்கையை 200 ஆக உயர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20–6–2013 அன்று தங்களுடைய திருக்கரங்களால் மக்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பலனாக, 134 பேருந்துகளிலிருந்து 200 பேருந்துகளாக மகளிர் மற்றும் சிறுவர் பேருந்துகள் தற்போது இயக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப வருமானத்திற்குக் குந்தகம் வருகிறதென்றால், காலையில் ஓடிப்போய் கவர்னர் மாளிகைக் கதவைத் தட்டுவார்; மகனுக்கும், மகளுக்கும், பேரனுக்கும் பதவி வேண்டுமென்றால், தர்ணாகூட நடத்துவார், கோட்டையில் அமர்ந்து, கோப்புகளைப் பார்க்காமல், கோடம்பாக்கம் ஸ்டுடியோவிற்குச் சென்று, திருட்டு லாட்டரிக் கூட்டத்தோடு சேர்ந்து காசுக்காக கதை வசனம் எழுதுவார். இவ்வளவு இடத்திற்கும் போனவர், உள்ளங்கை ரேகையும் தேயத் தேய உழைக்கின்ற போக்குவரத்துத் தொழிலாளர்களின் பணிமனைக்கு மைனாரிட்டி ஆட்சி நடத்திய கருணாநிதி எப்போதாவது சென்றதுண்டா? ஏழைத் தொழிலாளர்களின் ஏக்கங்கள் என்னவென்று கேட்டதுண்டா? ஆனால், மூன்றாண்டு காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நான்கு முறை பணிமனைக்கு வருகைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பாளிகளுக்கு உற்சாகமூட்டிய தொழிலாளர் வர்க்கத்தின் பாதுகாவலர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.



பணிமனைக்கு வந்தது மட்டுமல்ல, அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பணிமனைகள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், மூன்றாண்டுகளில் மட்டும் 68 புதிய பணிமனைகள் அமைக்கப்பட்டன. முந்தைய ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட பணிமனைகளின் எண்ணிக்கை வெறும் 10 மட்டுமே.

தூத்துக்குடி, நாகப்பட்டினம், ஊட்டி மற்றும் கரூர் ஆகிய நான்கு மண்டலங்களை இந்த மூன்றாண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிருவாக நலன் கருதி வழங்கியிருக்கின்றார்கள்.

ஸ்ரீரங்கம் மற்றும் வேலூர் ஆகிய புதிய அரசுப் போக்குவரத்துக் கழகக் கோட்டங்களை உருவாக்க குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு இப்பொழுது அறிக்கை தயார் செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய வருவாய் இனங்கள். 2010–2011–ல் இயக்க வருவாய் 5,198.66 கோடி ரூபாய்; இதர வருவாய் 153.51 கோடி ரூபாய்; பேருந்துப் பயண அட்டை வருவாய் 421.63 கோடி ரூபாய்.

அதேபோல, 2010–2011 ஆம் ஆண்டினுடைய செலவினங்கள். டீசல் 2,468.66 கோடி ரூபாய்; Spare Parts, டியூப் மற்றவை 339.24 கோடி ரூபாய்; சம்பளம் 2,723.81 கோடி ரூபாய்; பணிக்கொடை 141.99 கோடி ரூபாய்; தொழிலாளர் நலன் 357.34 கோடி ரூபாய்; வட்டி 247.85 கோடி ரூபாய்; சுங்க வரி 37.76 கோடி ரூபாய்; மோட்டார் வரி தேய்மானம் 992.42 கோடி ரூபாய்; ஆக மொத்தம் 7,309.07 கோடி ரூபாய்.

பிற்பகல் 2–15

இயக்க வருவாய்–2013–2014 ஆம் ஆண்டினுடைய இயக்க வருவாய் ரூ.7,344.84 கோடி. இதர வருவாய் ரூ.169.16 கோடி. பேருந்துப் பயண அட்டை வருவாய் ரூ.652.59 கோடி என அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.8,166.59 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

2013–2014 ஆம் ஆண்டின் செலவினங்கள்—டீசல் ரூ.3,629.09 கோடி; Spare Parts, டியூப் மற்றவை ரூ.466.60 கோடி; சம்பளம் 3,863.85 கோடி; பணிக்கொடை ரூ.231.27 கோடி; தொழிலாளர் நலன் 395.75 கோடி; வட்டி 468.85 கோடி. சுங்க வரி ரூ.118.48 கோடி; மோட்டார் வரி தேய்மானம் ரூ.1,002.89 கோடி; ஆக மொத்தம் ரூ.10,176.78 கோடி செலவினம்.

2010–2011 முதல் 2013–2014 வரையிலான மூன்று ஆண்டு இடைவெளியில் ரூ.2,377.14 கோடி இயக்க வருவாய் உயர்ந்திருக்கின்றது. இதர வருவாய் உயர்வு ரூ.15.65 கோடி. ஆக மொத்தம் ரூ.2,392.79 கோடி வருவாய் உயர்வை ஈட்டியுள்ளன.

2010–2011 முதல் 2013–2014 ஆகிய மூன்று ஆண்டுகள் இடைவெளியில் மொத்த செலவினம் ரூ.2,671.71 கோடி உயர்ந்திருக்கின்றது. இப்படி உயர்வுக்கேற்ப, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தங்களுடைய நிதி நிலையைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து நிதிகளை வழங்கி, போக்குவரத்துக் கழகங்களையும், தொழிலாளர்களையும் காப்பாற்றி வருகின்றார்கள்.

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்ற திருவள்ளுவரின் கூற்றினை மெய்ப்பித்து, முறை செய்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்கவும், நல்ல முறையில் பராமரிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நல்ல முறையில் பேருந்துகளை இயக்குவதால், செயல்பாட்டுத் திறன் முன்னேற்றம் அடைந்துள்ளது.

2010–2011–ல் இயக்கப் பேருந்துகள் 19,110. 2013–2014–ல் இயக்கப் பேருந்துகள் 20,684. 2010–2011–ல் ஒரு நாளைய இயக்க தூரம் 87.59 இலட்சம் கிலோ மீட்டர். 2013–2014–ல் ஒரு நாளைய இயக்க தூரம் 91.20 இலட்சம் கிலோ மீட்டர்.

இருக்கைகள் நிரப்பு விகிதம்—2012–2013 ஆம் ஆண்டில் மாநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் 67.87 சதவிகிதமாகும். இதுவே 2013–2014 ஆம் ஆண்டில் 68.03 ஆக உயர்ந்திருக்கின்றது. 2012–2013 ஆம் ஆண்டில் விரைவுப் பேருந்துகளில் 79.83 சதவிகிதம். இது 2013–2014 ஆம் ஆண்டில் 80.38 ஆக உயர்ந்திருக்கின்றது.



மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6,000 புதிய பேருந்துகளை வாங்க உத்தரவிட்டு, 4,642 பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு, இன்று மக்களின் பயன்பாட்டிற்கான சேவையைச் செய்து கொண்டிருக்கின்றன.

மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,436 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். 100 சிற்றுந்துகள்மூலம் 40 வழித்தடங்கள் என இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் சிற்றுந்துகளின் வழித்தடங்களோடு சேர்த்து 1,476 புதிய வழித்தடங்களில் மக்களுடைய பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல, இயக்கப் பேருந்துகளின் பழுது நீக்கம் என்பது, 2006 முதல் 2011 வரையிலான கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுகளில் 63,633. இந்த மூன்று ஆண்டுகளில் இயக்கத்தின்போது ஏற்பட்ட பழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கைகளினால் 6,592 ஆகக் குறைந்துள்ளது.

விபத்துகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோதும், முந்தைய ஐந்தாண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பேருந்துகள் முழுமையாக, சரியான முறையில் பராமரிக்காமல், சுத்தம் செய்யாமல் இயக்கப்பட்டதன் காரணமாகத்தான் விபத்துகள் அதிகமாக ஏற்பட்டன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரியான முறையில் பேருந்துகளைப் பராமரித்து, சுத்தம் செய்து மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய பேருந்துகளாக, முழுமையாகச் செல்லவேண்டுமென்று ஆணையிட்டு, அந்தப் பராமரிப்பின் காரணமாக, 2011 முதல் 2014 வரையிலான மூன்று ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் விபத்துகளினுடைய எண்ணிக்கை 20,339. ஆனால், இது கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் 41,163 ஆக இருந்தது.

விபத்துகளில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 3,657 ஆக இருந்தது. அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டங்களால் உயிரிழப்பு எண்ணிக்கை சதவிகிதம் என்பது ஒவ்வோர் ஆண்டும், படிப்படியாகக் குறைந்து வருகின்றது

என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முழு உடல் பரிசோதனைத் திட்டம். மழையில் நனைந்து கொண்டு வீட்டிற்கு வரும் மகனைப் பார்த்து, அப்பா கேட்டார் 'அறிவு இல்லை, குடையை எடுத்துக்கொண்டு போயிருக்கலாமே' என்று. அண்ணன் கேட்டான், 'மழை வருகிறது, நின்று விட்டு வர வேண்டியதுதானே' என்று. தம்பி சொன்னான், 'இரண்டு நாட்கள் மழை பெய்யும் என்று இரமணன் சொன்னதால், விடுப்பு எடுக்க வேண்டியதுதானே' என்று. ஆனால், தாய் மட்டும் 'மழையில் நனைந்தவனை துவட்டுவதற்குத் துண்டு எடுத்துக்கொடுத்து, தலையை துவட்டிவிட்டு, சுக்கு காப்பி கொடுத்து, பிள்ளையைப் பாதுகாத்தார்'. அதுபோல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தாயாக இருந்து போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் உடல் நலனில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–20

போக்குவரத்துத் தொழிலாளர்களின் பணித் தன்மை காரணமாக, அடிக்கடி உடல் நலம் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் விதமாகவும், உரிய நேரத்தில் உரிய சிகிச்சைப் பெறுவதற்கு ஏதுவாகவும், 45 வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஓட்டுநர்களுக்கும் இலவசமாகப் பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் முழு உடல் பரிசோதனை செய்துகொள்ளும் திட்டத்தை 2012 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து 2012–2013 ஆம் ஆண்டில், 21,885 ஓட்டுநர்கள் முழு உடல் பரிசோதனை செய்து பலனடைந்துள்ளார்கள். தொழிலாளர்களைக் காக்கின்ற தெய்வம், காக்கும் கடவுள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் இந்தத் திட்டம் 45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2–7–2014 அன்று ஆணையிட்டதன்பேரில் 24,643 பேர் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலமாக 45 வயதிற்கு மேற்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துத் தொழிலாளர்களும் தொடர்ந்து பயன் பெற்று வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



இந்தியாவிலேயே முதன்முறையாக 45 வயதிற்கு மேற்பட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் தங்களுடைய உடலைப் பரிசோதித்துக் கொள்வதற்கென்று வழங்கியிருக்கின்ற இந்தச் சீரிய திட்டம் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில், 23–10–2013 அன்று சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற மிகப் பெரிய விழாவில் கலந்துகொண்டார்கள். அவ்விழாவில், மாண்புமிகு அம்மா அவர்கள், 52,557 ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு, தி.மு.க. ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை மற்றும் விடுப்பு ஒப்படைப்புத் தொகை என அனைத்தையும் சேர்த்து 257 கோடி ரூபாய்க்கான காசோலைகளைத் தங்களுடைய திருக்கரங்களால் நேரில் வழங்கி கௌரவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 7,049 ஓட்டுநர்கள், 8,406 நடத்துநர்கள், 1,538 ஓட்டுநர் உடன் நடத்துநர்கள் மற்றும் 2,388 தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோரைப் புதிதாகப் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி, பணி நியமனம் செய்யப்பட்ட அவர்கள், இன்று தங்களுடைய பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, நீண்ட நாட்களாகப் பணி வரன்முறை செய்யப்படாமலிருந்த 349 வாரிசுதாரர்கள், 5,768 பதிலி நடத்துநர்கள் மற்றும் 5,897 பதிலி ஓட்டுநர்கள் ஆகியோரின் பணிகள் வரன்முறை செய்யப்பட்டுள்ளன.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் உழைக்கின்ற தொழிலாளர்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டனர். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், உழைக்கின்ற தொழிலாளர்களின் உழைப்பிற்கேற்ப பதவி உயர்வு பெற வேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மூன்று

ஆண்டுகளில் வழங்கியிருக்கின்ற பதவி உயர்வுகளின் எண்ணிக்கை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது வழங்கப்பட்ட பதவி உயர்வுகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது; பதவி உயர்வு பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 2008–2009 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் 1,184 தொழிலாளர்கள் பதவி உயர்வினைப் பெற்றனர். இது, 2009–2010 ஆம் ஆண்டில் 876 ஆகக் குறைந்தது. 2010–2011 ஆம் ஆண்டில் 877 ஆக இருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டில் 1,039 பேருக்குப் பதவி உயர்வும், 2012–2013 ஆம் ஆண்டில் 1,276 பேருக்குப் பதவி உயர்வும், ஏப்ரல் 2013 முதல் ஜூன் 2014 வரை 1,564 பேருக்குப் பதவி உயர்வும் வழங்கப்பட்டன. உழைக்கின்ற தொழிலாளர்களுக்குப் பதவி உயர்வினை வழங்கி, அவர்களைக் கௌரவித்து, உழைப்பிற்கு அங்கீகாரம் தந்திருக்கின்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்தப் பேரவையில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனைகள் புனரமைப்பு, தொழிலாளர்களுடைய ஓய்வறைகள் மேம்பாடு போன்ற பல்வேறு நிலைகளில் பணிகளைச் செய்ய உத்தரவிட்டு, இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 16 கோடியே 84 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். ஓய்வறைகள் மேம்பாடு, பணிமனைகள் மேம்பாடு என்ற பல்வேறு நிலைகளில் அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று, நிறைவு பெற்றிருக்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சீருடை மற்றும் காலணிகள் வழங்குவதில் முந்தைய காலங்களில் இருந்த நடைமுறையை இரட்டிப்பாக்கி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். வருடத்திற்கு 2 செட் சீருடை என்று இருந்ததை மாற்றி, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலன் கருதி, 3–5–2013 முதல் 1 வருடத்திற்கு 4 செட் சீருடை என உயர்த்தி வழங்கியிருக்கின்ற தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 2 வருடத்திற்கு 3 ஜோடி காலணி அல்லது 1 ஜோடி ஷு என்றிருந்ததை 1 வருடத்திற்கு 2 ஜோடி காலணி அல்லது 1 ஜோடி ஷு என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள்.





மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிலாளர்கள் நலன் கருதி, வழங்கியிருக்கின்ற இத்திட்டத்தின் மூலமாகத் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

பிற்பகல் 2–25

ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கான நிதி ஒதுக்குவதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்குத் தேவையான நிதிகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த 5 ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்தத் தொகை ரூ.928.86 கோடியாகும். தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் இந்த மூன்றாண்டுகளில் அதிகமாக ரூ.1,016.38 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விபத்தின்றி பணிபுரிகின்ற ஓட்டுநர்களுக்கு வெகுமதி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் மட்டும் ரூ.5.56 கோடி ஒதுக்கப்பட்டு, 55,240 ஓட்டுநர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி–மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய ஆளுமையின்கீழ், தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. மனித வாழ்வியலில் வளமான வாழ்வு என்பது நாட்டின் வளர்ச்சியினை மையப்படுத்தியே அமைந்துள்ளது. வளர்ச்சி என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக, மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இன்றியமையாத ஒன்றாகவே உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினைச் சார்ந்து, அவர்களின் பிற தேவைகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. குறிப்பாக, ஆண்டுதோறும் பெருகிவரும் வாகனப் போக்குவரத்து என்பது இன்றியமையாத ஒன்றாகவே இருக்கின்றது. கிராமங்கள், நகரங்கள் என மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கியமான சேவையாக போக்குவரத்துச் சேவை அமைந்துள்ளது. தமிழக மக்களின் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012–2013 ஆம் ஆண்டினைக் காட்டிலும், 2013–2014 ஆம் ஆண்டில் வாகனங்களின் எண்ணிக்கை 17 இலட்சம் அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. அதேநேரத்தில் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்வகையில், இயக்கூர்திகள் சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்பட்டதன் விளைவாகவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் மூலமாகவும், 2012 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2013 ஆம் ஆண்டு 1,519 சாலை விபத்துகளும், 568 உயிரிழப்பு ஏற்படுத்தும் விபத்துகளும், விபத்தினால் உயிரிழப்பு எண்ணிக்கை 612 ஆகவும் குறைந்திருக்கின்றது. நடப்பாண்டில் நடத்தப்பட்ட சாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்தும், அனைத்துத் தரப்பு மக்களிடையே, அவர்களின் உயிர், உடைமை மற்றும் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதத்தில், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, 7 நாட்களில் 7 சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பொதுமக்களின் கவனத்தினை ஈர்க்கும்வகையில், அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வுத் தொடர்புடைய புகைப்படக் கண்காட்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், சாலைப் பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் ஏந்திச் செல்லும் நடைப் பேரணிகள் நடைபெற்றன. ஓட்டுநர்களுக்கு இலவச மருத்துவச் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றன. சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய சிறு கையேடு மற்றும் துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களிடையே வழங்கப்பட்டன. சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகம், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி என பள்ளி மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, 'சாலைப் பாதுகாப்பை கடைப்பிடிப்பேன்' என்ற உறுதிமொழி எடுக்கின்ற நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். சாலைப் பாதுகாப்பிற்கு தனிக் கவனம் செலுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

குறைந்தபட்சம் 10 அல்லது அதற்கு அதிகமாக உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளை ஆய்வு செய்வதற்குக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மனித உயிர் விலைமதிப்பற்றது என்பதற்கு முன்னோடியாக, இந்தியாவிலேயே, முதன்முதலாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 2002 ஆம் ஆண்டில்,



தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 50 கிலோ மீட்டர் தூர இடைவெளியில், 'அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள்' என்ற திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டு, Golden hour–என்று சொல்லக்கூடிய அந்தப் பொன்னான நேரத்தில் இதுவரை 1,39,365 உயிர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பழகுநர் உரிமம் பெறுதல், ஓட்டுநர் உரிமம் பெறுதல், வாகனங்களைப் பதிவு செய்தல், வரி செலுத்துதல், அனுமதிச் சீட்டு பெறுதல் சம்பந்தமான பணிகளை மேற்கொள்ள தங்கள் இருப்பிடத்திலிருந்து நீண்ட தொலைவு பயணிக்க வேண்டிய நிலையினைத் தவிர்த்து, தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே தங்கள் பணியினை முடித்துக்கொள்ளும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 18 புதிய பகுதி அலுவலகங்கள், 16 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 1 துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம், 4 இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்த அனைத்து அலுவலகங்களையும் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு, சேவைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்குச் செல்லும் வாகனங்களைப் பல்வேறு துறைகள்மூலம் வெவ்வேறு இடங்களில் நிறுத்தி சோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைப்பதன்மூலம் சோதனை சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் அதிநவீன தொழில்நுட்பத்தில் ஒரே இடத்தில் மேற்கொள்வதால், பணிகளை மிக விரைவாகவும், வாகனங்களின் நீண்ட தூர நெரிசலைத் தவிர்க்கவும் முடிகிறது. இதற்காக முதன்முதலாக ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு உள்வரும் தேசிய நெடுஞ்சாலையில், ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்குச் செல்லும் வாகனங்கள் பல்வேறு துறைகள்மூலம் வெவ்வேறு இடங்களில் நிறுத்தி சோதனை செய்வதைத் தவிர்க்க தேசிய நெடுஞ்சாலைகளில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

அமைக்க முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு 10—7—2008—ல் கொள்கை அளவில் அறிக்கையினை வெளியிட்டது.

பிற்பகல் 2—30

10—7—2008 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை, 2008, 2009, 2010, 2011 வரை, கடந்த தி.மு.க. ஆட்சி முடியும் வரை, இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கவில்லை; இந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தம் போடவில்லை; இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இத்தகைய சிறப்பான திட்டத்தின்மூலம், அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, ஒரே இடத்தில் இதுபோன்று வாகனச் சோதனை செய்வதன்மூலமாக, அரசுக்கும் வருவாய் வரும்; தவறு செய்யும் வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தி, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கவும் முடியும் என்பதை உணர்ந்து, இந்தத் திட்டத்திற்காக 19—4—2013 அன்று, 109 கோடியே 46 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்து, அது தொடர்பான பணிகள் தற்போது மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணிகள் ஏப்ரல் 2015—க்குள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பணிகளை விரைந்து முடிக்க, மின் ஆளுமை நடவடிக்கை அனைத்து அலுவலகங்களிலும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை அமைப்புகள்மூலம், இணைவமைத்தல்/தொடர் அமைத்தல் தொடர்பான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், நேரடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குச் செல்லாமல், வீட்டிலிருந்தபடியே போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி மற்றும் கட்டணம் செலுத்தும் முறை, 19—6—2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதேமாதிரியான வசதிகள் போக்குவரத்து வாகனங்களுக்கும், 25—10—2013 முதல் விரிவுபடுத்தப்பட்டன. இந்தச் சேவைகள்மூலம், 2013—2014 ஆம் ஆண்டில் 1,397.30 கோடி ரூபாய் வருவாயை ஈட்டியுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருந்த 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 6 பகுதி அலுவலகங்கள் மற்றும் ஒரு சோதனைச் சாவடி ஆகியவற்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 16



கோடியே 46 இலட்சம் ரூபாய் நிதியை அந்தக் கட்டடப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்து வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, போக்குவரத்துத் துறை வரலாற்றில், முதன்முதலாகப் பகுதி அலுவலகங்களுக்கு 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில், 52 புதிய ஜீப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்தத் துறையிலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர்கள், ஒரு விபத்து ஏற்பட்டால், அந்த இடத்திற்கு ஆய்வுக்குச் செல்ல வேண்டுமென்றால் அல்லது மற்ற வாகனங்களை ஆய்வு செய்யச் செல்ல வேண்டுமென்றால், அவருக்குச் சொந்தமான இருசக்கர வாகனத்தில் செல்லவேண்டும். இதுவரையில், தமிழகத்தில் போக்குவரத்துத் துறை வரலாற்றில், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அரசின் சார்பில் ஜீப்புகள் வழங்கப்பட்டன. அவர்கள் அந்த வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு, பகுதி அலுவலகங்களுக்கு ஜீப்புகள் இல்லை. அந்த நிலையை மாற்றவேண்டும்; அனைத்து ஆய்வாளர்களும் மிகச் சிறப்பான முறையில் பணியைச் செய்ய வேண்டுமென்பதற்காக, வாகனங்களைச் சோதனை செய்ய வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக போக்குவரத்துத் துறையில் உள்ள பகுதி அலுவலகங்களுக்கு, மோட்டார் ஆய்வாளர்களுக்கு ஜீப்புகளை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, பள்ளிகளுக்குச் செல்லும் சிறார்களின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு, சிறப்பு ஆய்வுக் குழுமம் ஒன்றின்கீழ், 19,261 பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, 1,681 வாகனங்களில் குறைபாடுகள் கண்டறியப்பட்டு, சாலையில் ஓட்டுவதிலிருந்து அவை தகுதி நீக்கம் செய்யப்பட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளில் அதிக, கட்டணம் வசூலித்த 38 ஆம்னி பேருந்துகள்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் அதிகக் கட்டணம் செலுத்தி அல்லல்பட்ட பொது மக்களுக்கு, ஆம்னி பேருந்துகளுக்கு இணையான போக்குவரத்து வசதிகளை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். நீண்ட நாட்களாகப் பொது மக்களின் தீராத குறையாக இருந்த ஆட்டோ கட்டணம், சிறப்புக் குழுவினரால் சீரமைக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய சீரிய நடவடிக்கையால் சென்னை மக்களுக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையில் ஏற்படுகின்ற விபத்துகளைக் கண்டறிந்து, அந்த இடங்களை ஆய்வு செய்து, அதற்குத் தேவையான பணிகளைச் செய்வதற்கு சாலைப் பாதுகாப்பு நிதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆட்சியில் வழங்கப்படுகிறது. டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநிலப் போக்குவரத்து அமைச்சர்கள், துறை அதிகாரிகள் கூட்டத்தில் மற்ற மாநிலங்கள் தமிழர்கத்தைப் பார்த்து, எங்களுக்கும் நிதி வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு மத்திய அமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சாலைப் பாதுகாப்புத் திட்டத்தை மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்ற வேண்டுமென்று அந்தக் கூட்டத்திலே வலியுறுத்திப் பேசினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாலைப் பாதுகாப்பு நிதியின்மூலம், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, விலை மதிப்பற்ற மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட சாலைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2011 வரை ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை 73.80 கோடி ரூபாய் மட்டுமே. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 முதல் 2014 வரை, 235 கோடி ரூபாய் நிதியினை சாலைப் பாதுகாப்பு நிதியாக, தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயப்பன் அமரும்போது, புலிக்கும்கூட புது மரியாதை பிறக்கிறது; எலி மீது பிள்ளையார் ஏறும்போது, அதற்கும்கூட ஏகமரியாதை கிட்டிவிடுகிறது; பைரவர் குந்தும்போது நாய்க்கும்கூட நாட்டில் மரியாதை பிறந்துவிடுகிறது; உலகளந்த பெருமாள் உட்காரும்போது கழுகுகளுக்கும்கூட கௌரவம் வந்துவிடுகிறது. இப்படி, தெய்வம் உட்காரும்பொழுது, பூவோடு சேர்ந்த நார்போல, விலங்குகளுக்குக்கூட வெகுமதிகள் கிடைக்கின்றன. ஆனால், இந்த மரியாதைகளை தங்களுக்குக் கிடைத்திட்ட தனி மரியாதை என்று எண்ணிய தண்ணி வண்டிகளுக்கு இப்பொழுது நிதர்சனம் புரிந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)



வெற்றித் திருமகளாம் எங்கள் அம்மா, சுட்டிக் காட்டினால் மட்டும்தான் எதுவும் வெற்றிச் சின்னம். வெற்றித் திருமகளாம் எங்கள் அம்மா சுட்டிக் காட்டினால் மட்டும்தான் எதுவும் வெற்றிச் சின்னம். (குறுக்கீடுகள்) இல்லையேல், அது வெற்றுச் சின்னம். மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடு ஏறெடுத்துப் பார்த்தால், முளைக்க முடியாத கட்சியும் முன்னுக்கு வரும்; எழுந்திருக்க முடியாத கட்சியும் எதிர்க்கட்சியாகும். (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் சிலர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து கூச்சலிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கு வந்து கை நீட்டிப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இப்படி கை நீட்டிப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது முறையல்ல.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது? (குறுக்கீடுகள்) நான் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னால், எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்பதைப்போல் அவர்களாகவே உணர்ந்துகொண்டு வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்கள்.

[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. க. பாண்டியராஜன், திரு. சி. மைக்கேல் ராயப்பன், திருமதி ஆர். சாந்தி தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் கருத்துகளை இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றேன்.

வெற்றித் திருமகளாம் எங்கள் அம்மா, சுட்டிக் காட்டினால் மட்டும்தான் எதுவும் வெற்றிச் சின்னம். இல்லையேல் அது வெற்றுச் சின்னம். மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடு ஏறெடுத்துப்

பார்த்தால் முளைக்க முடியாத கட்சியும் முன்னுக்கு வரும்; எழுந்திருக்க முடியாத கட்சியும் எதிர்க்கட்சியாகும்; (மேசையைத் தட்டும் ஒலி) பாசத்தோடு பார்த்தால் பல்லக்கு ஏறும்; பகை கொண்டு பார்த்தால், பாடைதான் ஏறும். இப்பொழுது இந்த விவரம் விளங்க வேண்டியவர்களுக்கு விளக்கமாக விளங்கியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறு கதையை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இரண்டு பேர் இரயில்வே பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ஒரு இரயில் வருகிறது. அந்த இரயிலிலே ஒருவர் ஏற முயற்சிக்கின்றார். அப்படி ஏற முயற்சிக்கின்றபொழுது. இன்னொருவர் அவரது முதுகைத் தட்டி, இந்த இரயிலில் கட்டணம் அதிகமாக இருக்கும், அடுத்த இரயில் வருகின்றபொழுது. ஏறிக் கொள்ளலாம் என்று சொல்கின்றார். அதற்கு அவர் சொல்கிறார், நாங்களெல்லாம் வெத்து வேட்டு, அதனால்தான் நான் இந்த இரயிலிலே ஏறுகிறேன் என்று சொல்லி, இப்பொழுது 'வாக்–அவுட்' செய்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் வேட்டையிட்டு, மற்றவர் நிலத்தை ஆட்டையிட்டு, மக்கள் பணத்தைத் தேட்டையிட்டு, பெற்ற மகளைச் சிறையிலிட்டு, பேதை மனைவியைக் கூண்டிலிட்டு, அண்ணன் தம்பியை மோதவிட்டு, தொண்டர்களைக் காயவிட்டு, குண்டர்களை மேயவிட்டு, கண்ணான தன்மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டு, கொள்கையிலே ஓட்டையிட்டு, கோட்டையைக் கோட்டைவிட்ட கருணாநிதி; (மேசையைத் தட்டும் ஒலி) இனி டெல்லி பக்கம் தலைவைத்துப் படுக்கக்கூடாது என்று வாக்குச்சீட்டுமீது ஆணையிட்டு, வழியனுப்பி வைத்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். 39–க்கு 39 தோல்வியைப் பெற்ற பின்பும், மக்கள் தீர்ப்பை மதிக்காமல் வெற்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். 'கடலில் தள்ளினால் கட்டையாவேன், மணலில் தள்ளினால் மட்டையாவேன்' என்று என்ன சொல்லியும் கருணாநிதி இனி மக்களை ஏமாற்ற முடியாது. என்ன செய்தும் கருணாநிதி இனி மக்கள் ஆதரவைப் பெற்றிட முடியாது. மாண்புமிகு அம்மா அவர்களை இனி ஒருக்காலும் வென்றிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தலைவர் ஒரு முறை டெல்லி செல்கிறார். எதற்கு? பேரனுக்குப் பதவி வாங்க. மறு முறை டெல்லி செல்கிறார். எதற்கு? பிள்ளையின்



பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு. இன்னொரு முறை டெல்லி செல்கிறார். எதற்கென்றால், பிள்ளைக்கு பெயில் வாங்க. இன்னொருவர் டெல்லி செல்கிறார். எதற்கென்றால் மச்சானுக்குப் பதவி வாங்க. ஆனால், எங்கள் அம்மா டெல்லி செல்கிறார்–காவேரி உரிமையை மீட்க, (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு முட்டுக்கட்டையைத் தகர்க்க, தமிழகத்திற்கான கூடுதல் ஒதுக்கீடு குறித்து கோரிக்கைகள் வைக்க, கருணாநிதியால் கைவிட்டுப்போன கச்சத் தீவை மீட்க. இப்படி, என் வாழ்வெல்லாம் மக்களுக்கே என்று தன் ஆயுளையே தந்து உழைக்கும், தமிழ் இனம் பெற்ற தவப் பயன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவோடு புதிய அறிவிப்புகளை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 2–40

## இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்

**1. வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உள்ள பழைய கணினிகளை மாற்றி புதியன வழங்குதல் (Replacement of old computers in Regional Transport Offices and Unit Offices)**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட கணினிகள் பழுதடைந்துள்ளதைக் கருத்தில்கொண்டு பொதுமக்களுக்கு காலதாமதமின்றி விரைவாகச் சேவை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி ரூ.1.73 கோடி செலவில் புதிய கணினிகள் வழங்கப்படும்.

**2. திருவள்ளூர் மாவட்டம்—ஊத்துக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம்—குருவிநாயனப்பள்ளி ஆகிய இடங்களில் புதிய சோதனைச் சாவடிகளை உருவாக்குதல் (Creation of new Check Posts at Uttukottai in Thiruvallur District and Kuruvinayanapalli in Krishnagiri District)**

அண்டை மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டின் எல்லையில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளைத் தவிர்த்துவிட்டு, மாற்று வழித்தடங்களின் வழியாக தமிழகத்திற்குள் நுழையும் வாகனங்களைத் தணிக்கை செய்து, வரி ஏய்ப்பை; தடுக்கும்

பொருட்டும், மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை மீறும் வாகனங்களைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும், இதன்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டும் பொருட்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, ரூ.1.43 கோடி செலவில் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், குருவிநாயனப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் உருவாக்கப்படும்.

**3. வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உள்ள பழைய அச்சுப் பொறிகளை மாற்றி புதியன வழங்குதல் (Replacement of old printers in Regional Transport Offices and Unit Offices)**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட அச்சுப்பொறிகள் பழுதடைந்துள்ளதைக் கருத்தில்கொண்டு பொதுமக்களுக்குக் காலதாமதமின்றி, விரைவாகச் சேவை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி ரூ.1.13 கோடி செலவில் புதிய அச்சுப் பொறிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. போக்குவரத்துத் துறையில் உள்ள ஒரு சரக அலுவலகம் மற்றும் பல்வேறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு UPS வழங்குதல் (Purchase of UPS to one Zonal Office and various Regional Transport Offices in Transport Department):**

போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவு, அனுமதிச் சீட்டு, வரி மற்றும் இணக்கக் கட்டணம் வசூலித்தல் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் கணினி மற்றும் மின்னாளுமையின்மூலம் மேற்கொள்ளப்படுவதால் போக்குவரத்துத் துறையில் உள்ள ஒரு சரக அலுவலகம் மற்றும் பல்வேறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி ரூ.94.39 இலட்சங்கள் செலவில் 40 UPS வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. சென்னை (வட கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகங்களான கும்மிடிப்பூண்டி, பண்ருட்டி, செஞ்சி, ஆம்பூர், இலுப்பூர், திருத்துறைப்பூண்டி, இலால்குடி, அரவக்குறிச்சி மற்றும் வால்பாறை ஆகிய மொத்தம் பத்து அலுவலகங்களுக்கு புதியதாக ஜீப்புகள் வழங்குதல் (Purchase of 10 Jeeps for Regional Transport office Chennai (North–East) and Unit office at Gummidipoondi, Panruti, Gingee, Ambur, Iluppur, Thiruthuraipoondi, Lalgudi, Aravakurichi and Valparai)**



வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகங்களுக்குச் செயலாக்கப் பணி, களப்பணி, வரி வசூல் மற்றும் அன்றாடம் வசூலிக்கப்படும் அரசு வருவாயை அன்றையதினமே கருவூல வங்கியில் செலுத்துவதற்கு வாகன வசதி வழங்க வேண்டியதன் அவசியத்தைக் கருதி, ஏற்கெனவே இயங்கிவரும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது சென்னை (வட கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் 2013–2014 ஆம் ஆண்டில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட கும்மிடிப்பூண்டி, பண்ருட்டி, செஞ்சி, ஆம்பூர், இலுப்பூர், திருத்துறைப்பூண்டி, இலால்குடி, அரவக்குறிச்சி மற்றும் வால்பாறை ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி ரூ.70.36 இலட்சம் மதிப்பீட்டில் பத்து புதிய ஜீப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. போக்குவரத்துத் துறையில் உள்ள பல்வேறு பகுதி அலுவலகங்களுக்கு UPS வழங்குதல் (Purchase of UPS to various Unit offices in Transport Department)**

போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவு, அனுமதிச் சீட்டு, வரி மற்றும் இணக்கக் கட்டணம் வசூலித்தல் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் கணினி மற்றும் மின்னாளுமையின்மூலம் மேற்கொள்ளப்படுவதால் போக்குவரத்துத் துறையில் உள்ள பல்வேறு பகுதி அலுவலகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி ரூ.29.01 இலட்சம் செலவில் 24 UPS வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. போக்குவரத்துத் துறையில் 79 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 58 பகுதி அலுவலகங்களுக்கு Bar Code Scanner வழங்குதல் (Supply of Bar Code Scanners for 79 Regional Transport offices and 58 Unit offices)**

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2014 ஜூலை 23

போக்குவரத்துத் துறையில் வாகன விற்பனையாளரிடமிருந்து புதிய வாகனப் பதிவிற்காக பெறப்படும் விண்ணப்பங்களின் விவரங்களான வாகன அடிச்சட்ட எண், பொறி எண் ஆகியவற்றை கணினியில் பதிவு மேற்கொள்ளும்பொழுது ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்துத் துறையில் இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் Bar Code Scanner மூலம் புதிய வாகனப் பதிவு விண்ணப்பங்களைக் கையாளுவது அவசியமாகிறது.

ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, ரூ.20.55 இலட்சம் செலவில், போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் மற்றும் பகுதி அலுவகங்களுக்கும் Bar Code Scanner வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## போக்குவரத்துத் துறை

### 1. புதிய பணிமனைகள்

நீண்டகால பயனை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் பல்வேறு வகையான பயணிகளுக்குச் சேவை செய்யும் பொருட்டும், அதிகரித்துவரும் பேருந்துகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதிதாக 7 பணிமனைகள் பவானி, இராஜபாளையம்–2, ஓரிக்கை–2, கீரனூர், மணமேல்குடி, தாமரைப்பாக்கம் மற்றும் திருமயம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### 2. தகுதிச் சான்று புதுப்பிக்கும் பிரிவுகளை விரிவுபடுத்துதல்

பேருந்துகளின் பொலிவை மேம்படுத்தவும், தொழில் திறனை அதிகரிக்கவும், புதிய தொழிற்கூடங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தண்டையார்பேட்டை, அயனாவரம் ஆகிய இடங்களில் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பிரிவுகளையும், புதுக்கோட்டையில் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவையும் ரூ.3 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.



2014 ஜூலை 23] [திரு. வி. செந்தில்பாலாஜி]

### 3. மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான கூடுதல் சிறப்புப் பேருந்துகள்

தற்போது பணிக்குச் செல்லும் மகளிர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு, பாதுகாப்பாகப் பயணம் செய்யும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை மாநகரில் தற்போது இயக்கப்பட்டுவரும் மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான பேருந்துகளின் எண்ணிக்கை 200–லிருந்து 250ஆக உயர்த்தி இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### 4. தொழில்நுட்பப் பணியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய வாகனங்களை அரசு அதிக அளவில் மக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வாகனங்களை முறையாகப் பராமரிப்பதற்கும், செலவினத்தைக் குறைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ஆண்டுக்கு கூடுதல் செலவினம் ரூ.25 இலட்சங்களாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–45

### 5. குடும்ப இலவச பயணச் சலுகை

தொழிலாளர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும்பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பணியிலிருக்கும் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டுவரும் குடும்ப இலவசப் பயணச் சலுகை 4,500 கிலோ மீட்டரிலிருந்து 5,000 கிலோ மீட்டராக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### 6. 200 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் அமைத்தல்

தொழிலாளர்களின் நலன் கருதி, பாதுகாப்பான குடிநீர் வழங்கும்பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 200 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், பணிமனை மற்றும் தொழிற்கூடங்களில் ரூபாய் 3 கோடி செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. திருமண முன்பணம் உயர்த்தி வழங்குதல்**

தொழிலாளர்களின் மகள் மற்றும் மகன் திருமணத்திற்குத் தற்போது முறையே ரூபாய் 30 ஆயிரம்/ரூபாய் 20 ஆயிரம் திருமண முன்பணமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது உயர்ந்து வரும் திருமணச் செலவுகளைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, திருமண முன்பணத் தொகை, முறையே ரூபாய் 40 ஆயிரம்/ ரூபாய் 30 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**8. ஈமச்சடங்குகளுக்கான உதவித் தொகை உயர்த்தி வழங்குதல்**

தற்போது தொழிலாளர்களின் ஈமச்சடங்கு செலவுகளுக்காக வழங்கப்பட்டுவரும் ரூபாய் 2,000–ஐ மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 3,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்ற சீரிய திட்டங்களையும், அந்தத் திட்டங்களால் போக்குவரத்துத் துறை வளர்ச்சி அடைந்துள்ளதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆசியோடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனநிறைவைத் தருமென்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்துக் கொண்டு, நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை உயர்வால் போக்குவரத்துக் கழகங்களுக்கு



ஏற்படும் கூடுதல் நிதிச் சுமையைக் குறைத்திட டீசலில் எத்தனால் கலந்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதைப்போல என்னுடைய தொகுதியில் காளையார்கோவிலில் புதிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், ஒரு கேள்விதான் கேட்கலாம். நீங்கள் உட்காருங்கள். நிறையப் பேர் கேட்க விரும்புகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரங்களில் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்படுகிறது. அதேசமயத்தில் பெட்ரோல் விலையும் அடிக்கடி உயர்ந்து கொண்டிருக்கிறது. இதன்காரணமாக பொதுமக்களுக்கும் ஆட்டோ தொழிலாளர்களுக்குமிடையே சில பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பெட்ரோல் விலை உயர்விற்கேற்ப மூன்று மாதத்திற்கோ, 6 மாதத்திற்கோ ஒருமுறை ஆட்டோ கட்டணத்தை மீட்டரில் உயர்த்துவதற்கு அல்லது அதுசம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசுவதற்கு முத்தரப்புக் குழுவை தாங்கள் அமைப்பதற்கு முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலத்தில் நாகப்பட்டினம், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் இருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் பெரிய மாவட்டம். இதுவும் இந்தக் கோட்டத்தின்கீழே வருகிறது. இராமநாதபுரத்திலே போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு மண்டல அலுவலகம் அமைக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று வினவ விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆண்டுகளில் கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு

இயங்கிக் கொண்டிருந்த 23 ஒப்பந்தப் பேருந்துகளுக்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, அவர் அதற்குப் பதிலாக ஒரு கிலோ மீட்டருக்கு 42 பைசா என்று தமிழக அரசின் பேருந்துகள் அந்த வழித்தடங்களில் இயக்கப்படும் என்று உறுதி அளித்தார். இதுநாள் வரை அந்தப் பேருந்துகள் அந்த வழித்தடங்களில் இயக்கப்படவில்லை. அதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தொடர்ந்து அந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். விரைவில் அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலே இயங்கிக் கொண்டிருக்கிற அனைத்துப் பேருந்துகளிலும் திருவள்ளுவர் படம் மாட்டுவது என்பது ஒரு மரபாக இருக்கிறது. ஆனால், திருவள்ளுவர் படம் என்பது நம்முடைய பேரவையிலே இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்தப் படம்தான் 50 ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்ட படம். மிகச் சரியாக, அரை நூற்றாண்டுக்கு முன்பு பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், அன்றைக்கு முதல்வராக இருந்த பெரியவர் பக்தவத்சலம், பாவேந்தர் பாரதிதாசன், இவர்களெல்லாம் இப்படி ஆகத்தான் இருந்திருக்க முடியும். திருவள்ளுவர் படமாக இருந்திருக்க முடியும். உருவமாக இப்படித்தான் இருந்திருக்க முடியும் என்று அங்கீகரித்து வைக்கப்பட்ட அந்தப் படத்தைத்தான் அங்கீகரிக்கப்பட்ட படம் என்று நாம் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் வைத்திருந்தோம். கடந்த காலங்களிலே அதை வேண்டுமென்றே சிலர் மாற்றி கன்னியாகுமரியிலே இருக்கின்ற அந்தத் திருவள்ளுவர் சிலையைப் போல, ஒரு படத்தை மாட்டுவதை வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவை தான் அரசு அங்கீகாரம் பெற்ற படம் என்று வலியுறுத்தப்பட்டு அரை நூற்றாண்டுகாலமாக இருக்கிற அங்கீகரிக்கப்பட்ட படத்தை மீண்டும் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் வைப்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.



பிற்பகல் 2–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய வழித்தடங்கள் உட்பட எங்கெல்லாம் பேருந்து வசதிகள் வேண்டுமோ, அங்கெல்லாம் முழுமையாக இப்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களைச் சுட்டிக்காட்டினால், அத்தடங்களை ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அனைத்து கருத்துகளும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.192,38,61,000/–

மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.65,84,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.907,82,17,000/–, மூலதனக் கணக்கில் ரூ.200,15,07,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–7–2014) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

88. 2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

89. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

158. மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014–2015. (தமிழ், ஆங்கிலம்)

159. மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014–2015. (தமிழ், ஆங்கிலம்)

160. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014–2015. (தமிழ்)

161. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2013–2014)

*162.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. *(2013–2014)*

*163.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*164.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. *(2013–2014)*

*165.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2013–2014)*

*166.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. *(2013–2014)*

*167.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. *(2013–2014)*

*168.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. *(2013–2014)*

*169.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2013–2014)*

*170.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. *(2013–2014)*

*171.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*172.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. *(2013–2014)*

*173.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*174.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது அறிக்கை. *(2013–2014)*

*175.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2013–2014)*

— — — —